
கல்கி

KALKI 31.12.89 ரூ. 2.50



குழந்தைகளுக்கும் உரிமைகள் உண்டு!


கல்கி
உங்கள் எண்ணங்களைப்
பிரதிபலிக்கும் பத்திரிகை

“செத்துப் பிழைத்ததைச் சொல்கிறேன்!”



• நாகலிங்கம்

கடந்த நவம்பர் எட்டாம் தேதி நெல்லூர் கடற்கரைப் பகுதியில் அடித்த புயலில், சென்னையைச் சேர்ந்த ஐந்து மீன் பிடிக்கும் படகுகள் சிக்கிக் கொண்டன. அவற்றில் இருந்த 31 மீனவர்களில் ஆறு பேர் மட்டுமே ஆச்சரியமான முறையில் உயிர் பிழைத்துக் கரை ஏறினார்கள். அந்த ஆறு பேரில் ஒருவர் நாகலிங்கம்...

பெரிய மோட்டார் படகு அது. நாங்கள் மொத்தம் ஆறு பேர். அரிசி, மசாலா, ஐஸ் கட்டிகள் போன்றவற்றைப் படகுக்குள் வைத்தபோது நள்ளிரவு. காலை மூன்று மணி சுமாருக்குப் புதுச்சட்டியில் கற்பூரம் கொளுத்திப் படகைச் சுற்றி வந்து, கற்பூரத்தையும், சட்டியையும் கடலில் விட்டெறிந்தோம். எல்லோரும் சாமி கும்பிட்டோம். படகு கிளம்பியது.

அதிகாலைக் காற்று, சில்லென்று எங்கள் முகத்தைத் தாக்கி, எங்களுக்குப் புத்துணர் ஊட்டியது. அலைகளில் சீற்றம் எதுவும் இல்லை.

‘சென்னைக்கு வடக்குப் பக்கமாக — ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த இஸ்கா பள்ளி கடற்பகுதிக்கு விரைந்தோம். நல்ல மீன்கள் கிடைக்கும் என்பதால் உற்சாகத்தோடு சென்றோம். படகிலேயே சமைத்துச் சாம்பார் சாதம் சாப்பிட்டோம். டேப்ரிகார்டரில் பாட்டுக் கேட்டோம். தேர்தலைப் பற்றியும், எங்கள் குடும்பங்களைப் பற்றியும் பேசிக் கொண்டே எட்டுக் கூடை அளவுக்கு மீன் பிடித்து விட்டோம்!

நாங்கள் கிளம்பிய தினத்துக்கு மறுநாள் மாலை கேபின் தூணைப் பிடித்துக் கொண்டிருந்த நான், படகின் ஒரு குலுக்கலில் கீழே சாய்ந்தேன். படகின் ஆட்டம் வித்தியாசமாக இருந்தது. பன்னிரண்டு வயதிலிருந்தே கட்டுமரத்திலும், படகுகளிலும் கடலுக்குச் சென்று வருவதால், ஆபத்து நெருங்குவதை நான் உடனே புரிந்து கொண்டேன். நான் நினைத்ததையே என் சகாக்களும் சொன்னார்கள். உடனே கரைக்குத் திரும்பத் தீர்மானித்தோம். சென்னையிலிருந்து கடலுக்குள் கிட்டத்தட்ட 250 கி. மீ. தூரத்தில் நாங்கள் இருந்தோம். அருகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ராயபுரத்தைச் சேர்ந்த நான்கு படகுகளையும் எச்சரித்துவிட்டு வேகமாகச் சென்னைக்குத் திரும்ப ஆரம்பித்தோம்.

சுமார் இரண்டு மணி நேரம் சென்று டிரைவரால் படகைக்கட்டுப்படுத்தமுடியவில்லை. ‘உய்ங்... உய்ங்...’ என்று அடித்த புயல் காற்று, காதைக் கிழித்துக் கொண்டு சென்றது. அலைகள் பனைமர உயரத்துக்கு மேல் எழும்பி, எங்களை நனைத்தன. மழை கொட்டோ கொட்டென்று கொட்டியது.

‘சரி, நாம் தொலைந்தோம்’ என்று எல்லோரும் தீர்மானித்து விட்டோம். கடவுளை வேண்டிக் கொள்வது தவிர, வேறு எதுவும் எங்களுக்குத் தோன்றவில்லை. நாங்கள் பயந்தபடியே ஓர் அலை வீச்சில் எங்கள்

காலண்டரைப் பத்திரப்படுத்துங்கள்!

எதிர்ப் பக்கத்திலுள்ள இரண்டாவது அட்டையிலும், அதன் தொடர்ச்சியாக மூன்றாவது அட்டையிலும் 1990 — ஆம் ஆண்டின் வண்ணப்படக் காலண்டர் அச்சாகியுள்ளது. நடுப்பக்கத்திலுள்ள பின்களைக் கவனமாகப் பிரித்துக் காலண்டரைத் தனியாக எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

— ஆர்.

பலியான மீனவர்களும், அரசின் அலட்சியமும்!



கவிழ்ந்து போன ஐந்து படகுகளில், ஒன்றின் உரிமையாளரான சுதர்ஸன் சொல்கிறார்:

ஆறாம் தேதியன்று எழுபது படகுகள் கடலுக்குச் சென்றன. ஆனால் திரும்பியவை 65 படகுகள்தான். ஏழாம் தேதி மாலையே ரேடியோவில் வீசவிருக்கும் புயலைப் பற்றிச் சொன்னவுடன், ராயபுரத்திலிருந்த மீன்துறை உதவி இயக்குனரிடம் விவரத்தைக் கூறினோம். ''ஹெலிகாப்டர் எல்லாம் வைத்துத் தேட வேண்டும் என்றால், கோஸ்ட் கார்டுதான் செய்யவேண்டும்என்று ஒதுங்கிக்கொண்டார்கள். எங்களுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அவர்களே கோஸ்ட் கார்டை அழைத்து எங்களுக்கு உதவியிருக்கக் கூடாதா? ஜீப் எடுத்துக் கொண்டு நெல்லூர் கடற்கரைப் பகுதியில் நாங்கள் தேடியதன் விளைவாக, நாகலிங்கம்தவிர, வேறு ஐந்துபேர்களைக் கண்டுபிடித்து ஆஸ்பத்திரியில் சேர்த்தோம். எங்களுடைய தேடல்களில் மீன்துறையின் பங்கு பூஜ்ஜியம் என்று கூறிக் கொள்வதற்கு மிகவும் வருந்துகிறேன். மந்திரிகளும், மற்ற அரசியல்வாதிகளும், அப்போது பாராளுமன்றத் தேர்தலில் மிகவும் பிஸியாக இருந்ததால் எங்கள் வேதனைக் குரல் அவர்கள் காதுக்கு எட்டவேயில்லை. லோக்கல் எம். எல். ஏ. கூட எங்களைக் கண்டு கொள்ளவில்லை.

படகு கடலில் கவிழ்ந்தது. படகுக்கு அடியில் நாங்கள் இருந்தோம்!

தட்டுத் தடுமாறித் தண்ணீருக்கு மேலே நான் வந்தேன். 'என்னைக் காப்பாத்து!' என்று குரல் வந்தது. பார்த்தால் 'படகில் என்னுடன் வந்த என் மாமா ஏழுமலை. வேறு எவருடைய குரலாவது கேட்கிறதா என்று உற்றுக் கேட்டேன். ஒரு குரலும் எழவில்லை. கையைக் காலை ஆட்டி ஏதாவது பிடித்துக் கொள்ளக் கிடைக்கிறதா என்று பார்த்தேன். 'என் அதிர்ஷ்டம், மூன்றடி நீளமும், இரண்டடி அகலமும் கொண்ட பலகை ஒன்று கையில் கிடைத்தது!

தட்டுத் தடுமாறி என் அருகே வந்த என் மாமா ஏழுமலை பலகையின் அந்தப் பக்கத்தையும், நான் இந்தப் பக்கத்தையுமாகப் பிடித்துக் கொண்டோம்.

அலைகள் எங்களை ஃபுட்பால் ஆடின. படகோடு கவிழ்ந்ததால் எங்கள் உடல் முழுக்கக் காயம். அவற்றில் உப்புத் தண்ணீர் பட்டு ஒரே எரிச்சல். அந்த நிலையிலும் ஒரே ஆறுதல், வானத்திலிருந்து மழை பெய்து எங்களது நா வறட்சியைப் போக்கியதுதான்! பலகைக்கு மேலே தலையை வைத்துக் கொண்டு, வாயைத் திறந்து வைத்துக் கொண்டே மழைத் தண்ணீரைத் துளித் துளியாகக் குடித்தோம். நீந்தவும் செய்தோம்.

நேரம் ஆக, ஆகக் காற்றின் வேகம் குறைந்தது. அலைகளின் ஆர்ப்பரிப்பும் சற்று அடங்கியது. வானம் விடிவதற்குத் தயாராவது தெரிந்தது. இதற்குள் எங்கள் இருவருக்கும் நீந்த முடியாத அளவுக்கு உடல் களைத்துப் போய்விட்டது. கைவிரல்கள் அடிக்கடி, மரக்கட்டையிலிருந்து நழுவின. உடல் முழுக்க வீங்க ஆரம்பித்தது.

பசி வயிற்றைக் கிள்ளியது. மழையும் நின்று விடவே, வேறு வழியில்லாமல் பசிக்குக் கடல் தண்ணீரைக் குடிக்கத் தொடங்கினோம்.

ஒரு வழியாகச் சூரியன் லேசாகத் தன் முகத்தைக் காட்டினான். சூரியனுக்கு எதிர்ப்புறம்தான் கரை. எனவே, உடம்பில் மீதமிருந்த அத்தனை பலத்தையும் தேக்கி வைத்து நீந்தினோம். எத்தனை நேரம் அப்படி நீந்தியிருப்போம் என்று கணக்குத் தெரியவில்லை. அருகில் ஒரு குரல் கேட்டது. பார்த்தால் எங்கள் சகா ரத்தினவேலு! அவனும் ஒரு பலகையைப் பிடித்துக் கொண்டு நீச்சல் அடித்துக் கொண்டு வந்தான்.

எங்களுக்கு ஏக சந்தோஷம்! பிறகு நாங்கள் பகல் முழுவதும் சோர்வு தெரியாதிருக்கப் பேசிக் கொண்டே நீந்தினோம். 'உயிர் பிழைத்தால் உங்கள் காலடிக்கு வருகிறோம்' என்று தமிழ்நாட்டிலுள்ள எல்லாச் சாமிகளையும் வேண்டிக் கொண்டோம். நேரம் செல்லச் செல்ல பசி தாங்க முடியாமல் போகவே, மீனைப் பிடித்துப் பச்சையாகச் சாப்பிடவும் தயாரானோம். ஆனால் ஒரு

மீனும் சிக்கவில்லை. சிறிது நேரத்துக்குப் பின்னர், ஒரு மீன் வந்தது. அதைப் பிடித்தும் விட்டோம். ஆவலுடன் சாப்பிடலாம் என்று வாயருகே கொண்டு போனால் ஒரே அழுகல் நாற்றம்! அது செத்த மீன்! வேறு வழியில்லாமல் பட்டினியே தொடர்ந்தது.

மாலை சுமார் நான்கு மணி இருக்கலாம். ரத்தினவேலுவிடம் — அவன் கொஞ்சம் தெம்பாக இருந்ததால் வேகமாகக் கரை நோக்கிச் சென்று கட்டுமரம், படகு ஏதாவது தென்பட்டால் அழைத்து வருமாறு சொல்லி அனுப்பி வைத்தோம். அவன் எங்களைப் பிரிந்தான்.

அதற்கப்புறம் பலகையின் மீது தலையை வைத்துக் கொண்டு சாய்ந்தேன். என் மனைவி இந்திராவின் முகம், என் மனத்துக்குள் தோன்றிக் கவலையுறச் செய்தது. கல்யாணமாகி இரண்டே மாதம்தான் ஆகியிருந்தது. அவளோடு, என் அம்மா, அப்பா, அண்ணன், என்று ஒவ்வொருவராக மனத்திரையில் வந்து சென்று கொண்டேயிருந்தார்கள்.

திடீரென்று ஏதோ சலசலப்புச் சத்தம் கேட்கவே, லேசாகக் கண்களைத் திறந்து பார்த்தேன். நூறடி தூரத்தில் ஒரு கட்டுமரம் சென்று கொண்டிருந்தது. கடல், நிலத்தில் உள்வாங்கியிருக்கும் பகுதியில் நான் மிதந்து கொண்டிருப்பது புரிந்தது. லேசாக இருள் கவியத் துவங்கிய நேரம். திடீரென்று மாமாவின் நினைவு வரப் பலகையின் அந்தப் பக்கத்தைப் பார்த்தேன். என் மாமா ஏழுமலையைக் காணோம். என்னால் அப்போது அழக்கூட முடியவில்லை. ஒருபுறம் துக்கத்தோடும், மறுபுறம் உயிர் பிழைக்கும் ஆர்வத்தோடும் கையை ஆட்டிக் கட்டுமரத்தை நோக்கிப் பல சைகைகள் செய்தேன். கட்டுமரம் என்னை நோக்கி வந்தது.

அந்த மீனவக் கிராமத்தின் மக்கள், நெருப்பைக் காட்டி, என் உடம்பைச் சூடுபடுத்தினார்கள். நான் ஒதுங்கிய கிராமத்தின் பெயர் முத்துக்கூர். அவர்கள் என்னை நெல்லூர் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். இரண்டு பகல், இரண்டு இரவுகள் உப்புத் தண்ணீரில் ஊறியதால் என் உடம்பு இரண்டு மடங்காக வீங்கிவிட்டது. பழைய நிலைக்கு வருவதற்கு இருபது நாட்கள் பிடித்தன. டாக்டர் டியூபை வயிற்றுக்குள் இறக்கிக் கடல் தண்ணீரை வெளியே எடுத்தார். எப்படியோ நான் பிழைத்து விட்டேன்; ஆனால் பாவம், என் மாமா ஏழுமலை கடைசியில் பிணமாகத்தான் கரைக்கு வந்து சேர்ந்தார்.

சந்திப்பு: **கௌசல்யா**

படங்கள்: **ராஜன்**



"மந்திரிசபைப் பதவி ஏற்பு விழாவை ஸ்டேடியத்தில் செய்யறாங்களே... ஏன்?"

"ஆட்சி அமைக்கிறதையே இப்பவெல்லாம் விளையாட்டாத்தானே எடுத்துக்கிறாங்க.... அதான்..."

— ராஜி ராதா.



மன்னர்: "ஆகா! அற்புதமான செய்தி கொண்டு வந்தாய், சேவகா! அண்டை நாட்டு மன்னன் சரணடைந்து விட்டானா?"

சேவகன்: "ஆம், அரசே! நம் இளவரசியிடம்!"

— ஆம்பூர். பரந்தாமன்.



"உங்ககிட்டே சிறுகதை கேட்டது வாஸ்தவம்தான்... அதுக்காக நூறு பக்கங்களில் சிறுகதையை எழுதிக்கிட்டு வரணுமா?"

"இது வெறும் 'அவுட் லைன்'தான் சார். நீங்க ஓ. கே. பண்ணிட்டால் கதையை எழுத ஆரம்பிச்சுடுவேன்!"

— ஞா. ஞானமுத்து.

குழந்தைகளுக்கும் உரிமைகள் உண்டு!



உரிமைகள் பெரியவர்களுக்கு மட்டும்தான் என்பதில்லை. குழந்தைகளுக்கும் உண்டு. யூனிசெஃப் நிறுவனத்தின் தென்னிந்திய அலுவலகம், அண்மையில் குழந்தைகளின் உரிமைகள் பற்றிய கருத்தரங்கம் ஒன்றைச் சென்னையில் நடத்தியது.

'உலகம் அனைத்தும் குழந்தையை நேசிக்கிறது' என்று ஒரு பழமொழி. உண்மை நிலை மிகவும் வேறுபட்டிருக்கிறது. தினமும் ஒவ்வொரு நாட்டிலும் குழந்தைகள் அடித்துச் சித்திரவதை செய்யப்படுகிறார்கள்; தொழிற் சாலைகளில் கடுமையாய் வேலை வாங்கப்படுகிறார்கள்; பெற்றோர்களால் கைவிடப்படுகிறார்கள்; கடத்திச் செல்லப்படுகிறார்கள்; பிச்சையெடுக்க வைக்கப்படுகிறார்கள்; விற்பனை செய்யப்படுகிறார்கள். இன்னும் எத்தனை, எத்தனையோ கொடுமைகள் குழந்தைகளுக்கு இழைக்கப்படுகின்றன.

இத்தகைய கொடுமைகள் ஒருபுறமிருக்க, ஆண்டுதோறும், பட்டினி மற்றும் நோய்கள் காரணமாக மடியும் குழந்தைகளின் எண்ணிக்கை, கிட்டத்தட்ட ஒரு கோடியே நாற்பது லட்சம் என்கிறது ஐ.நா. சபையின் ஓர் அறிக்கை. இன்னும் பல லட்சக்கணக்கான குழந்தைகள் உடல் வளர்ச்சியும், மன வளர்ச்சியும் குன்றிய நிலையில் துன்பப்படுகிறார்கள்.

இந்த அபாயங்களுக்கு எதிரான ஒரு விழிப்புணர்ச்சி, சமீப காலமாய் உலக நாடுகளின் தலைவர்களிடையே ஏற்பட்டுள்ளது. இதன் விளைவுதான் 'வளரும் தலைமுறையின் உடல்நலத்தையும், மன நலத்தையும், வாழ்க்கையையும் பாதுகாப்பது, நமது முதல் கடமையாக இருக்க வேண்டும் என்கிற எழுச்சி. ஐக்கிய நாடுகள் சபையும் குழந்தைகளுக்கு உரிய உரிமைகளை வலியுறுத்தும் ஆண்டாக 1990ஐ அறிவித்துள்ளது.

குழந்தைகளின் நலனைக் கவனிப்பதற்கென்றே ஐ. நா. சபையின் ஓர் அங்கமாக "யூனிஸெஃப்"என்ற அமைப்பு நீண்ட காலமாக இயங்கி வருகிறது. இது முக்கியமாக மூன்று உரிமைகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. இவற்றைத் தனித்தனியே கவனிப்போம்.

வாழும் உரிமை:

'தினமும், உலகம் முழுவதும் தடுப்பூசி போடாததால் சுமார் எட்டாயிரம் குழந்தைகள் மாண்டு போகின்றன. அது போல, வயிற்றுப்போக்கும், நிமோனியாவும் தினமும் சுமார் பன்னிரெண்டாயிரம் குழந்தைகளைப் பலி வாங்குகின்றன. இவற்றை முற்றிலுமாய்த் தடுக்க வேண்டுமென்றால் ஆண்டுக்கு இருநூற்றைம்பது கோடி டாலர் செலவாகும். 'அடேயப்பா! இது ஒரு பெரும் தொகை அல்லவா!' என்கிற வாதம் எழலாம். ஆனால் இந்த இருநூற்றைம்பது கோடி என்பது ரஷ்யாவில் வோட்கா மதுவுக்குச் செலவாகும் தொகை; அல்லது அமெரிக்க சிகரெட் கம்பெனிகள் விளம்பரங்களுக்குச் செலவிடும் தொகையில் பத்து சதவீதம் தான்! வளரும் நாடுகள் ராணுவச் செலவுகளை அதிகரித்துக் கொள்வதற்குப் பதில் அண்டை நாடுகளுடன் சமாதானத்தை வளர்த்துக் கொண்டால் இந்த 250 கோடி ஒரு பெரிய விஷயமே அல்ல.



* பள்ளிகளில் சேரும் குழந்தைகளின் சதவீதம் குறைந்து கொண்டே வருகிறது...

தமிழகத்தில் நிலைமை எப்படி உள்ளது?

"ஊட்டச்சத்துக் குறைவு மற்றும் பல் வேறு நோய்கள் காரணமாக 1970ல் ஆயிரத்துக்கு 125 என்றிருந்த சிசு மரணம், 1988ல் எண்பதாய்க் குறைந்திருக்கிறது. ஆனாலும், தமிழ் நாட்டுக் குழந்தைகளில் நாற்பது சதவீதத்தினர் போதிய அளவு உடல் வளர்ச்சி பெறவில்லை என்பது கவனத்துக்குரியது" என்கிறார் தமிழ் நாடு சமூகநல இயக்ககத்தின் கூடுதல் இயக்குனரான திருமதி. ஜெயஸ்ரீ பாலசந்தர்.

குழந்தைகளை நோயிலிருந்து காப்பாற்றுவது ஒருபுறமிருக்கட்டும்; தமிழ் நாட்டின் சில ஊர்களில் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு நெல், எருக்கம் பால் ஆகியவற்றின் மூலம், பெற்றவர்களே எமனாகி விடும் கொடுமையை என்னவென்று சொல்ல? சிவசங்கரி கூறுகிறார்: "இதுபோல் குழந்தையைக் கொன்ற தாய் ஒருத்தியை நான் சந்தித்துக் காரணம் கேட்ட போது, 'இன்னும் பதினைந்து வருஷம் கழித்து, நானும், அதுவும் படப் போகும் கஷ்டத்தை நினைச்சா இது ஒண்ணுமே இல்லைம்மா!' என்றாள். ஆக, வேரில் பூச்சியை வைத்துக் கொண்டு, இலைக்கு மருந்து அடித்து என்ன பிரயோஜனம்?"

கல்வி, கருத்துச் சுதந்திரம்:

உலகின் பத்துக் கோடி குழந்தைகளில் நான்கு கோடிப் பேர், தொடக்க நிலைக் கல்வியை முடிக்கு முன்னரே படிப்பை நிறுத்தி விடுகிறார்கள். கல்விக்கெனப் பல



மேட்டுப்பாளையம் — பெயர் வரக் காரணம்?

கல்கி, 5.11.89 இதழில் மேட்டுப்பாளையம் பற்றிய கட்டுரையின் இறுதியில் இரு கேள்விகளை எழுப்பி, மேட்டுப்பாளையம் வாசிகளின் விளக்கத்தைக் கோரியிருந்தோம். இவற்றுக்குச் சரியான விடைகளை யாரும் எழுதவில்லை. ரா. பி. சேதுப்பிள்ளை எழுதிய 'ஊரும் பெயரும்' புத்தகத்தில், மேட்டுப்பாளையம் என்ற பெயர் வரக் காரணம் குறிப்பிடப்பட்டிருப்பதை சென்னை சி. சுந்தரராமன் எழுதியுள்ளார்:

''மேடான பகுதியில் அமைந்திருந்ததாலும் பாளையக்காரர்கள் ஆண்டு வந்ததாலும் மேட்டுப்பாளையம் எனப் பெயர் பெற்றது.''

முன்னாள் மேட்டுப்பாளையம் வாசியான சுந்தரராமனுக்குப் பரிசு ரூபாய் இருபத்தைந்து அனுப்பி வைக்கப்படுகிறது. விலாசம்: சி. சுந்தரராமன், 'D' ஃபிளேட், ஸ்ரீ குடியிருப்பு, 27 D, காமராஜர் அவென்யு முதல் தெரு, சென்னை — 20.

நாடுகளிலும் ஒதுக்கப்படும் தொகையே குறைவு என்பது ஒருபுறமிருக்க, அந்தக் குறைந்த ஒதுக்கீட்டிலும் பெரும்பகுதி ஆசிரியர் சம்பளம் போன்ற செலவுகளுக்கே போய் விடுவதால், கரும்பலகை போன்ற அத்தியாவசியப் பொருட்கள் கூட இல்லாத நிலை, பள்ளிகளில் நிலவுகிறது. இலவசக் கல்வி அளிக்கப்பட்ட போதிலும், குழந்தைகள் வேலைக்குப் போவதால் கிடைக்கக்கூடிய வருவாயைப் பெற்றோர் இழந்து விடுவதால் அவர்களைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்புவதில்லை. குழந்தைகளைப் பள்ளிக்கு வரவழைக்கும் உபாயமாகச் சத்துணவுத் திட்டம் செயல்படுகிறது என்றாலும், முழுமையான அளவுக்குக் குழந்தைகளை இது ஈர்த்து விடுகிறது என்று சொல்ல முடியாது.

பள்ளிக் கூடங்களில், புத்தகக் கல்வி மட்டும்தான் இருக்கிறது; மன வளர்ச்சியை மேம்படுத்திப் பண்பாடுகளை வளர்க்கும்படியான கல்வித் திட்டம் இல்லை என்பது பரவலான ஒரு குற்றச்சாட்டு. இது பற்றிப் பேசும்போது, யூனிசெஃப்பின் சென்னை அலுவலக அதிகாரிகளில் ஒருவரான டாக்டர். டி. எஸ். நாராயண சாமி, ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டார்:

''குழந்தைகளுக்கு இயல்பாகவே சிந்திக்கிற திறமை உண்டு; கற்பனை சக்தியும் அதிகம். நான் பள்ளிக்கூட ஆசிரியராக இருந்த போது, ரயில்வே ஸ்டேஷன் பற்றிய பாடம் நடத்தினேன். ரயில்வே ஸ்டேஷனுக்கு மாணவர்களை அழைத்துக் கொண்டு போய்க் காட்டி விட்டு, பள்ளி திரும்பிய பின், ரயில்வே ஸ்டேஷன் விளையாட்டு விளையாடச் சொன்னேன். ஒரு பையன் டிக்கெட் கொடுத்தான்; சில மாணவர்கள் எஞ்ஜினும், பெட்டிகளுமாய்ச் சற்றுத் தூரத்தில் போய் நின்று கொண்டனர்; கொடி ஆட்டினான் ஸ்டேஷன் மாஸ்டர் பையன். எல்லாரும் பிஸியாய் ஏதேதோ செய்து கொண்டிருந்த போது, ஓரிரு மாணவர்கள், ஜாலியாய்ப் பேசிக் கொண்டு உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும், அவர்களைக் கண்டிக்கும் விதமாய், 'என்ன பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று அதட்டினேன். அவர்கள் சொன்னார்கள்: 'நாங்கள் ஏற வேண்டிய ரயில் லேட்டாக வருகிறது. அதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம்!'. நான் அசந்து போய் விட்டேன். பொதுவாக நாம் குழந்தைகளின் கற்பனை சக்தியை மதிக்காமல் நம் எண்ணங்களைத்தான் அவர்கள் மீது திணித்துக் கொண்டிருக்கிறோம்.''

கூத்தபிரான் நினைவு கூர்ந்த ஒரு சம்பவம்:

''ஒருமுறை சிறுவர் நிகழ்ச்சியொன்றில் பங்கேற்க வானொலி நிலையத்துக்கு வந்த சிறுவன் ஒருவனை, அவன் தகப்பனார் கஷ்டமான சமஸ்கிருத சுலோகம் ஒன்றைச் சொல்லுமாறு வற்புறுத்திக் கொண்டிருந்தார். அதைச் சரியாகச் சொல்ல முடியாமல் துன்பப்பட்டான் அச் சிறுவன். நான் அவரைத் தள்ளிப் போகச் சொல்லி விட்டு, சிறுவனிடம் 'உனக்கு என்ன தெரியுமோ, அதைச் சொல்லு!' என்றேன். அருமையான ஆறு தமிழ்ப் பாடல்களைப் பாடி அனைவரையும் அசத்தி விட்டான். எத்தனை பாராட்டுக் கடிதங்கள் தெரியுமா அவன் பாட்டுக்கு? இப்படித்தான் நாம் குழந்தைகளின் உரிமைகளில் அனாவசியமாய் மூக்கை நுழைத்துப் பல சமயங்களில் அவர்களின் மன வளர்ச்சியையே பாதித்துக் கொண்டிருக்கிறோம்!''

வன்முறையிலிருந்து பாதுகாப்பு!

குழந்தைத் தொழிலாளர்கள், கொத்தடிமைக் குழந்தைகள் என்று குழந்தைகளுக்குப் பலவிதமான அநீதிகள் இழைக்கப்படுவதன் காரணமென்ன?

''தொழிலாளர் அமைப்புகள், பெண்ணுரிமைச் சங்கங்கள், அரசியல் கட்சிகள் போல, குழந்தைகளின் நலனைப் பேண, உரிமைகளைப் பாதுகாக்க, இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்துப் போராட எவ்விதமான அமைப்பும் இல்லாததுதான். மிருகங்களின் நலனுக்குக் கூட S.P.C.A. இருக்கிறது. ஆனால் குழந்தைகளுக்கு?'' என்று கேட்கிறார் வழக்குரைஞர் கீதா ராமசேஷன்.

சிந்திக்க வைக்கும் நியாயமான கேள்வி!

— எஸ். சந்திரமௌலி.

அட்டை வண்ணப்படம்: ரவிசங்கரன்.

தரமான பிளைவுட்டை உங்களால் கண்டு பிடிக்க முடியுமா ?

ஃபார்மல் டிஹைட் முறையிலும், யூரியா டிஹைட் முறையிலும் பிளைவுட்கள் தயாரிக்கப்படுகின்றன. இதில் ஃபார்மல் டிஹைட் முறையில் தான் தரமான பிளைவுட்கள் தயாரிக்கப்படுகின்றன. இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

இந்திய தரக்கட்டுப்பாடு நிறுவனத்தால் (ISI) பரிந்துரை செய்யப்பட்ட தாங்கும் திறன்:

	யூரியா ஃபார்மல்(UF) டிஹைட் பிளைவுட்	பினால் ஃபார்மல்(PF) டிஹைட் பிளைவுட்
1. சாதாரணமாய்காய்ந்த நிலையில்	70 கிலோ	**135** கிலோ
2. பாசி, பூஞ்சை பிடித்த நிலையில்	35 கிலோ	**100** கிலோ
3. ஈரப்பசை இருக்கும் நிலையில்	35 கிலோ	**100** கிலோ

இப்பொழுது நீங்களே சொல்லிவிடலாம் பினால் ஃபார்மல் டிஹைட் பிளைவுட் தான் தரமானது என்று. இப்படிப்பட்ட பினால் ஃபார்மல் டிஹைட் முறையில் தான் ஷெரான் தெர்ம்பிளை உருவாக்கப்படுகின்றன; மேலும் சிறப்பான தெர்ம்பிளஸ் தொழில் நுட்பத்தின் மூலம் இவை உன்னதமாக்கப்படுகின்றன. எனவே நீடித்து உழைக்கக்கூடிய தரமான பிளைவுட்டா? நாடுவீர் ஷெரான் தெர்ம்பிளையை.

sharon Thermply

ஷெரான் வெனியர்ஸ் பிரைவேட் லிட்
93, போயஸ் கார்டன், சென்னை - 600 086.
போன் : 453620, 451141, 456218.

காலம் தான் வித்தியாசத்தை உணர்த்த முடியும்.

ASP/SV/1828

● கொதி நீரைத் தாக்குப் பிடிக்கும்
● கரையான் அரிப்பைத் தடுக்கும் ● நீண்ட காலம் உழைக்கும்

மொத்த விற்பனை ஏஜண்ட் : ● சங்கர் மெர்க்கண்டைல் கார்ப்பரேஷன், "அகர்வால் ஹவுஸ்", 74, பெருமாள் முதலி தெரு, சென்னை-79. போன் : 30032/30033 கிளைகள் : சென்னை : ● வருண் பிளைவுட், 199, டிமெல்லோஸ் ரோடு, சென்னை-112. போன் : 33582 ● பிரகாஷ் பிளைவுட்ஸ், 131, டாக்டர் நடேசன் ரோடு, சென்னை-5. போன் : 845133 ● லக்ஷ்மி பிளைவுட்ஸ், 11, ஜி.என். செட்டி ரோடு, சென்னை-6. போன் : 8251122/8252244, ● சிவ விஷ்ணு பிளைவுட்ஸ், எண். 69, ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம், சென்னை-24. போன் : 429315 ● ஸ்ரீ கிருஷ்ணா எண்டர்பிரைசஸ், 18, தேவராஜ முதலி தெரு, சென்னை-3. போன் : 560252/583845 ● கல்பனா பிளைவுட்ஸ், 253, [illegible] ரோடு, அப்பாராவ் கார்டன், சென்னை-112. போன் : 31533/31588. மதுரை : ● மோகன் எண்டர்பிரைசஸ், 179, மேற்கு மாசி தெரு, மதுரை-1. போன் : 22888 திருச்சி : ● ஸ்ரீ கணேஷ் பிளைவுட் ஏஜன்சீஸ், 4, மதுரை ரோடு, திருச்சி-8. போன் : 28114 சேலம் : ஸ்ரீ சக்தி ஏஜன்சீஸ், 7, எ.வி. ஐயர் தெரு, செவ்வாய்பேட்டை, சேலம்-2. போன் : 51550 பெங்களூர் : அன்னபூர்ணா ப்ளைவுட் ஏஜன்சி, ஆர்.ஆர். பில்டிங், இரண்டாவது மாடி, பிவிகே ஐயங்கார் ரோடு, பெங்களூர்-53. போன் : 77470. ஹைதராபாத் : ● கிருஷ்ணா பிளைவுட்ஸ், 5/3/1064, நுஷ்ரத்ஜங் தேவு ரோடு, ஹைதராபாத்-1. போன் : 556411/43934.

An appeal to Devotees of Goddess Kamakshi, Kancheepuram

As directed by His Holiness Jagadguru Sri Sankaracharya Swamigal, it has been decided to do Evening Pooja daily to Kamakshi Amman for which a Trust has been formed. The Trust is planning to enlist 365 devotees by collecting Rs. 2000/- from each so that out of the interest of Rs. 200/- the expenditure for each day's SAYARAKSHA POOJA is met. *Thus all the 365 devotees & family members will be associated with this Pooja Scheme generation after generation.* As it is proposed to enlist 365 members only, *please rush up* by forwarding your cheque/DD in favour of "SRI MATAM — SRI KANCHI KAMAKSHI AMMAN SAYARAKSHAI POOJA TRUST" to Syndicate Bank, Kancheepuram-631 501 *otherwise you may miss this* DIVINE CHANCE. DON'T MISS THIS GOLDEN OPPORTUNITY.

(Space donated by Paropakaramani S. R. Iyer, A-7, Amar Colony, New Delhi - 110 024)

While sending the draft please indicate date of pooja with full particulars

---

வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I
1) ஸாமவேத அஷ்டப்ராம்மணம் - நாகராக்ஷரம் — 3 பாகங்கள் - விலை ரூ. 220/-
2) ஸாமவேத ஸம்ஹிதா - கிரந்தாக்ஷரம் - 2 பாகங்கள் - விலை ரூ. 240/-
3) ஸாமவேத பூர்வாபர ப்ரயோகம் - கிரந்தாக்ஷரம் - விலை ரூ. 60/-

II **கிரந்தாக்ஷரத்தில் காரிகையுடன் பிரம்மஸ்ரீ முத்து ச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புக்கள்.**

1. போதாயன பூர்வாபரப்ரயோகம் (ஒரே வால்யூம்) - விலை ரூ. 75/- 2. போதாயன அபரப்ரயோகம் - விலை ரூ. 40/-, 3. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம் - விலை ரூ. 70/-, 4. ஆபஸ்தம்ப ச்ரார்த்த ப்ரயோகம் - விலை ரூ. 35/-, 5. ஆபஸ்தம்பீய ஆஹிதாக்னி - ஸம்ஸ்கார ப்ரயோகம் - விலை ரூ. 25/-, 6. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் - விலை ரூ. 65/-, 7. ஆச்வலாயன ச்ரார்த்த ப்ரயோகம் விலை ரூ. 30/- 8. கல்ப சிந்தாமணி - விலை ரூ. 40/-

III **நாகர அக்ஷரம் - பத உரையுடன் - (தமிழில்)**

1. ஸ்ரீமத் பாகவதம் - 5 volumes - 12 ஸ்கந்தங்கள் - விலை ரூ. 450/- 2. ஸுந்தர காண்டம் - விலை ரூ. 100/-, 3. நாராயணீயம் விலை ரூ. 100/-

IV 1. மனாசேச்லோக - ராமமந்த்ராசேச்லோக - விலை ரூ. 15/-, 2. ஸ்ரீ ராதா கிருஷ்ண பூஜா விதானம் ரூ. 15/-, 3. நளோதந்தம் (நைஷத காவ்யத்தின் சுருக்கம்) விலை ரூ. 15/-, 4. வேதபாட வழிமுறை (syllabus) ரிக், யஜுர் ஸாம - விலை ரூ. 10/-

V.P.P. யில் அனுப்புவதில்லை. முழுத் தொகையையும் M.O. (or) Draft மூலம் கீழே குறிப்பிட்டுள்ள மு' வரிக்கு அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம்.

பிரஸிடெண்ட் & டிரஷரர். A.V.M.S.G.D.P.S. ஸமிதி,
D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம்-612 001

பெண் புத்தி முன் புத்தி



கதாநாயகன் ராம்கி அமர்க்களமாய் ஜனரஞ்சகமாய்ச் சிலம்பம் ஆடுகிறார். தோழர்களுடன் கும்மாளியிடுகிறார். கௌதமியை அமர்க்களமாய் வம்புக்கிழுக்கிறார். உருக்கம் காட்டுகிறார்; ரோஷமாகச் சண்டை போடுகிறார். போதாதா?

அதெல்லாம் சரி. அத்தனை தூரம் கௌதமியைக் காதலித்து விட்டு எந்தவித உறுத்தலுமில்லாமல் யாரோ ஒரு பெண்ணுக்குத் தாலி கட்டப் போகிறாரே, ராம்கி, அது எப்படி? அந்தச் சமயத்தில் கௌதமி குறுக்கிட்டு, 'எனக்கு இவர் முன்னாடியே தாலி கட்டியாச்சு,' என்று தாலியை எடுத்துக் காட்டி அத்தனை பேரையும் நம்ப வைக்கிறாராம்!

இடைவேளை வரை கௌதமியின் துள்ளல் நெஞ்சத்தைக் கிள்ளுகிறது என்றால், வக்கீல் அனுப்பிய தந்தியில் அதிர்ந்து, பெற்றோரின் முடிவில் கண்ணீரில் மிதந்து, இத்தனைக்கும் நடுவில் காதலனிடம் உரசல் காட்டுவது பாந்தம். ராம்கி கவர்ச்சியுடை டிஸ்கோ சாந்தியிடம் ஒட்டிக் கொண்டு விட்டாற் போல் வெறும் பாவ்லா செய்ய, அதனால் உசுப்பப்பட்ட கௌதமி, எனக்கு மட்டும் தெரியாதா கவர்ச்சி என்று அரை குறை ஆடையில் மோதல் காட்டுவது கோசடிக்கிறது.

சுஜாதாவும், ஸ்ரீவித்யாவும் வயசான கேஸ்களாய் வந்து சென்டிமென்டையும் கண்ணீரையும் சிந்தி விட்டு வழக்கமான முத்திரை பதித்து விட்டுப் போகிறார்கள். நிற்கவில்லை.

கவுண்டமணி கூத்து தேவலாம். பெரிய வீடு சின்ன வீடு இரண்டையும் நியாயப் படுத்தி அவர் செய்யும் தடலடி இருக்கட்டும்; அந்த ஓமக்குச்சி மாஜிக்காரர் அவரைத் தலைக்குக் கீழே எலும்புக்கூடாய் விட்டு விட்டுப் போனாலும் போனார் உடம்பு முழுக்கப் போர்த்துக் கொண்டு அவர் அல்லாடுவது ரசிக்கத்தக்க கூத்து.

செந்திலுக்கு ஒட்டாத நெருக்கம் பண்ணை கவுண்டமணியிடம். அவரது முறைப் பெண்ணைக் காதலித்துப் பட்டணத்துக்குத் தள்ளிக் கொண்டு வந்து விடுகிறாராம். கடைசியில் க. மணியைச் செந்தில் தாஜாவுடன் சமாதானப்படுத்துவது வித்தியாசம்.

தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் காலத்தில் கூட இப்படி ஒரு வில்லன் இருக்க முடியாது. ஓர் அரசாங்க வக்கீல் பெண்ணை ஊர் முன்னால் அடித்து மானபங்கப்படுத்தி விட்டுப் போவதும் ஊர் ஜனங்களில் ஒரு பருக்கைக் கல்லைத் தூக்கிப் போடக் கூட ஆள் இல்லை என்று காட்டியிருப்பதும் செமைச் செவிப் பூ.

அந்தக் கிளைமாக்ஸ் ஒரே விஸிலடிச்சான் வேடிக்கை. ஐந்து நட்சத்திர ஓட்டலுக்கு அடியிலே ஓர் அண்டர் கிரவுண்டு ஜூவாம். அதிலே சிங்கம், புலி, சிறுத்தையெல்லாம் கூண்டிலே உண்டு. அவற்றைத் திறந்து விட்டுக் கதாநாயகனை மாட்ட விட்டால் என்ன? சும்மா அத்தனை மிருகங் களையும் தூக்கிப் போட்டு மிதித்துப் பந்தாடி எறிந்து விடுகிறாராக்கும் ராம்கி?

பாடல்கள் காஸெட் வால்யூ கொண்டவைதான். கிக்கடிக்க வைக்கிறார் சந்திர போஸ்

என்னமோ போங்க, பாக்ஸ் ஆஃபீஸ் வெற்றிக்கே' படம் எடுத்துக்கிட்டிருந்தா எப்படி? சினிமாக் கலையின் வெற்றிக்கு ஒரு தரமான படம் தயாரிக்கக் கூடாதா?

— பி. எஸ். எஸ்.

புதிய ஒன்பதாவது மக்களவை அமைந்து இயங்க ஆரம்பித்து விட்டது. எம்.பி.க்கள் எப்படி நமக்கு மகிழ்ச்சி அளிப்பது போல் நடந்து கொள்ள வேண்டும்; ஆனால் எவ்வாறெல்லாம் வேதனை அளிப்பது போல் நடந்து கொள்கிறார்கள்? — அலசுகிறது இந்தக் கட்டுரை.

பிரகாசித்த எம்.பி.க்களும் பரிதாபத்துக்குரிய எம்.பி.க்களும்!

இந்தியாவின் இதயம் கிராமங்களில் இருக்கலாம் — ஆனால் இந்த 'இதயம்' சரியாக இயங்கத் தேவையான உத்தரவுகளைப் பிறப்பிக்கும் மூளை டெல்லியில் தான் இருக்கிறது. அது ஆரோக்கியமாக இருந்தால்தான் நாடு முன்னேறும். அந்த மூளைக்குப் பெயர்: இந்தியப் பாராளுமன்றம்.

மக்களவை, மாநிலங்களவை என்ற இரண்டு 'அடுக்குகளைக் கொண்ட' அமைப்புத்தான் பாராளுமன்றம். மக்கள் நேரடியாக வாக்களித்துத் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் இடம்பெறும் அவையே மக்களவை. மாநிலங்களவை உறுப்பினர்களில் கணிசமானவர்கள் அந்தந்த மாநில சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள் தவிர 'இலக்கியம், விஞ்ஞானம், கலை, சமூக சேவை' போன்றவற்றில் சிறந்து விளங்குபவர்கள், அல்லது இவை பற்றிய தெளிவான பார்வை உடையவர்கள் என்று பன்னிரண்டு பேரை ஜனாதிபதி மாநிலங்களவை உறுப்பினர்களாக நியமிப்பார்.

''அரசியல் சட்டம் இப்படிச் சொன்னாலுங்கூட நடைமுறை வேறு விதமாக இருக்கிறது. மக்கள் மத்தியில் செல்வாக்கு இல்லாத, மக்களவை மூலம் எம்.பி. ஆக முடியாத சிலர், பாராளுமன்றத்திற்குள் நுழைவதற்குப் பின்புற வழியாகத்தான் 'நியமன எம்.பி.' முறை பயன்படுகிறது'' என்று வருத்தத்துடன் கூறுகிறார், தமிழக ஜனதா தளக் கட்சியின் பொதுச் செயலாளர் கலிவரதன்.

மக்களவை உறுப்பினரோ, மாநிலங்களவை உறுப்பினரோ ஒரு நிஜமான எம்.பி. எப்படி இயங்க வேண்டும்....?

சுருக்கமாகப் பதில் சொல்வதென்றால் ஒரு ஜோதிர்மாய் பாசுவைப் போல, ஒரு பூபேஷ் குப்தா போல, ஒரு உன்னி கிருஷ்ணனைப் போல... பேராசிரியர் ரங்கா, மது தண்டவதே, குருபாதசாமி, மதுலிமாயி, நாத்பாய், செழியன், கே.டி.கே. தங்கமணி, பார்வதி கிருஷ்ணன், ஆரம்ப கால நாஞ்சில் மனோகரன் — ஆகியவர்களைப் போல இருக்க வேண்டும் எனலாம். பின்பற்ற விரும்புவோருக்கு முன்னுதாரணங்கள் நிறையவே உள்ளன. ஆனால் பெரும்பாலான எம். பி.க்கள் 'தேர்தல்' செலவுகள் என்கிற பூர்வாங்க விஷயத்திலேயே அரசியல் சட்டத்தை மிதித்து விட்டுத்தான் ஜெயித்து வருகிறார்கள், இப்படிப்பட்டவர்கள் அரசியல் சட்டத்தின் பெயரால் எடுத்துக் கொள்ளும் உறுதிமொழிகள் உதட்டளவில் மட்டுமே இருப்பதில் ஆச்சர்யமில்லை!

ஜோதிர்மாய்பாசு 'பொதுத் துறை நிறுவனங்களுக்கான, எம்.பி.க்கள் குழுவின் தலைவராக இருந்த போது அவருடைய மகன் ஒருமுறை விமானப் பயணம் மேற்கொண்டார். 'பாசுஜியின் பையனா' என்று அவரை இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தில் இலவசமாகவே ஏற்றிக் கொண்டு போயிருக்கிறார்கள்.

பாசு தம் மகன் மூலமாக விவரத்தைத் தெரிந்து கொண்டதும் அடுத்த முறை பாராளுமன்றம் கூடிய போது, ''எந்த அடிப்படையில் என் மகனுக்கு இலவச விமானப் பயணம் அனுமதிக்கப்பட்டது?'' என்று கேள்வி எழுப்பி விட்டார்!

ஓர் எம்.பி. தம் தொகுதி அல்லது மாநில மக்களுக்காக மட்டுமே வாதாடுகிற வக்கீல் அல்ல. இந்தியா முழுமைக்குமான வக்கீல் என்று வேண்டுமானால் சொல்லலாம். இதைப் புரிந்து கொள்ளாமல், சிலர் பாராளுமன்றத்தில் தங்கள் சாதனையாக பஞ்சாயத்து போர்டு கூட்டத்தில் பேச வேண்டிய உள்ளூர்ப் பிரச்னைகளை அடுக்குமொழியில் நாடாளு மன்றத்தில் பேசியதாகச் சொல்லிக் கொண்டிருப்பார்கள்!

தேசிய முக்கியத்துவம் உள்ள பிரச்னைகளை விவாதிப்பது, அரசு அறிமுகப் படுத்தும் மசோதாக்களை அலசுவது, மக்கள் நலத் திட்டங்களில் அபிப்ராயம் சொல்வது போன்றவைதாம் ஓர் எம்.பி.யின் முக்கிய கடமைகள்.

உள்ளூர்ப் பிரச்னைகளையோ, தேவைகளையோ, அவர் கவனிக்கக் கூடாது என்பதல்ல; அவற்றை அரசுக்கும் அதிகாரிகளுக்கும் தெரிவிப்பதற்குத்தான் ஒவ்வோர்





* சி. எஸ்.



* வை. கோ.



* அண்ணா



* நாஞ்சில் மனோகரன்




* செழியன்



* ஈ. வி. கே. சம்பத்



* மதுலிமாயி




* மதுதண்டவதே



* ரங்கா



* பூபேஷ்குப்தா



* ஜோதிர்மாய் பாசு

எம்.பி.க்கும் கட்டுக் கட்டாக 'லெட்டர் பேடுகள்'; ஓர் உதவியாளருக்குச் சம்பளம் கொடுப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட தொகை என்று அரசு வசதி செய்து தரு கிறதே!

''பிரச்னைகளையும் மக்களின் தேவை களையும் சுட்டிக் காட்டி, எம்.பி. எழுதும் கடிதங்களின் பேரில் அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுத்தே ஆக வேண்டும். அதன் சாத்தியக்கூறு பற்றிக் கடிதம் மூலம் பதில் தந்தே ஆக வேண்டும். இப்படி உரிமைகள் எம்.பி.க்கு இருப்பதால் செல் வாக்குடன் செயல்பட முடியும் ...!'' என்கிறார் காங்கிரஸ் பிரமுகர் கு. சுப்பு.

'தொகுதியில் ஏதாவது பிரச்னை என்றால் எந்த அதிகாரியைத் தொடர்பு கொள்வது' என்று கூடத் தெரியாமல் உதவி யாளர்களின் உதவியை நாடும் எம்.பி.க்கள் பலர் உண்டு. ஆனால், கலாநிதி, எம்.பி.யாக இருக்கும் வரை எந்தப் பிரச்னை யாயினும் யாரைத் தொடர்பு கொள்வது என்ற விவரங்களைத் தமது விரல் நுனியில் வைத்திருந்தார். குழப்பமே இல்லாமல் உடனடியாகத் தொலைபேசியில் அழைத்து பக்குவமாக எடுத்துச் சொல்லிச் செயல் படக் கேட்டுக் கொள்வார். ஒரு சிலரைப் போல அதிகாரிகளுக்கு ஆணையிடுவதோ, மிரட்டும் தொனியில் எச்சரிக்கை விடு வதோ கலாநிதியிடம் இல்லை.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களுக் குச் சேவை செய்யத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் எனில் அதிகாரிகளும் கூட அரசு சேவை (Govt. Service)யில் இருந்து வருபவர்களே என்பதை மறக்காமலும் அதிகாரிகளை மறக்க விடாமலும் செயல் பட்டவர் கலாநிதி.

எம்.பி.யாக ஒருவர் பிரகாசிக்க வேண்டும் என்றால் அவருக்கு நிச்சயமாக நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம், பாராளுமன்ற நடைமுறை குறித்துத் தெளி வான அபிப்ராயம் இருத்தல் வேண்டும். தவிர, நாட்டு நடப்புகள், உலக விஷயங்கள் குறித்துப் பரந்த பார்வையும் இருக்க வேண் டும். டெல்லியில் பாராளுமன்ற உறுப்பினர் களுக்கு அரசியலமைப்புச் சட்டம் மற்றும் அவர்களுடைய கடமைகள் பற்றிய விளக்கங்களை வகுப்பு மாதிரி நடத்திச் சொல்வதற்கென்றே 'கான்ஸ்ட்டிடியூஷன் கிளப்' (Constitution club) என ஓர் அமைப்பு உண்டு. இந்த வகுப்பில் கலந்து கொள்ளும் எம்.பி.க்களை விரல் விட்டு எண்ணி விட லாம்.

முழுமையான வசதிகள் கொண்ட

நூலகம் ஒன்றும் பாராளுமன்ற வளாகத்தினுள் இருக்கிறது. அனைத்து இந்திய மொழிப் புத்தகங்களும், பத்திரிகைகளும் இந்த நூலகத்தில் இருக்கும். எம்.பி.க்கள் தங்களுடைய தேவையை நூலகரிடம் சொல்லி விட்டால் புத்தகங்கள் அவருடைய மேஜையைத் தேடிக் கொண்டு வந்துவிடும். பாராளுமன்ற நூலகத்தை முறையாகப் பயன்படுத்திக் கொண்டாலே நல்ல எம்.பி.யாகப் பிரகாசிக்க முடியும்.

தமிழகத்திலிருந்து சென்ற எம்.பி.க்களில் இந்த நூலகத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டவர்களில் முரசொலி மாறன், வை. கோபால்சாமி, ஜெயலலிதா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

விவாதங்களுக்கு அண்ணா மெருகூட்டியது போன்றோ ஈ.வி.கே. சம்பத் கவனத்தை ஈர்த்தது போன்றோ தமிழகப் பிராந்தியக் கட்சிகளில் சமீபத்தில் ஒருவரும் தோன்றவில்லை. வை. கோபால்சாமியை ஓரளவுக்குச் சுட்டிக் காட்டலாம் என்றாலும் அவர் ஈழத் தமிழர் பிரச்னை போன்ற குறிப்பிட்ட சில விவாதங்களில் மட்டுமே பங்கு கொண்டார். இதற்கு நேர் மாறான ஒரு நல்ல உதாரணம் வேண்டுமானால் செழியனைக் குறிப்பிடலாம். 'குறுகலான' எண்ணங்களுடன் பாராளுமன்றத்திற்குள் நுழைந்த அவர், தேசியவாதியாகத் தம்மை மாற்றிக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டார்.

பல எம். பி.க்கள், குறிப்பாகப் பிராந்தியக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இந்தியும் தெரியாமல், ஆங்கிலமும் தெரியாமல் இருக்கிறார்கள். இதனால் பாராளுமன்ற நடைமுறைகளை ஏதோ திருவிழாக் கோலாகலமாக நினைத்து வேடிக்கை பார்ப்பதைத் தவிர, அவர்களால் வேறு ஒன்றும் செய்ய முடியாத நிலை!

இவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான இலவச ரயில்வே பாஸ், விமானப் பயணச் சலுகைகள், தொலைபேசி இணைப்புகள் போன்ற சலுகைகளை அனுபவிப்பதோடு சரி. ஆக்கபூர்வமாக எதையும் சாதித்திட இயலாது.

இப்படிக் கூறுவதால் தேசியக் கட்சிகளைச் சேர்ந்தவர்களெல்லாம் பாராளுமன்றத்தில் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்பவர்கள் என்று அர்த்தமாகி விடாது! தமிழகத்தில் இருந்து காங்கிரஸ் எம்.பி.க்களாகி இருக்கும் இருபத்தி நாலு பேரில் சிதம்பரம், அன்பரசு போன்ற சிலரைத் தவிர மற்றவர்கள் ஆக்கபூர்வமாகச் செயல்படுவார்கள் என்று சொல்ல முடியாது. வலது கம்யூனிஸ்ட் எம்.பி. செல்வராஜ், ஐக்கிய பொதுவுடமைக் கட்சியின் எம்.பி. தா. பாண்டியன் ஆகியோரும் கூட நல்ல பாராளுமன்ற உறுப்பினர்களாகப் பிரகாசிக்கலாம். மற்றவர்கள்....?

ஒவ்வொரு துறைக்கும் ஆலோசனை வழங்குவதற்கென்று எம்.பி.க்களைக் கொண்ட குழுவை மத்திய அரசு நியமிக்கிறது. பொதுக் கணக்குக் குழு, பொதுத் துறை நிறுவனங்கள் குழு, மதிப்பீட்டுக் குழு, முறையீட்டுக் குழு, ரயில்வே ஆலோசனைக் குழு, செய்தி ஒலிபரப்பு ஆலோசனைக் குழு, அலுவல் ஆய்வுக் குழு, தாழ்த்தப்பட்டோர் மலையக மேம்பாட்டு ஆலோசனைக் குழு என்று நிறையக் குழுக்கள் உண்டு. இந்தக் குழுக்களில் இடம்பெற்றிருக்கும் எம்.பி.க்கள், சம்பந்தப்பட்ட துறையில் ஆலோசனை வழங்கக்கூடிய அறிஞர்கள் அல்ல என்றாலும் கூட நியமிக்கப்படுவார்கள்! பல எம்.பி.க்கள் தங்கள் லெட்டர் பேடில் கறுகறுப்பாக இந்த 'உறுப்பினர்' விவரங்களை அச்சடித்து வைத்துக் கொள்வதோடு சரி. ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்காமல், 'சிபாரிசு'களைத்தான் இவர்கள் அதிகமாகச் செய்து கொண்டிருப்பார்கள்.

பல்வேறு கமிட்டிகளில் அங்கம் வகித்து, ஆய்வுகள் நடத்தி, முடிவுகளை எடுப்பது பாராளுமன்ற உறுப்பினர்கள்தான் என்பதால் எம்.பி.க்களை பின்புலத்தில் இருந்து ஆட்டுவிப்பது பல தொழிலதிபர்களுக்குக் கைவந்த கலை. பல பாராளுமன்ற உறுப்பினர்களின் 'குவார்ட்டர்ஸ்'களில் பெரிய வர்த்தக நிறுவனங்களின் 'லையசன் அதிகாரி'களை (Liason officers) அடிக்கடி பார்க்க முடியும். இந்தத் தொடர்பு அதிகாரிகளின் தலையாய பணி இந்த எம்.பி.க்களை எல்லாவிதத்திலும் திருப்திப்படுத்துவதுதான்....! இப்படிக் 'குளிப்பாட்டுவது' எதற்காக என்று கூறித்தான் தெரிய வேண்டுமா என்ன!

மேலும் டெல்லியில் அரசு தரும் வீட்டை வாடகைக்கு விட்டும், அரசு தரும் சலுகைகளை முறைகேடாகப் பயன்படுத்தியும் தங்கள் எம்.பி. பதவியை இழிவுபடுத்தும் பலரும் உண்டு.

'எல்லா எம்.பி.க்களுமே இப்படித்தானா?' என்றால் யோக்கியப் பொறுப்புடன் ஆசைகளுக்கு அடிமைப்பட்டால் இருக்கும் எம்.பி. ரொம்ப ரொம்ப அபூர்வம் என்பதே பதில்.

''லட்சிய எம்.பி.யா? அதில் எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. யாருமே லட்சிய எம்.பி.யாக இருக்க முடியாது'' என்கிறார் சி.எஸ்.

நிலைமை மாற என்ன வழி?

முதலாவது, தேர்தல் செலவை ஒரு முதலீடாகக் கருதி, பதவிக் காலத்துக்குள் அபரிமித லாபத்தைக் காண முற்படும் போக்கு மாற வேண்டும். குறைந்த செலவில் தேர்தல் நடக்கத் தேர்தல் சீர்திருத்தங்கள் தேவை. இரண்டாவது, மக்கள் யாரோ ஒரு தலைவரை மனத்தில் வைத்துக் கொண்டு, யாருக்கோ வோட்டுப் போடும் நிலை மாறி, கட்சியின் கொள்கைகள், வேட்பாளரின் தகுதிகள் இரண்டையும் கவனித்து வோட்டுப் போடும் காலம் மலர வேண்டும். அப்போதுதான் நல்ல பார்லிமெண்டேரியன்கள் நிறைய உருவாக முடியும்.

— சுந்தரராஜன்.

சத்தியத்தின் பெருமை

சத்தியமே பரப்பிரம்ம சொரூபம். சத்தியமே சிறந்த தவம். சத்தியமே சிறந்த யாகம். சத்தியமே சிறந்தது என்று சொல்லப்படுகிறது சத்தியமே வேதங்களில் சொல்லப்படுகிறது. சத்தியமே மேம்பட்ட பதவி, சத்தியமே தேவரிஷி, பிதுர் பூஜைக்கு உரியதாக இருப்பது சத்தியமே. விரதரசாணம்; சத்திய ஸ்வரூபமே. ஓங்காரம் சத்தியத்தினாலேயே காற்று வீசுதலும் சூரியன் தகித்தலும் அக்கினி எரிதலும் என்று உணர வேண்டும். சத்தியத்திலேயே சுவர்க்கம் நிலைபெற்றுள்ளது. சத்தியவானுக்கு சர்வதேவ பாராயணமும் சகல தீர்த்த ஸ்நானமும் செய்த பயன் கைகூடுவதுடன் தன் கோரிக்கைகள் யாவற்றையும் அடையக் கூடும். ஆயிரம் அஸ்வமேத யாகங்களைச் செய்த பயனையும் சத்தியத்தின் பயனையும் நிறுத்தால், சத்தியத்தின் பயனே விசேஷமாக இருக்கும். சத்தியத்தினாலேயே, தேவர்களும் முனிவர்களும் திருப்தியடைகிறார்கள். சத்தியமே, கவனிக்கத் தக்கது. முனிவர்கள் சத்தியத்தினாலேயே சிறந்த சித்திகளை அடைந்து, அப்ஸரசுகளுடன் கூடி திவ்விய விமானங்களில் ஏறி, விரும்பிய இடங்களில் சென்று திரும்புகிறார்கள். ஆழ்ந்தும் பரந்தும் விளங்கும் புண்ணியத் தீர்த்தமான சத்தியத்தில் நல்ல மனத்தோடு மூழ்க வேண்டும். அதுவே தூய்மையான நீராடலாகும். ஆகையால் மனநிறைவாக மக்கள் அனைவரும் வாய்மையையே உறுதியாகக் கொள்ள வேண்டும்.

(சிவ மஹா புராணம்)

நாங்களும் சத்தியமாக செய்கின்றோம்.

இனிப்பு வகைகள்: அதிரசம், ஸ்வீட் சோமாஸ், பொருள் விளங்காய் உருண்டை, குங்குமப்பூ ஹல்வா, குங்குமப்பூ பாதாம் ஹல்வா, குங்குமப்பூ ஜாங்கிரி, குங்குமப்பூ லட்டு, தேங்காய் போளி, மெங்களூர்ப் போளி, வெல்லச் சீடை.

கார வகைகள்: கைமுறுக்கு, தேன்குழல், தட்டை, சீடை, சிப்பு சீடை, ரயில் கட்டிடம், கான்பிளேக்ஸ் மிக்சர், பாம்பே அவல் மிக்சர், பாம்பே உருளைக் கிழங்கு சிப்ஸ், வெஜிடபிள் சோமாஸ்.


திருமண வைபவங்களுக்கு: பருப்புத் தேங்காய், அதிரசம், சீர்முறுக்கு, முள்ளுத் தேன்குழல், திரட்டுப் பால் ஆகியவை தயாரித்துத் தருகிறோம்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் அண்டு ஸ்நாக்ஸ்

No. 24 2வது மெயின் ரோடு

சென்னை - 600 020.

போன்: 412557.


இடஒதுக்கீட்டு எதிர்ப்பு
தீ புடிச்சதாலே தான் பஸ் எரிஞ்சது!
பெட்ரோல் இருந்ததாலே தீ புடிச்சது!
எரிஞ்சதாலே தான் தீ புடிச்சது!
வி.பி. சிங்
இடஒதுக்கீடு கொள்கை பற்றி தேசிய முன்னணி தலைவர்களிடையே கருத்து வேற்றுமை நிலவுகிறது -
அரசியல் துறவறம்
பதவி
இன்னுமா புத்தி வரல்லே?.. உன் கட்சி ஜனநாயகம் வேணும்
கண்டனம்
தேர்தல் தோல்வி



கல்கி

1989 டிசம்பர் 31
மலர் 48 இதழ் 22
சுக்ல மார்கழி 16



ஒரு நாள் துறவு!

ஆறு மணி நேர உண்ணாவிரதம் இருந்து சாதனை படைத்தவர், அதை விடப் பெரிய சாதனையாக ஒரே ஒரு நாளைக்குப் பதவி துறந்திருக்கிறார்! தமிழகமே சிலிர்த்துப் போயிருக்கிறது. தலைவி ஜெயலலிதாவின் பற்றற்ற நிலை கண்டு! 'அபயம்' என்று காலில் விழுந்தவர்கள் மீது கருணை கொண்டு, மீண்டும் அவர் பதவி ஏற்றது பார்த்துப் பாரதமே பூரித்துப் போயிருக்கிறது!

தொண்டர் ஒருவர் விஷத்தைக் குடித்ததென்ன, இன்னொருவர் 'தீக்குளிப்பேன்' என்று கெரசின் தேடியது என்ன, அ.தி.மு.க. தலைவர்கள் கேட்டருகே தவித்து நின்றது என்ன, மாஜி பிரதமர், பூட்டா சிங்கைத் தூது அனுப்பியது என்ன, ஃபோனில் பேசிக் கெஞ்சியது என்ன! அடேயப்பா! ராஜீவ் வர்ணித்து மகிழ்ந்தாரே, 'நவீன ஜான்ஸி ராணி' என்று, அந்தச் சரித்திர நாயகிக்குக் கூட, இந்தச் சினிமா நாயகிக்குக் கிடைத்த மரியாதை கிடைத்தேயிராது, நிச்சயம்! எப்படியோ காட்டுக்குப் போன தலைவி வீட்டுக்குத் திரும்பியதில் எல்லோரும் விடுகிற நிம்மதிப் பெருமூச்சில் காங்கிரஸின் நெடுமூச்சு மிகப் பெரிதாக ஒலிக்கிறது!

ஜெயலலிதாவுக்கு மக்களிடையே இருக்கின்ற செல்வாக்கு அசாதாரணமானது என்பது நாம் அறியாதது அல்ல. இல்லாமலா நாடாளுமன்றத் தேர்தலில் இத்துணை மகத்தான வெற்றி பெற்றார்? ஆனால் மக்களுடைய பேராதரவைப் பெறுகின்ற அனைவருமே சிறந்த அரசியல்வாதியாகவோ, ஜனநாயகவாதியாகவோ, நிர்வாகத் திறன் படைத்தவராகவோ இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை என்பதைச் சரித்திரம் பல சந்தர்ப்பங்களில் நிரூபித்திருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக ஜெயலலிதாவும் அத்தகைய ஒருவரே! அதற்கு ஏற்கெனவே நடந்துள்ள பல சம்பவங்கள் தரும் சான்று போதவில்லையெனில், சமீபத்திய இந்த ஒரு நாள் பதவித் துறப்பு நாடகத்தையும் சேர்த்துக் கொள்ளலாம்!

முன்பு, நவாப் ராஜமாணிக்கம் நாடகத்தில், கம்சனாக அவர் மேடையில் தோன்றி, மீசையை முறுக்கியபடியே, "நாரதரே! வான்னா வரணும்! உட்காருன்னா உட்காரணும்! நில்லுன்னா நிக்கணும்! ஓடுன்னா ஓடணும்!" என்பார். அவர் இப்படிக் கூறி வரும்போதே, ஏன் என்பதற்கு முன் எண்ணெயாகத் தயாரான 'நாரதர்' முன்னேறியும், அமர்ந்தும் நின்றும் திரும்பி ஓடியும் அவசர அவசரமாகக் கட்டளைகளை நிறைவேற்றுவார்! இப்படித்தான் தமது கட்சியின் மூத்த தலைவர்களை நடத்துகிறார் ஜெயலலிதா. அவர்களும் அவர் ஆட்டுவிக்கிறபடியெல்லாம் ஆடுகிறார்கள். சுயநலம் காரணமாக முதுகெலும்பைக் கழற்றி வைத்து விட்டு வேத நிலையத்துக்குள் நுழையும் இவர்களை நடத்துவது போலவே, இப்போது பத்திரிகைகளையும் அவமதித்து விட்டார் ஜெயலலிதா. நிருபர்களை அழைத்து "அரசியலிலிருந்து விலகுகிறேன்" என்று அவர் கூறியதுமே, "இது தீர்மானமான முடிவுதானா?" என்று நிருபர்கள் கேட்க, ஜெயலலிதா உறுதியாக, "ஆமாம்" என்று கூறியிருக்கிறார். மறுநாளே அதே பத்திரிகைகள், அவர் விலகல் முடிவை வாபஸ் பெற்றதைப் பிரசுரிக்க நேர்ந்து, சிறுமைப்பட்டுப் போயின!

ராஜினாமாவுக்குக் காரணம் என்ன என்றால், 'உடல்நலக் குறைவு' என்கிறார் ஜெயலலிதா. மறுநாளே உடல் ஆரோக்கிய நிலைக்குத் திரும்பி விட்டதா என்ன? கட்சிக்குள் சில தலைவர்கள், 'காங்கிரஸை ஆதரித்தது போதும்' என்று சொன்னார்களாம்! அவர்களுக்குப் பாடம் கற்பிக்க அதிர்ச்சி வைத்தியம் செய்தார் 'ஜெ' என்பது ஓர் அனுமானம். மத்தியில் தேசிய முன்னணி ஆட்சி அமைந்து விட்டதால், இங்கு தாம் முதல்வராகி விடலாம் என்ற எதிர்பார்ப்பு ஏமாற்றத்தில் முடிந்ததுதான் துறவுக்குக் காரணம் என்பது சிலரது கணிப்பு. உண்மை எதுவானாலும் ஜெயலலிதா, கட்சிக்குள் இன்னொருவர் வளர்வதையோ மாற்றுக் கருத்து உருவாவதையோ சகித்துக் கொள்ள முடியாத ஒரு சர்வாதிகார மனப்பான்மையை வளர்த்துக் கொண்டிருக்கிறார் என்பது மட்டும் தெளிவு. குட்டுப்பட்டுக் குட்டுப்பட்டே குறுகிப் போய்க் கிடக்கிறார்கள் அ.தி.மு.க.வின் இதர தலைவர்கள்.

ஜெயலலிதாவே கட்டிக் காட்டியிருப்பது போல், எம்.ஜி.ஆருக்குப் பிறகு, உடைந்து சிதறிய கட்சியை மீண்டும் ஒன்றுபடுத்தியதிலும் நாடாளுமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்றதிலும் அவரது பங்கு மகத்தானது; மறுப்பதற்கில்லை. ஆனால் இதற்குத் துணை நின்றது ஜெயலலிதாவின் ஆற்றல் என்பதை விட, மக்களிடையே எம்.ஜி.ஆருக்கும் அவர் பிரபலப்படுத்திய இரட்டை இலைக்கும் அவரால் உருவாக்கப்பட்ட ஜெயலலிதாவுக்கும் உள்ள செல்வாக்குத்தான் என்று கூறுவது தவறாகாது. இத்துடன் தி. மு. க. அரசு ஜெயலலிதாவுக்கு இழைத்த சில அநீதிகளும் சேர்ந்து கொண்டு வெற்றிக்கு உதவின.

இதையெல்லாம் யோசித்துப் பார்த்து, ஜெயலலிதா, தம்மையும் தமது கட்சியையும் தோழமைக் கட்சியையும் தேர்ந்தெடுத்த மக்களுக்கு நியாயம் செய்வது போல் இனியேனும் நடந்து கொள்ளட்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

வட்டமேஜை

சங்கீத மழையில் நனைந்த சந்தோஷம்!

* 'முதல்வர் வீட்டுத் திருமணம்' பற்றித் தாங்கள் வெளியிட்ட விதம், நாங்கள் குடும்பத்துடன் திருமணத்திற்குச் சென்று வந்த திருப்தியை ஏற்படுத்தியது என்றால் அது மிகையாகாது.

கடலூர் — 1. எம். ரவிச்சந்திரன்.

* கலைஞர் வீட்டுத் திருமணத்தில் ஒவ்வொரு வேளையும் பரிமாறப்பட்ட உணவு வகைகளை விலாவாரியாக விவரித்த உங்கள் நிருபர், கட்டுசாதக் கூடைக்கு என்ன 'மெனு' என்பதை விட்டு விட்டாரே! அதையும் போட்டிருந்தால் வாசகர்களின் கவலை தீர்ந்திருக்குமே!

நங்கநல்லூர். கி. சங்கர்.

* முன் அட்டை ஆகட்டும், பின் உள் அட்டை ஆகட்டும் இசை மேதைகளை எங்கள் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தி விட்டீர்கள்.

குருவரெட்டியூர். நந்திவர்மன்.

* சங்கீத மழையில் குளிரக் குளிர நனைந்த ஒரு சந்தோஷத்தை என்போன்ற சங்கீதப் பிரியர்களுக்கு இவ்வார இதழ் தோற்றுவித்து விட்டது.

இராமநாதபுரம். எஸ். லதா.

* 21ம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்க இருக்கும் இந்த நேரத்தில் கூட, தாங்களே முன் வந்து நாதஸ்வரமும், தவிலும் கற்றுக் கொள்ளும் இளைஞர்களா...! அவர்களைப் பற்றிப் படிக்கும் போது, நாமும் ஏதாவது ஒரு கலையைக் கற்றுக் கொண்டால் என்ன என்ற ஆசை ஏற்பட்டது.

சீர்காழி.

சண்பை. சிவ. சண்முகம்.

* கலை விழாச் சிறப்பிதழுக்கு மிகவும் பொருத்தமாய்ச் சிவசங்கரி எழுதிய 'வட்டங்கள்' சிறுகதை இருந்தது. தாய்க்கும் மகளுக்கும் இடையே நடக்கும் சிறு நிகழ்ச்சியை அழகாகப் படம் பிடித்துக் காட்டியதோடு, அதை மிகவும் நேர்த்தியாக முடித்துள்ள விதம் அற்புதமானது.

தர்மபுரி — 2. வித்யா.

* குன்னக்குடியின் வாசிப்பு பற்றிய விவாதம் — இருதரப்பிலும் மிக நன்றாக எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

பண்டாரவாடை.

க. இராசசேகரன்.

* 'பெற்றவர்கள்' சிறுகதையில் 'பெற்றவங்களை விட உன்னை வளர்த்து ஆளாக்கினாங்களே அவங்கதான் உனக்கு அம்மா, அப்பா. அவங்க கூடத்தான் நீ இருக்கனும். எங்களுக்கு வேணும்னா பாசம் காட்டப் பசங்க இருக்காங்க. ஆனா அவங்களுக்கு நீ ஒருத்தன்தான்' என்று பெற்ற தாய் மூலமே சொல்ல வைத்துக் கதையை அருமையாக முடித்திருக்கும் கதாசிரியர் க. நாகராசன் பாராட்டுக்குரியவர்.

தக்கோலம். அ. முஸ்தபா.

* புதிய பிரதமர் எப்படி இருக்க வேண்டும் என்ற கேள்விக்குத் தராசின் பதில் பொருத்தம்தான். அதே சமயம், பிரிட்டிஷ் பிரதமராய் இருந்த கிளேட்ஸ்டன் என்பவர், பிரதமர் என்பவர் எப்படி இருக்க வேண்டும் எனக் கூறியுள்ளார். 'பிரதம மந்திரி நாட்டின் நலனுக்காக ஒரு கசாப்புக் கடைக்காரன் போல் செயல்பட வேண்டும். நாட்டின் நலனைக் குறித்து, நண்பர்களை இழக்கவும், எதிரிகளை மன்னிக்கவும் நேரிடும். நாட்டின் நலனுக்கு நண்பர்கள் விரோதிகளாய் இருப்பின், அவர்களைத் தொலைத்துத் தலைமுழுக வேண்டும். விரோதிகள் மனம் மாறி நாட்டு நலனுக்கு அத்தியாவசியமாய் மாறினால் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்...' — இந்த ரீதியில் வி. பி. சிங் செயல்பட்டால் வெற்றி நிச்சயம்.

திருச்சி — 14. ராஜி ராதா.

* சந்திரசேகர் மற்ற அனைவரையும் ஏமாற்றப் பார்த்ததாக 'தராசு' பதில் கூறியுள்ளார். அவர் ஏமாற்றப் பார்த்தாரோ இல்லையோ அவருக்கு பிரதமர் பதவியில் போட்டி போடத் தகுதி உண்டு; உரிமை உண்டு. புதிய பிரதமரை ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுத்திருக்கலாமே!

திருச்சி — 21.

க. இராசரெத்தினம்.

* 'ஆரம்பம் அமர்க்களம்! ஆலாபனை அபாரம்!' தலையங்கத்தின் மூலம் வி. பி. சிங்கின் அரசு எப்படியெல்லாம் செயல்பட வேண்டும் என்பதை நேரிடையாக விளக்கியிருப்பது கல்கியின் தேசப்பற்றைக் காட்டுகிறது! பாராட்டுக்கள்!

திருவாரூர். கருவை மகரந்தன்.

* இவ்வாரத் தலையங்கம், ஆளுங்கட்சியான ஜனதா தளத்திற்கும் சரி, எதிர்க்கட்சியான காங்கிரஸிற்கும் சரி, நல்லதொரு அரசியல் அறிவுரைப் பாடம் நடத்தியிருந்தது. அதே போன்றுதான் மூன்று கார்ட்டூன்களும். தேசிய முன்னணி ஆட்சிக்கு எதிராகத் தோன்றி வளர்ந்து வரும் பிரச்னைகளைக் கார்ட்டூன்கள் தெளிவாக்கியிருந்தன.

தோட்டக்குறிச்சி,

இரா. வளையாபதி.

* பதினோரு வயதான எனது மகன் கணேஷ்ராம், பிறவியிலிருந்தே சில இருதயக் கோளாறுகளுடன் இருந்து வருகிறான். இக் கோளாறுகளைத் திறந்த இருதய அறுவைச் சிகிச்சை (Open Heart Surgery)யின் மூலமே நிவர்த்தி செய்ய இயலும் என்ற மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் ஜனவரி மாதம் அறுவைச் சிகிச்சை நடைபெறவுள்ளது. இதற்கு நாற்பதிலிருந்து ஐம்பதாயிரம் ரூபாய் வரை செலவாகுமெனக் கூறுகின்றனர். எனது சக்திக்கு இத்தொகை மிக அதிகம். பணப் பற்றாக்குறை, என் மகனின் வாழ்வையே ஒரு கேள்விக்குறியாக்கியுள்ளது. எனவே, தயையுள்ளம் கொண்ட, கல்கி வாசகர்கள் என் மகனின் வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றிடப் பண உதவி செய்யுமாறு வேண்டுகிறேன்.

நங்கநல்லூர், கே. ஆர். கோபண்ணா,
சென்னை — 600 061 2—A/D ராம்நகர், 6வது தெரு.



வழக்கு

வாஸந்தி

எழுதும் குறுநாவல்



வல்லமை தாராயோ?

10

அரவிந்த் சொன்ன வார்த்தைகளின் முழு அர்த்தமும் மனத்தில் பதிவதற்கே, சில வினாடிகளாயின வந்தனாவிற்கு. என்னவோ சொல்லப் போகிறார் என்று நினைத்தால், இப்படி ஒரு செய்தியை அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவே இல்லை.

அரவிந்த் அவளைப் பார்க்காமல் தொடர்ந்து பேசினான். ''உங்களுக்கு இது ஒரு பெரிய அதிர்ச்சியா இருக்கலாம். பிரமிப்பா இருக்கலாம். இதை நீங்க எதிர்பார்த்திருக்கவே முடியாது. ஆனா இது உண்மை. இதை என் மனசிலேயே வச்சி அழகு பார்த்துக்கிட்டிருக்கிறதில அர்த்தமில்லை. தள்ளிப் போட்டுக்கிட்டே போகாம, ஒருநாள் வெளிப்படுத்தியே ஆகணும்னு நினைச்சு, இன்னைக்குச் சொல்லிட்டேன்.''

''சார், நீங்க...''

''வெய்ட்!'' என்று இடைமறித்தான். ''ப்ளீஸ்... நீங்கள் எதுவுமே பேச வேணாம். நான் நினைச்சதை முழுசாப் பேசி முடிச்சிடறேன் வந்தனா. இது ஒருநாள்ல மனசில ஏற்பட்ட முடிவு இல்லை. உங்க முதல் சந்திப்பிலேர்ந்து ஆரம்பிச்சு, கொஞ்சங் கொஞ்சமா, சீரா எனக்குள்ளே வளர்ந்தது ஒரு மதிப்பு. அது மதிப்புத்தானான்னு என்னையே துருவித் துருவி விசாரிச்சுக் கிட்டதிலே, இல்லை, அதுக்குப் பேர் நேசம்னு பதில் கிடைச்சது. காதல்னு சொல்லத் தயக்கமா இருக்கு ஏன்னா இன்னைக்கு அந்த வார்த்தை அதோட நேரடி அர்த்தத்தில பல பேர் பயன்படுத்தற இல்லை. அந்த வார்த்தையே மழுங்கிப் போச்சுன்னு நினைக்கிறேன். வார்த்தை எதுவா இருந்தாலும் உணர்ச்சிகள் சத்தியமானது வந்தனா.

''நான் உங்களை உங்க சம்மதத்தோட, உங்க குடும்பத்தில உள்ளவங்க சம்மதத்தோட கல்யாணம் செஞ்சுக்க விரும்பறேன். முதல்ல உங்க சம்மதம்தான் முக்கியம். எனக்கு நீங்கதான் பொருத்தம்னு நான் நினைக்கிறேன். உங்களுக்கு நான் பொருத்தமான்னு நீங்கதான் யோசிக்கணும். இதிலே வற்புறுத்தல் எதுவும் கிடையாது. நீங்க சுதந்திரமா முடிவெடுங்க. நிதானமா முடிவெடுங்க. எந்த அவசரமும் இல்லை. நாளைக்குச் சொல்லலாம். அடுத்த வாரம் சொல்லலாம். அடுத்த மாதம் கூடச் சொல்லலாம். உங்க பதிலுக்காக நான் காத்திருப்பேன்.


''உங்க பதில் எனக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும்னு நம்புறேன். எதிர்பார்க்கிறேன். ஒருவேளை என் நம்பிக்கை தப்பாப் போயிட்டா நான் உங்க மேலே கோபப் பட மாட்டேன். வருத்தப்படுவேன். எந்த வகையில நான் தகுதியில்லாதவனாப் போயிட்டேன்னு யோசிப்பேன். கண்டிப்பா உங்களுக்கு என்னால எந்தத் தொந்தரவும் இருக்காது. விளையாட்டில களத்தில இறங்கற வீரன், தான் ஜெயிக்கணும்னு தான் ஆசைப்படுவான். நான் என் லவ் கேமை விளையாடியிருக்கேன். தப்பு! லைஃப் கேம் இது. முடிவு நீங்கதான் சொல்லணும்.''

''சார், வந்து...'' தடுமாறினாள் வந்தனா.

''தயவு செஞ்சு இப்ப எதுவுமே சொல்ல வேணாம். இப்படித் திடீர்னு நான் சொன்னதோட பிரமிப்பு விலகவே நேரமாகும். வீட்டுக்குப் போய், ரொம்ப ரொம்ப நல்ல மனநிலையில, ரொம்ப ரொம்ப நிதானமா, நான் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் யோசிங்க! நான் புறப்படறேன்.''

அரவிந்த் விருட்டென்று புறப்பட்டுச் சென்று விட, சில நிமிடங்கள் விக்கித்து நின்று விட்டு, பிறகுதான் அந்த அறையை விட்டு வெளிப்பட்டாள் வந்தனா.

உள்ளே இனம் பிரிக்க முடியாமல் உணர்வுகள் கலவையாய் முட்டின. இதமாக, பக்குவமாகச் சொன்ன பண்பாடு ரசிக்க வைத்தது. ஆனால் சொன்ன செய்தி! இதற்காகத்தான் விளம்பரத்திற்குக் குரல் கொடுக்க வாய்ப்புத் தரப்பட்டதா? இதற்காகத்தான் அலுவலகத்தில் வேலை தரப்பட்டதா? இதற்காகத்தான் பல சலுகைகள் தர முன் வந்தாரா? இந்தக் கேள்விகள் மனத்தில் எழுந்த போது அவளால் அரவிந்தை ரசிக்க முடியவில்லை.



''வந்தனா, இன்னும் நீ புறப்படலை? ஏ. ஐ. ஆர்ல ஏதோ ப்ரோக்ராம் இருக்குன்னு சொல்லலை நீ?'' என்று வந்தாள் பிரியதர்சினி.

அப்போதுதான் வந்தனாவிற்கு நினைவு வந்தது. தனக்கு ஆறு மணி முதல் ஏழரை வரை அன்று அறிவிப்பு நிகழ்ச்சி இருப்பது. மணி பார்த்துப் பதறினாள். 5.20.

''ப்ரியா, ப்ளீஸ்... என்னை ரேடியோ ஸ்டேஷன்ல விட்டுட்டுப் போறியா? ஆறு மணிக்கு எனக்கு ப்ரோக்ராம் இருக்கு. திடீர்னு கேன்ஸல் பண்ணவும் முடியாது.''

''பதறாம வா, போய்டலாம்'' என்று தன் ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்தாள் ப்ரியதர்சினி. வந்தனா பின் சீட்டில் அமர்ந்து கொண்டாள்.

சிந்தனை, சற்றுமுன் அரவிந்த் சொன்ன விஷயங்களையே வட்டமடித்துக் கொண்டிருந்தது.

''என்னாச்சு வந்தனா, காதிலே விழலையா?''

''ம்? என்ன கேட்டே?''

''ஒரு முத்தம்.''

''என்னது?''

''பின்னே என்ன, எம். டி. எதுக்காகக் கூப்பிட்டார்னு நாலு தடவை கேட்டுட்டேன். பதிலே சொல்லலை? வேடிக்கை பார்த்துக்கிட்டு வர்றியா? பர்சனல்னா சொல்லாதேம்மா.''

பர்சனல்தான். மிக மிக பர்சனல். இதை எப்படிச் சொல்வது? எதைச் சொல்வது?

பட்டுக்கோட்டை பிரபாகர்

''மொபெட் லோன் பத்தித்தான் மறுபடி சொன்னாரு.''

''சரின்னு வாங்கிக்க வேண்டியதுதானே? ஏன் பிடிவாதம் பிடிக்கிறே?''

''அது ஏன் எனக்கு மட்டும் சலுகை?''

''ஓர் இரக்க உணர்ச்சிதான்.''

இல்லை. இரக்கமில்லை. என்னைக் கவரும் திட்டங்களில் ஒன்று. காதலில் சிக்க வைக்கும் தூண்டில். சருகுகள் போர்த்திய பள்ளம். வெற்றி நோக்கத்தில் நகர்த்தப்பட்ட ஒரு காய்.

''என்ன பதிலைக் காணோம்?''

''அவருக்கு இரக்கம் இருக்கலாம். ஆனால் இரக்கப் படற மாதிரி என்னைத் தாழ்த்திக்கிறதுக்கு நான் தயாரா இல்லை.''

''நீ என்னென்னவோ பேசுவே வந்தனா. இதில தாழ்த்திக்கிறதுக்கு என்ன இருக்கு? உனக்குத் தேவை இருக்கு. கம்பெனில வாய்ப்பு இருக்கு. இனாமாக் கொடுக்கலையே. திருப்பிக் கட்டப் போறியே.''

''சரி, அதுக்காகக் கம்பெனி விதியை ஏன் மீறணும்? முறைப்படி வர்ற சலுகை எனக்குப் போதும்.''

''இது தேவைக்கதிகமான ஈகோவா எனக்குப் படுது. கேட்டாத் தப்பா எடுத்துக்க மாட்டியே?''

''கேளு.''



"முறைப்படி நடந்தாப்போதும்னு நினைக்கிறவ, முறைப்படி விளம்பரம் பார்த்து, அப்ளை செஞ்சி, இண்டர்வியூவில கலந்துக்கிட்டு — திறமை அடிப்படையிலயா வேலைக்குச் சேர்ந்தே? நீ வேலைல சேர்ந்ததே நம்ம எம். டி. காட்டிய பெரிய சலுகை தானே?"

நச்சென்று முகத்தில் குத்தியது போல உணர்ந்தாள் வந்தனா. திடீரென்று குறுகிப் போய், முகமெல்லாம் சிவந்து போனது. அவன் கேட்ட கேள்வி திராவக வீச்சுப் போலப் பாதித்தது.

படு நியாயமான கேள்வி! எப்படி அதற்குச் சம்மதித்தேன்? வீட்டின் சூழ்நிலையும், அண்ணனின் விளக்கமான ஆலோசனைகளும் என்னைக் கரைக்க, எப்படிச் சம்மதித்தேன்? ஏன் உற்சாகப்பட்டேன்? பல்லிளித்துக் கொண்டு போய், நன்றி சொல்லி ஏற்றுக் கொண்டது ஏன்?

அதில் நான் அவர் எதிர்பார்ப்பின்படி சம்மதம் தெரிவித்ததால்தான் ஒவ்வொரு படியாய் முன்னேறியிருக்கிறார். அந்த வேலையே எனக்கு உதவும் நோக்கத்தில் தரப்பட்டதில்லை என்பது இப்போது புரிகிறதே!

"என் கேள்வி உன்னைச் சங்கடப்படுத்தியிருந்தால், ஸாரி. மறந்துடு. நாளைக்குப் பார்க்கலாம்" என்று ரேடியோ ஸ்டேஷன் முன்னால் ஸ்கூட்டரைப் 'பிரியதர்சினி' நிறுத்தியதும், இறங்கிக் கொண்ட வந்தனா, நன்றி சொல்லக் கூட மறந்து உள்ளே நடந்தாள் மௌனமாக.

அன்றைக்கு, நிகழ்ச்சி அறிவிப்பில், இரண்டு முறை தடுமாற இருந்து, சமாளித்துக் கொண்டாள். வேலை முடிந்து, அடுத்த நபரிடம் பொறுப்பு மாறியதும் புறப்பட்டவள் கவிதாவைச் சந்தித்தாள்.

"ஹலோ வந்தனா, ஏன் டல்லா இருக்கே? டயமிருக்கா? கொஞ்ச நேரம் பீச்சுல உட்கார்ந்துட்டுப் போகலாமா?"

உடனே வீட்டுக்குப் போவதில் விருப்பமில்லாததால் சம்மதித்தாள் வந்தனா.

வானம் முற்றிலுமாக வெளிச்சத்தைத் தொலைத்துவிட்டு, நிலாவிடம் புகார் சொன்னதும், லட்சம் நட்சத்திர கான்ஸ்டபிள்கள் தேடுவதற்குப் புறப்பட்டிருந்தார்கள். விரைவில் கண்டுபிடிக்கச் சொல்லி, அலைகள் பெரிய குரலெழுப்பிப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்க, வீசப்பட்ட கண்ணீர்ப்புகையாய்க் காற்று.

முழங்கால்களைக் கட்டிக் கொண்டு, எதிரெதிராக வந்தனாவும், கவிதாவும் ரொம்ப நேரம் மௌனமாக அமர்ந்திருந்தார்கள்.

"கவிதா, நிச்சயமான உன் கல்யாணம் ஏன் நின்னு போச்சு?"

"இப்ப அந்தச் செய்தியோட பரபரப்பு வீட்டிலே அடங்கிப் போச்சு வந்தனா."

"அதெப்படி?"

"அதைவிட சென்சேஷனல் நிகழ்ச்சிகள் நடந்ததும் அது அடங்கிடுச்சு."

''என்ன நடந்துச்சு கவிதா?''

''திருமதி வசந்தா தியாகராஜன் போன வாரம் பத்தாவது தடவையா அம்மா வீட்டுக்கு வந்திருக்கா. எங்கக்காவைத்தான் சொல்றேன். இந்தத் தடவை, நிரந்தரமா, விவாகரத்து நோட்டீஸ் அனுப்பறதுங்கிற தீர்மானத்தோட.''

''கவிதா, என்ன சொல்றே நீ? விவாகரத்தா? உங்கக்காவுக்குக் கல்யாணமாகி ரெண்டு வருஷம் கூட இருக்காதே. அதோட... அது லவ் மேரேஜ் இல்லே?''

''மூணு வருஷம் விழுந்து, விழுந்து காதலிச்சா வந்தனா. அந்தாளை என்னதான் புரிஞ்சுக்கிட்டான்னு எனக்குத் தெரியலை. ரெண்டு கார், ஏ. சி. ரூம்ஸ், வேளைக்கொரு டிரஸ் – அதைப் பார்த்து மயங்கிட்டா. அப்போது குறைகள் தெரியவே இல்லை. தகுதிக்கு மீறின இடம்னு நாங்க எல்லாம் அடிச்சுக்கிட்டோம். சம்மதிக்கலைன்னா தற்கொலைதான்னு பாலிடால் எல்லாம் வாங்கிட்டு வந்து வச்சுக்கிட்டு, ஆர்ப்பாட்டம் செஞ்சு சாதிச்சுக்கிட்டா. இப்ப தாணுக்குத் தூண் முட்டிக்கிறா. இப்பத்தான் சுயரூபம் தெரியுதாம்.''

''என்னவாம்?''

''பெரிய இடங்கள்ல என்னென்ன உண்டோ, எல்லாம்தான். விபூதி எல்லாம் வெச்சுக்கிட்டுப் பக்தனாட்டம் வேஷம் போட்டிருக்கான் ராஸ்கல். வேலைக்காரியைவிடக் கேவலமா நடத்தறான். அக்கா உடம்புல ஆறு சூட்டுத் தழும்பு. நான் எண்ணினது. எண்ணாதது எத்தனையோ. எவ்வளவோ பேர் சமாதானத் தூது போயாச்சு. மத்தியஸ்தம் பேசிப் பார்த்தாச்சு. அவன் போக்கு மாறலை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்துட்டு வந்து சேர்ந்துட்டா. இந்த லட்சணத்தில நாலு மாசம் வேற. அப்பா வக்கீல் வீட்டுக்கு அலைய ஆரம்பிச்சுட்டார். இவ குங்குமப்பூ சாப்பிட்டுக்கிட்டே குமுறிக் கொந்தளிக்கிறா. இந்த ரகளைல என் கல்யாணம் நின்னு போன பிரச்னை நகங்கிக் காணாமயே போயிடுச்சு.''

வந்தனா மௌனமானாள். அந்த முகம் தெரியாத தியாகராஜன் மேல் ஆத்திரம் பொங்கியது. இத்தனை பிரச்னைகளுக்கிடையில் அவள் நான்கு மாதம் என்றது மனத்தில் அருவருப்பை ஏற்படுத்தியது. எப்படி? எப்படி மனம் ஒன்றாமல்... ச்சே!

மூன்று வருடங்களாகக் காட்டாத குணங்கள் திடீரென்றா அவனுக்கு முளைத்தன? வேஷம்! பொறுமையான வேஷம்! அவள் வாழ்க்கையை நாசம் செய்வதற்காகவே போட்ட வேஷம்! அந்த வேஷத்திற்குக் காதல் என்று ஒரு முகமூடி!

கடற்கரையில் சந்திக்க வரச் சொல்லிக் கவிதையாய்க் கடிதம் எழுதியவனும் ஒரு தியாகராஜன்தான். பொறுக்கிப் பொறுக்கி வார்த்தைகளைக் கோத்து பவ்யமாக நேசத்தைச் சொன்ன அரவிந்த் மட்டும் என்ன விதிவிலக்கு? அவனும் ஒரு நாளைய தியாகராஜன்தான்.

ஆனால் சறுக்கி விழ நான் கவிதாவின் அசட்டு அக்கா இல்லை. தூக்கில் பிணமாய்த் தொங்கிய என் பரிதாபத் தோழி இல்லை. கணவனின் வைப்பாட்டிக்குச் சமைத்துப் போட்ட கொத்தடிமை அம்மா இல்லை நான்.

மறுநாள் காலை அனுமதி பெற்று அரவிந்தின் அறைக்குள் வந்த வந்தனா, அமைதியாய் நீட்டினாள். ''இந்தாங்க சார். நான் முடிவெடுத்துட்டேன். இது என் ராஜினாமா லெட்டர்'' என்றாள்.

(தொடரும்)

எதிர்க்கட்சி எங்கே? எங்கே?



வி. பி. ராமன்

சிக்கிம் மாநில சட்ட சபையில் எதிர்க்கட்சி என்று பெயர் சொல்லிக் கொள்ள ஓர் அங்கத்தினர் கூட இல்லை! சிக்கிம் சங்க்ராம் பரிஷத் கட்சி, முப்பத்திரண்டு இடங்களிலும் வென்று விட்டது! இது ஓர் உலக சாதனையாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் குறித்து நமது அரசியல் சாசனம் சிந்திக்கிறதா? ஏதேனும் கூறுகிறதா? வழக்கறிஞர் வி. பி. ராமன் சொன்னார்:

- ஒரு கட்சியின் பிரதிநிதிகளை மட்டுமே மக்கள் தேர்ந்தெடுக்க விரும்புவார்களேயானால், அதற்கு அவர்களுக்கு முழு உரிமை உண்டு. அதுவும் ஜனநாயகத்தின் ஓர் அம்சம்தான்.


- எதிர்க்கட்சி சட்டசபையில் இருக்கத்தான் வேண்டும் என்று அரசியல் சட்டம் கட்டுத் திட்டமாக எதுவும் விதிக்கவில்லை.

- எதிர்க்கட்சி எதுவும் இல்லாமலே, ஆளும் கட்சி அரசாங்கத்தை நடத்தலாம்.

— திருபர்

ஆம்ப்ரோ மில்க் பேஸ்

ஸ்கூல் குழந்தைகளின் பிஸ்கெட்



Sista's-EIL-245/89 TAM-A

பாலில் உள்ள எல்லா
ஊட்டச்சத்துக்களும் அடங்கியது.



சுதந்திரத்தை நோக்கி...

டெலி செய்தியில் இருபது நொடிக்கொருமுறை புன்னகை பூக்கும் பெண் சொன்ன செய்தி கேட்ட சத்யா திடுக்கிட்டான். அவன் கையிலிருந்த புரதச் சத்து மிகுந்த அரசு உணவுப் பாக்கெட் தவறி விழுந்து சிதறியது.

போச்சு! காலை உணவு போச்சு!

இனி மதியம் மூன்று மணிக்குத்தான் மற்றொரு பொட்டலம்.

அப்படி என்ன சொன்னாள் அவள்?

''ப்ரீமியர் சபாவின் அறிவிப்பு. இன்று 'ஸுப்ரீம் ஹவுஸி'ல் நிறைவேற்றப்பட்ட புதிய சட்டத்தின்படி, வருகிற செப்டம்பர் மாதம் பத்தாம் தேதியில் இருந்து திருமணங்கள் தடைசெய்யப்படுகின்றன. 'குடும்பத்திற்கு ஒரு குழந்தை' என்கிற சலுகை நீக்கப்படுகிறது. இன்று நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட இரண்டாயிரத்து ஐந்நூறு உறுப்பினர்கள், ப்ரீமியர் சபாவின் புதிய சீர்திருத்தச் சட்டமான 'ப்ளாட்டோ மக்கள், தொகைக் கொள்கை'க்கு முழு ஆதரவு அளித்து ஒப்புதல் அளித்தனர். இப் புதிய சட்டத்தின் விதிகளும் எச்சரிக்கைகளும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனிப்பட்ட முறையில் நேரிடையாகத் தெரிவிக்கப்படும்... அதிகப்படியான மக்கள் தொகைப் பிரச்னையை எதிர்நோக்கவும், சமதர்ம அமைப்பை வலிமைப்படுத்தவும், குழந்தைப் பிறப்பு சட்ட விரோதமாக அறிவிக்கப்பட்டு...''

சத்யா மேஜையை ஓங்கிக் குத்தினான்.

''மகாபாவிகளே! உங்கள் திட்டம் என்ன?''

திட்டம் கலபமான திட்டம். தேசத்தின் பரப்பளவு, வாழத் தகுதியற்ற இடங்கள் நீங்கலாக 8,961,031 ச.கி.மீ. தற்போதைய மக்கள் தொகை 210 கோடி. வீதிகளில் வாகனங்கள் செல்ல முடியாததால், குடி மக்களுக்கு நான்கு சக்கர வாகனங்கள் வழங்கப்படுவதில்லை. தவிர்க்க முடியாத சில வேலைகளுக்காக ஓடும் சில லாரிகளைக் குழந்தைகள் ஆர்வமாகப் பார்ப்பார்கள்.

சைக்கிள்... சைக்கிள்... சைக்கிள்... எங்கும் மக்கள். அநியாய மக்கள்.

பூகம்பம், வெள்ளம், புயல், விபத்துகள் எதுவும் கடந்த பத்து ஆண்டுகளாகப் பெரிதாகக் கிடையாது. எலக்ட்ரானிக் மருத்துவர்களின் வருகை மனித சராசரி வயதை நூற்றிப் பத்தாக உயர்த்தி விட்டது. இறப்பு விகிதம் சடசடவென்று குறைந்து விட்டது. ஆனால் பிறப்பு?

மறைந்த மாஜி ப்ரீமியர் செய்த 'ஐடியலாஜிக்கல் பிளண்டர்'. மக்களுக்குப் புதிய உரிமையாம். 'இன்னொரு குழந்தை பெற்



றுக் கொள்ளுங்கள்.'

இரண்டே வருடம்! பதினைந்து சதவீதம் உயர்ந்து விட்டது. பிறகு புதிய தலைமை வந்து, முதல் காரியமாக நகரத்தின் முக்கிய பகுதிகளிலிருந்த பழைய தலைவரின் சிலைகளை அப்புறப்படுத்தினார்கள். புதிய ப்ரீமியர் பழைய கொள்கையைத் தாக்கோ தாக்கென்று தாக்கினார். இனி புதிய சிந்தனை!

''இனிமேல் வீட்டிற்கொரு குழந்தை மட்டுமே வளருங்கள்.''

ஆனாலும் முழி பிதுங்கி விட்டது. புள்ளி விவரத் துறையின் தலைவர் வேர்க்க வேர்க்க ஓடி வந்து சபாவைச் சந்தித்தார். ''நிலைமை கட்டுக் கடங்காமல் போய் விட்டது தலைவரே! வளரும் மக்கள் தொகைக்கேற்ற உணவு இருப்பு நம்மிடம் இல்லை. உயர்ந்தபட்ச விளைச்சலையும் எப்போதோ எட்டி விட்டோம். நம் தேசத்தில் பசி என்பதே கிடையாது என்கிற சாதனையை நாம் தொடர வேண்டுமென்றால்....''

உடனே புதிய மக்கள் தொகைச் சட்டம் அறிவிக்கப்பட்டு விட்டது.

சத்யா மட்டும்தான் வீட்டில் இருந்தான். இளம் மனைவி ராகினி தன் அப்பா வீடு சென்றிருந்தாள். அவள் இரண்டு மாதம் கர்ப்பம்.

டெலி பெண் ஏதோ வானிலை அறிக்கை படிப்பது போல் சாவதானமாக அந்தச் செய்தியை மீண்டும் தொடர்ந்தாள். சிரிக்கிறாள். விவஸ்தைகெட்டவள்.

''மக்கள் தொகை சிறப்புக் கண்காணிப்புக் குழுவின் பார்வையில் தற்போதைய மக்கள் தொகை அப்படியே கட்டுப்படுத்தப் படும். மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட கர்ப்ப காலத்தைக் கொண்ட இன்றைய தேதிப் பெண்கள் மட்டுமே தாற்காலிகமாகக் குழந்தை பெற அனுமதிக்கப்படுகிறார்கள். அதற்குக் கீழான வயதுடைய கருக்களை உடனே கலைத்து விட வேண்டும், புதிதாகத் திறக்கப்படும் அபார்ஷன் முகாம்களில் சென்று...

''குடிமக்களுக்குத் தேவையான உணவை வழங்குவதை நிச்சயப்படுத்தும் இந்தப் புதிய சட்டத்தைப் பற்றிய தம் கருத்தை 'நேஷனல் ரப்பர் ப்ராடக்ட்ஸ்' தொழிலாளி காமினி கூறுகிறார்...''

சத்யா ரிமோட் பட்டனை ஆத்திரமாக அழுத்தித் திரையைச் சாகடித்தான் பிரசாரம் ஆரம்பித்து விட்டது.

'அயோக்கியர்களே! இயற்கையைத் தடை செய்கிறீர்களா? ராகினி...! என் கண்ணே...! இயந்திர நடைமுறைகளிலிருந்தும், கேடு கெட்ட சிலிக்கன் செயற்கைகளிலிருந்தும் விலகி, நாம் என்னென்ன கனவுகள் கண்டோம்...? சின்னக் கண்ணன் ஒருவனைப் பெற்றெடுத்து... அவனை வித்தியாசமாய்ச் சிந்திக்க வைத்து... போச்சு...! புதிய சட்டம்!

'சபா...! ப்ரீமியர் சபா! நீ நாசமாய் போவாய்!'

தொலைபேசியின் மைக்ரோ ஸ்பீக்கர், ''கால் ஃபார் மிஸ்டர் சத்யா...'' என்றது.

சத்யா எடுத்தான். ''யார் அது?''

''சத்யா! ராகினி!''

''மை டார்லிங் செய்தி கேட்டாயா?''

''சத்யா...! சத்யா!'' ராகினி விசும்புவது ஸாட்டிலைட் உபயத்தில் 'இதோ பக்கத்தில்' போல் கேட்டது.

''ராகினி! அழுகிறாயா?''

''ஆமாம்.''

''அழு! வேறு வழி?''

''சத்யா! நான் செத்துப் போகட்டுமா?''

''நான் அல்ல, நாம்!''

''ஆனால் நம் குழந்தை?''

''ராகினி! மேலே பேசாதே!''

''ஏன் சத்யா?''

''ஒட்டுக் கேட்பார்கள்!''

''ஸில்லி...! சத்யா, என்னையும், உன்னையும், நம் பிள்ளையையும் காப்பாற்று! முடியுமா? உன்னால் முடியுமா?''

''ராகினி! உடனே 'ஆட்டோமேஷன் சென்டருக்கு வா!''

''எதற்கு?''.

''தப்பிக்கலாம். க்ராஸ் த பார்டர்!'' என்றான் சத்யா.

ஆட்டோமேஷன் சென்டரில் நவீன தேவதை போல் காத்திருந்தாள் ராகினி. சோகமாகச் சிரித்தாள். சத்யா அவளை அணைத்துக் கொண்டான்.

''ராகினி! பொறு! ஹரி வருவான்!'' என்றான்.

ஹரி வந்தான். ஹரி ஒரு ஸைபர்னடிக்ஸ்

'கிருஷ்ணா டாவின்ஸி'

இஞ்ஜினியர். சற்று விவரம் தெரிந்தவன். 'சென்ட்ரல் கமிட்டி'யில் சில செல்வாக்கு கண் வைத்திருப்பவன். அதிரடி மனிதன்.

"ஹாய்! சத்யா! இது யார்?"

"என் மனைவி. செய்தி கேட்டாயா? புதிய சட்டம்?"

"ஆமாம். இல்லையென்றால் தேசம் உருப்படாது. நல்ல சட்டம்!"

"உன் தலை...! ஹரி! ஒரு ரகசியம்!"

"உடனே சொல்!"

"நீ என் நண்பன்தானே?"

"ஆம்."

"ஓர் உதவி செய்வாயா?"

"வாக்குக் கொடுக்க மாட்டேன். சொல்!"

"ஹரி...! ஹரி...! உனக்கு பொலிட் ப்ரோ அளவுக்குச் செல்வாக்கு இருக்கிறதல்லவா?"

"பொலிட் ப்ரோ! விளையாடுகிறாயா? நான் சின்னப் பையன்... உள்ளே விட மாட்டார்கள்!"

"சரி, 'ஸினி'யில்?"

"இதோ பார்! விஷயத்தைச் சொல்!"

"ஹரி, ராகினி இப்போது இரண்டு மாத கர்ப்பம்!" என்றான் சத்யா.

"அடப்பாவி!"

"ஹரி, எங்களுக்கு இந்தக் குழந்தை வேண்டும்... ஹரி, எங்களைக் காப்பாற்று!"

"சத்யா! நீ என்ன விளையாடுகிறாயா? சின்னப் பையனா? ராகினி..! நீ என்ன செய்கிறாய்... ஸ்டார் ஸ்கொயர் சென்று, ஓர் அபார்ஷன் முகாமில்..."

"ஹரி...! இந்த தேசத்தை விட்டுத் தப்பிக்க முடியுமா?"

"என்னது?" ஹரி திகைத்தான்.

"சத்யா! விளையாடாதே! பிலிலி நாய் போல் கண்காணிக்கிறது... எலெக்ட்ரானிக் வேலி இருக்கிறது. உறிஞ்சி விடும். தேசத்தை விட்டுத் தப்பிப்பதாவது...! பழைய காலத்தில் அப்படி சினிமா எடுப்பார்கள். குழந்தை வேண்டுமாம்...! இன்னும் தலை கூட முளைத்திருக்காது. புது 'இன்ஸிலர்' வந்திருக்கிறது. 'க்ளிக்' அவ்வளவுதான்! அபார்ஷன் முடிந்தது. வலி கிடையாது. ரத்தம் கிடையாது... ஸிம்பிள்."

"ராகினி! அவ்வளவுதான்!" என்றான் சத்யா.

"அப்படியென்றால்..."

"நம் பிள்ளையைக் கொல்லத்தான் வேண்டும்!"

"அய்யோ....! பாவம்! பாவம்!"

"இல்லையென்றால் நம்மைக் கொல்வார்கள்! அது இன்னும் பாவம்!"

"சத்யா!" ராகினி விசும்பினாள்.

அன்று இரவு பத்து மணிக்கு சத்யாவிற்கு டெலிபோன் அழைப்பு வந்தது. ஹரிதான் பேசினான்.

"சத்யா! தூங்குகிறாயா?"

"ஆமாம்!"

"வேறென்ன செய்வாய்? நண்பனே! சப்தம் கேட்கிறதா?"

"சப்தமா?"

"ஆம். லிபரேஷன் ஸ்கொயர் முன்னால் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். 'வீ வாண்ட் ரீஃபார்ம்ஸ்; எத்தனை என்கிறாய்... ஒரு லட்சம் மக்கள்... இந்த இரவில்... என்ன ஆவேசம்?"

"ஹரி... உண்மையா...? உண்மையா?"

"நான் இரவு பத்து மணிக்குப் பொய் சொல்ல மாட்டேன். சத்யா உனக்கு ஒரு நியூஸ்... இனிப்பான நியூஸ்!"

"என்ன?"

நமது நாட்டின் எல்லைச் சுவரைத் திறக்கப் போகிறார்கள்!" என்றான் ஹரி.

"என்னது! நிஜமா? நிஜமா?"

"உண்மைதான். ப்ரீமியர் சபா அறிவிக்கப் போகிறது. நாட்டை விட்டுச் செல்ல விரும்புபவர்கள் செல்லலாம். ஆனால் ஒரு நிபந்தனை... மறுபடி திரும்பக் கூடாது... அனுமதி கிடையாது..."

"ஹரி, நானும் ராகியும் இந்தக் கேடு கெட்ட நாட்டிலிருந்து தப்பிக்கப் போகிறோம்... சுதந்திரமான அடுத்த நாடு.. மக்களுக்குச் சுதந்திரம் அளிக்கும் நாடு... ஹரி..நீ?"

"நான் வர மாட்டேன்!"

"ஏன்?"

"எதற்கோ. சத்யா, போவதென்றால் உடனே கிளம்பு!"

சத்யாவும் ராகினியும் லிபரேஷன் ஸ்கொயரை அடைந்து பார்த்த போது அங்கே மக்கள் வெள்ளம் திரண்டிருந்தது. எல்லைக் கதவின் திறப்பு பற்றி அறிவிக்கப் பட்ட போது, அவர்கள் — முக்கியமாக இளைஞர்கள் — இளம் பெண்கள் — பாட்டு — நடனம் — கொண்டாட்டம் என்று உற்சாகமானார்கள்.

இளைஞர்கள் சாம்பெய்ன் பாட்டிலை விடுவித்து நுரை பரப்பினார்கள். அனைவரும் கண்மண் தெரியாமல் உற்சாக வெறியில் ஆடினார்கள்.

சத்யாவும், ராகினியும் அவர்களோடு சேர்ந்து ஆடினார்கள். சிறிது நேரத்தில் சாம்பெய்ன் மதுவின் வழுக்கலில் ராகினி தடுமாறி விழ, உற்சாக வெறியிலிருந்த கூட்டத்தினர் தங்களையறியாமலேயே அவளை மிதிக்க, அவள்மயக்கமானாள்.

சத்யா பதறிக் கொண்டு அவளை மருத்துவ முகாமுக்கு எடுத்துச் சென்றான். மருத்துவமளித்த டாக்டர்கள், அவள் கூட்டத்தில் பட்ட நெரிசலில் வயிற்றிலிருந்த கரு அபார்ஷனாகி விட்டதாகச் சொன்னார்கள்!



"சாப்பிடற ஓட்டலை அடிக்கடி ஏன் மாத்திக்கிட்டே இருக்கே?"

"ஒரே ஓட்டல்ல அடிக்கடி மாவாட்ட வெட்கமா இருக்கு...!"

— எஸ். ப்ரியதர்சினி.



மனப் பொருத்தம்



எல்லோரையும் போல ஏராளமான கனவுகளுடன் திருமண பந்தத்தில் காலெடுத்து வைத்தாள் மீரா. அறிவுள்ள கணவன், நிச்சயம் கனிவான காதலனாக வும் இருப்பான். அவன் காதல் பார்வை யிலும் பேச்சிலும் அவள் பெண்மை உருகும்.. வானும் நிலவும் போல நாங்கள் இருப் போம். விளம்பரங்களில் வரும் ஜோடிக ளைப் போல ஒருவர் மற்றவருக்காக என்று ஆதர்ச தம்பதியாய் வாழ்வோம் என்று கனவு கண்டாள். ஆனால் அவள் நினைத் தது நடக்கவில்லை. கணவனாக வாய்த்த வனைப் பற்றி என்ன சொல்ல?

சதா சர்வகாலமும் முன்னங்கால்களில் ஓடிக் கொண்டிருக்கும் ஒரு முகடு. ஊரா ருக்கு ஓடி ஓடி இன்முகத்துடன் உபசாரம் செய்யும் பரோபகாரி. வீட்டில் மட்டும் எந்த் நேரமும் பேப்பரிலோ, புத்தகத்திலோ தலை யைக் கவிழ்த்துக் கொண்டிருக்கும் புழு. எதை யும் ரசிக்கத் தெரியாது. என்னதான் சமையல் அமிர்தமாக அமையட்டுமே புகழ்ந்து ஒரு வார்த்தை... இல்லை, வாயில் வைக்க முடி யாத உணவை இகழ்ந்து ஒரு சொல்... ஊஹூம். ஜடம்போல உண்பதோடு சரி. வீட்டில் அவள் செய்யும் மாற்றங்களையோ, விசேஷமாகச் செய்து கொள்ளும் அலங்கா ரத்தையோ... வெறுமையாகப் பார்ப்ப தோடு சரி.

இது என்ன ஜோடிப் பொருத்தமோ?

மீரா போற்றி வளர்க்கப்பட்ட பெண். அவளுக்கு எதிலுமே ஓர் அதீத ஆர்வம். எதையும் ஆழ்ந்து அனுபவிக்கும் ரசனை, கலகலவென்று பேச்சு. வாழ்க்கை அவளுக்கு ஒரு சந்தோஷப் பரிசோதனை. வாயைத் திறக்காமல் இருக்கும் கணவனுடன் ஒத்துப் போக அவளால் முடியவில்லை. திருமண மாகி நான்கு வருடங்களில் அவனுக்கு என்ன பிடிக்கும் என்று கூடச் சொன்னதில்லை. எந்நேரமும் ஜடம் போல இருக்கும் இந்த மனிதனை எப்படி சந்தோஷப்படுத்துவது என்று அவள் மனம் குழம்பும். சளசள வென்று அருவியாக ஓடியவள் எப்படிச் சட்டென்று அடங்கிப் போக முடியும்?

மனம் விட்டுத் தன் குறையைச் சொன் னாலோ... 'நீ இன்னும் குழந்தை போல

பானுகுமார்

இருக்கிறாய். கனவுலகத்தை விட்டு இறங்கி வா. நிஜ வாழ்க்கையில் தினமும் மரத்தைச் சுற்றி டூயட் பாடவா முடியும்?' என்று ஒரே கேள்வியில் முற்றுப்புள்ளி வைக்கும் இந்த மனிதனிடம் என்ன பேசுவது?

பொறுத்துப் பொறுத்துப் பார்த்துக் கடைசியில் தன் அப்பாவிடம் ஆலோசனை கேட்டாள்.

"மீரா, ஒரு கண்ணை மூடிக் கொண்டு பார்த்தால் குற்றம்தான் கண்ணில் படும். நீ எதிர்பார்ப்பது போல உன் கணவனிடம் ஒரு வேகமான உற்சாகம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவரிடம் அறிவில்லையா, எல்லோருக்கும் உதவும் பெருந்தன்மை, நல்ல பண்புகள் இல்லையா? எப்படி கலகலவென்று இருப்பது உன் சுபாவமோ, அது போல அமைதியாக இருப்பது அவர் சுபாவம். பார்க்கப் போனால் இது நல்லது. இரண்டு பேரும் ஒருத்தருக்கொருத்தர் நிறைவு செய்யலாம்."

"ஏம்பா, பெண் மனம் ஒரு பூ மாதிரி, அதைப் புரிஞ்சுக்காதவன் கல்லுக்குச் சமானம்னு நீங்கதானே சொல்வீங்க?"

"உன் கணவன் உன்னைப் புரிஞ்சுக்காம இல்லையே! உன் சுபாவத்திற்கு அவர் தடை விதிக்கிறாரா இல்லையே! அவருக்கு உன் மேல் பாசமில்லையா? நீ ஜுரத்தில் விழுந்தால் உனக்குப் பணிவிடை செய்வதில் அவர் அன்பு தெரியவில்லையா? உன் வாழ்க்கை முன்னேற உழைப்பதில் காதல் இல்லையா? தலையை வலித்தால் தைலம் தடவுவார்கள். உனக்குப் பிடிக்குமே என்று பெரிய பூங்கொத்து வாங்கி வந்து, 'கெட் வெல்' என்று 'கார்ட்' எழுதி வைத்தால் உன் தலைவலி போய்விடுமா? ஏன்தான் இந்த மேல்பூச்சுக் காதலை எதிர்பார்க்கிறாயோ? உள்ளே இருக்கும் மனத்தின் ஆழத்தைப் புரிந்து கொள்ளேன்."

"அதற்காக எப்பவும் 'உம்'மென்று இருந்தால்?"

"ஏதோ அவருக்குச் சொல்லத் தெரியவில்லை. அது அவர் குணம். நீ எப்படி எல்லாவற்றையும் உணர்ச்சிபூர்வமாகப் பார்க்கிறாயோ, அப்படி உன் கணவர் அறிவுபூர்வமாகப் பார்க்கிறார். இதில் தப்பு என்ன? அணுகுமுறையில் இடைவெளி, அவ்வளவுதானே!"

"ஆமாம். மற்றவர்களிடம் மட்டும் எப்போதும் இளித்துப் பேசுவார்..."

"வெளி உலகத்தில் வேஷம் போட வேண்டிய நிர்ப்பந்தம். வீட்டுக்குள்ளுமா போட வேண்டும்? காலை நீட்டி அக்கடாவென்று வேஷங்களை உதறி விட்டு உட்காரும் இடம்தான் வீடு. இங்கேயும் இனிய புன்னகையுடன் கையில் மலர்ச்செண்டுடன் வளைய வரவேண்டுமென்றால்... எப்போதுதான் நாம் சுயவெளிப்பாட்டுடன் இருப்பது? வீட்டில் இருக்கும் உருவம்தான் சுயரூபம். நீ கூடத்தான் வெளியில் செல்லும் பொழுது 'பளிச்'சென்று அழகாக உடுத்துகிறாய். அப்போது எவனுமே உன்னை ரசனையுடன் பார்ப்பான். ஆனால் தூங்கி எழுந்து தலைவிரித்துப் பூதம் போல இருக்கும் மனைவியை ஓர் அன்புடைய கணவனால்தான் காதலிக்க முடியும். வெளித் தோற்றத்திற்கே இப்படியென்றால் மனசைப் பற்றிச் சொல்வானேன்? உன்னை உன் கணவன் ஒப்புக் கொள்வதைப் போல, நீயும் அவன் குறைகளை ஒப்புக் கொள்ள வேண்டும். இதற்குத் தான் சொல்கிறார்கள், திருமணமென்பது வயது வந்தவர்களுக்கு மட்டும் என்று. இது உடல் பக்குவத்திற்காக மட்டுமில்லை, மனப் பக்குவத்திற்காகவும்தான்..."

அப்பா சொல்லச் சொல்ல, மீராவின் பார்வை புதிய கோணம் பெற்றது.

"பத்தையும் தொண்ணூறையும் கூட்டினா என்னங்க?"

"நூறுங்க."

"150 லிருந்து ஐம்பதைக் கழிச்சா?"

"நூறு!"

"பத்தைப் பத்தால பெருக்கினால்?"

"அதுவும் நூறுதான்!"

"இருநூறை இரண்டால வகுத்தால்?"

"அப்பவும் நூறுதான் வரும். ஆமாம், இதெல்லாம் எதுக்குக் கேட்கிறீங்க?"

"அடப்பாவி! என்கிட்ட பத்து மாசத்துக்கு முன்னாடி வாங்கின நூறு ரூபாய்க் கடன் இன்னுமா உன் ஞாபகத்துக்கு வரலை?"

— வி. ராஜாராமன்.






ஒருத்தர்: "இந்த ஆபீஸ்ல பேய் உலவுறதா எல்லாரும் பேசிக்கிறாங்களே...?"

ஊழியர்: "ஒரு பத்து ரூபா வெட்டுங்க... விவரம் சொல்றேன்."

ஒருத்தர்: "ம்... இந்தாங்க; இப்பச் சொல்லுங்க."

ஊழியர்: "அது வேற ஒண்ணுமில்லே, லஞ்சப் பேய்தான்!"

— வி. ரேவதி.



பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 47

நந்தினியின் மறைவு!

ஓடி வந்த குதிரைகளைப் பார்த்து வியந்தவர்களில் முதலில் சுய உணர்வு பெற்றவன் ரவிதாஸன்தான்..

"தேவி! இந்தப் போலி வைஷ்ணவன் தன் வேலைத்தனத்தைக் காண்பித்து விட்டான். 'இவன் ஒற்றன். இவனை நம்ப வேண்டாம்' என்று எத்தனையோ தடவை தங்களுக்கு நான் எச்சரித்திருக்கிறேன். நம்மைப் பிடிப்பதற்கு இவன்தான் ஆட்களைக் கொண்டு வந்திருக்கிறான். ஆனால் இவனால் நம்மைப் பிடிக்க முடியாது. இவனுடைய தெய்வமாகிய நாராயணனே வந்தாலும் முடியாது. வாருங்கள் போகலாம். குதிரைகள் வருவதற்குள் மலைமேல் ஏறி விடலாம்!" என்றான் மந்திரவாதி.

ஆழ்வார்க்கடியான், "நந்தினி! இந்தப் பாதகர்களுடன் நீ போகாதே! இவர்களுடன் நீ சேர்ந்ததினால் நேர்ந்த விபத்துக்கள் எல்லாம் போதும்!" என்றான்.

நந்தினி ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, "திருமலை! நான் வெகு நாளாக ஒன்று கேட்டுக் கொண்டிருந்தேன். அது நினைவு இருக்கிறதா? என் அன்னையிடம் அழைத்துப் போகும்படி உன்னை வேண்டிக்கொண்டிருந்தேன். இப்போதாவது என்னை நீ என் தாயிடம் அழைத்துப் போவதாக வாக்களித்தால் உன்னுடன் வருகிறேன். இல்லாவிடில் இவர்களுடன் போகிறேன்" என்றாள்.

"நந்தினி! இனி என்னால் அது இயலாத காரியம்....!" என்று திருமலை சொல்வதற்குள், ரவிதாஸன் குறுக்கிட்டு, "இவன் என்ன அழைத்துப் போவது? நான் அழைத்துப் போகிறேன், வாருங்கள்!" என்றான்.

"ஆமாம், ஆமாம்; இவன் உன்னை உன் அன்னையிடம் யமலோகத்துக்கு அழைத்துப் போவான்! உன் அன்னையைக் கொன்றது போல் உன்னையும் கொன்று யம லோகத்துக்கு அனுப்பி வைப்பான்! நந்தினி! இந்தப் பாதகர்களுடைய சகவாசம் இனியும் உனக்கு வேண்டாம். இவர்களில் ஒருவன் உன் தாயைக் கொன்றவன்! மந்திரவாதியின் முகத்தைப் பார்! கொலைகாரன் என்று எழுதியிருக்கிறது!" என்று சொன்னான் ஆழ்வார்க்கடியான்.

ரவிதாஸன் முகத்தில் கொந்தளித்த கோபத்துடன் "பொய்! பொய்!" என்று கத்தினான்.

சற்று முன் சாந்தம் குடி கொண்டிருந்த நந்தினியின் கண்களில் வெறியின் அறிகுறி காணப்பட்டது.

"திருமலை! இது உண்மையா? என் அன்னை உண்மையிலேயே இறந்து விட்டாளா? அவளை இனி

அமரர் கல்கி

நான் பார்க்க முடியாதா?'' என்றாள்.

''சந்தேகமிருந்தால், இதோ இந்தப் பெண்ணைக் கேட்டுத் தெரிந்து கொள். இவர்களில் ஒருவனான சோமன்சாம்பவன் தான் வேல் எறிந்து உன் அன்னையைக் கொன்றவன். இவள் நேரில் பார்த்தாள். அத்தையைக் கொன்றவனைப் பின் தொடர்ந்து வந்தாள்! பூங்குழலி! சொல்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''ஆமாம்! நானே என் கண்ணால் பார்த்தேன்! என் அத்தையைக் கொன்றவனைப் பழி வாங்கவே இங்கு வந்தேன்!'' என்றாள் பூங்குழலி.

நந்தினி பைத்தியம் பிடித்தவள் போல் வெறி கொண்ட சிரிப்புச் சிரித்தாள். ''பழி வாங்க வந்தாயா? பழி! பழி! நான் ஒருத்தி பழி வாங்கிய இலட்சணம் போதாதா?'' என்று சொல்லி விட்டு, ரவிதாஸனைப் பார்த்து, ''துரோகி! சண்டாளா! இப்படியா செய்தாய்?'' என்றாள்.

''ராணி! நீ நினைப்பது தவறு! நான் ஒரு துரோகமும் செய்யவில்லை. சோமன் சாம்பவன் சக்கரவர்த்தியின் மீது வேலை எறிந்தான். அந்த ஊமைப் பைத்தியக்காரி குறுக்கே விழுந்து செத்தாள்! அவள் தலைவிதி! இப்போது நீ என்ன சொல்கிறாய்? எங்களுடன் வரப் போகிறாயா, இல்லையா? அதோ, குதிரைகள் நெருங்கி வந்து விட்டன!'' என்றான்.

அவனுடைய வார்த்தைகளை நந்தினி காதில் வாங்கிக் கொண்டதாகத் தோன்றவில்லை. திடீரென்று கீழே உட்கார்ந்து கொண்டாள். இரண்டு கண்களையும் இரண்டு கரங்களால் பொத்திக் கொண்டாள். அவள் உடம்பெல்லாம் குலுங்கும்படி விம்மி அழுதாள். அழுகையுடன் வெறிச் சிரிப்பும் கலந்து வந்தது.

ரவிதாஸன் தன் ஆட்களைப் பார்த்து, ''ஓடுங்கள்! ஓடிப்போய் மலையிலேறிக் கொள்ளுங்கள்! இனி, ராணியை நம்புவதில் பயனில்லை!'' என்றான்.

எல்லோரும் ஓடினார்கள்.

ரவிதாஸன், ''வைஷ்ணவனே! இந்தா, உன் விஷமத்துக்குக் கூலி!'' என்று சொல்லிக் கையிலிருந்த தடியினால் வைஷ்ணவனின் தலையில் ஒரு அடி போட்டு விட்டு ஓட்டம் எடுத்தான்.

ஆழ்வார்க்கடியான் ''நமோ நாராயணா!'' என்று சொல்லித் தலையை ஒரு முறை தடவிக் கொண்டான்.

ஓடியவர்கள் எல்லாரும் மலைக் குகைக்குள் நுழைந்தார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் குகைக்கு மேலே குன்றின் உச்சியில், காளாரி ஆறு அருவியாக மாறி விழும் இடத்தின் அருகே நின்றார்கள்.

அதே சமயத்தில் குதிரைகள் மலை அடிவாரத்துக்கு வந்து சேர்ந்தன. சரியான வழியில்லாமல் பெரிய பெரிய பாறைக் கற்கள் எங்கும் பரவிக் கிடந்தபடியால் குதிரைகள் வந்து சேர்வதற்கு இத்தனை நேரம் பிடித்தது.

குதிரைகள் மீது வந்தவர்களில் முன்னால் வந்தவர்கள் சின்னப் பழுவேட்டரையரும் கந்தமாறனுந்தான் என்பதை ஆழ்வார்க்கடியான் பார்த்துக் கொண்டான். அவர்களுக்குப் பின்னால் சேந்தன் அமுதன் ஒரு குதிரையின் மீது கயிற்றினால் சேர்த்துக் கட்டப்பட்டு வருவதையும் பார்த்தான்.

''வாருங்கள்! வாருங்கள்! நல்ல சமயத்தில் வந்து சேர்ந்தீர்கள்!'' என்றான்.

சின்னப் பழுவேட்டரையரும் கந்தமாறனும் குதிரைகளின் மீதிருந்து கீழே குதித்தார்கள்.

கீழே உட்கார்ந்து விம்மிக் கொண்டிருந்த நந்தினியின் பேரில் முதலில் அவர்கள் கவனம் சென்றது.

கந்தமாறன் நந்தினியின் அருகில் சென்றான். ஏதோ சொல்லப் பிரயத்தனப் பட்டான். ஆனால் அவன் வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லை.

சின்னப் பழுவேட்டரையர் ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, ''வைஷ்ணவனே! நீ எப்படி இங்கே வந்தாய்? எதற்காக வந்தாய்?'' என்று கேட்டார்.

''தளபதி! தாங்கள் யாரைத் தேடிக் கொண்டு வந்தீர்களோ, அவரைத் தேடிக் கொண்டுதான் நானும் வந்தேன். பெரிய பழுவேட்டரையர் அதோ அந்தக் குகைக்குள் இருக்கிறார்!'' என்றான்.

''நிஜமாகவா? உயிரோடு இருக்கிறாரா?'' என்று சின்னப் பழுவேட்டரையர் ஆவலோடு கேட்டார்.

''ஆமாம்; இன்னும் உயிரோடு இருக்கிறார். தங்கள் தமையனாரிடம் அணுகுவதற்கு யமனும் பயப்படுவான் அல்லவா? ஆகையால் அதோ அந்தக் கொலைகாரர்கள் செய்த முயற்சி தங்கள் தமையனார் விஷயத்தில் பலிக்கவில்லை!'' என்று சொல்லி விட்டுத் திருமலை குன்றின் உச்சியில் நின்ற ரவிதாஸன் முதலியவர்களைச் சுட்டிக் காட்டினான்.

''அவர்கள் யார்? ஏன் அவர்களைக் கொலைகாரர்கள் என்று சொல்கிறாய்?''

''அவர்கள்தான் மந்திரவாதி ரவி

தாஸனும் அவனுடைய கூட்டத்தாரும். வீர பாண்டியனுடைய ஆபத்துதவிப் படையைச் சேர்ந்தவர்கள். சக்கரவர்த்தியைக் கொல்ல முயன்றவர்கள் அவர்கள்தான்; இளவரசர் ஆதித்த கரிகாலரைக் கொன்ற பாவிகளும் அவர்களேதான்!'' என்றான் திருமலை.

கந்தமாறன் குறுக்கிட்டு, "பொய்! பொய்! இளவரசரைக் கொன்றவன் வந்தியத் தேவன்! உன் சிநேகிதன் செய்த குற்றத்தை மறைக்கப் பார்க்கிறாயா?'' என்றான்.

''முட்டாளே! சும்மா இரு!'' என்று சின்னப் பழுவேட்டரையர் அவனை அதட்டினார். பின்னர் வைஷ்ணவனைப் பார்த்து, ''தனாதிகாரியையும் அவர்கள் கொல்லப் பார்த்தார்களா? எப்படித் தப்பினார்?'' என்று கேட்டார்.

''இதோ உட்கார்ந்து விம்மிக் கொண்டிருக்கும் பழுவூர் இளைய ராணியின் உதவியினால்தான் தப்பினார்!''

''ஏன் இளைய ராணி அழுது கொண்டிருக்கிறாள்?''

''அவருடைய அன்னை இறந்து விட்டாள் என்று கேள்விப்பட்டார். அதனால் அழுகிறார்! இதெல்லாம் பிறகு விசாரித்துக் கொள்ளக் கூடாதா?''

''ஆம், ஆம்! பெரிய பழுவேட்டரையரை முதலில் பார்க்க வேண்டும். நீ போய் நான் வந்திருப்பதைச் சொல்லு!''

சின்னப் பழுவேட்டரையருக்குத் தம் தமையனாரிடம் உள்ள பயபக்தி அச்சமயம் கூடச் சிறிதும் குன்றவில்லை. ஆகையால் திடீரென்று தமையனாரைப் போய்ப் பார்க்க அவர் தயங்கினார்.

''ஐயா! தங்கள் தமையனார் இனி எங்கும் போய்விட மாட்டார். நான் போய்த் தாங்கள் வந்திருப்பதைச் சொல்லுகிறேன். அதோ அந்தக் கொலைகாரர்களைப் பிடிக்கத் தாங்கள் எதுவும் செய்யப் போவதில்லையா?''

சின்னப் பழுவேட்டரையர் தம் நெற்றியைக் கையினால் அழுத்திக் கொண்டு, ''ஆம், ஆம்! முன்னொரு சமயம் இப்படித்தான் என் புத்தி தவறி விட்டது! சக்கரவர்த்தியைக் கொல்ல முயன்றவனைத் தப்பி ஓடும்படி விட்டேன்!'' என்றார்.

''அவனும் தப்பிவிடவில்லை. அதோ அந்தக் குன்றின் மேலேதான் இருக்கிறான். உங்கள் ஆட்களுக்குச் சீக்கிரம் கட்டளையிடுங்கள்!''

உடனே தளபதி காலாந்தக கண்டர் தம்முடன் வந்த வீரர்களைப் பார்த்துக் கட்டளை பிறப்பித்தார். அவர்கள் குதிரைகள் மீதிருந்து இறங்கிக் காளாரி நதி குன்றின் மீதிருந்து அருவியாக விழும் இடத்துக்கு அருகாமையில் போய்ச் சேர்ந்தார்கள்.

அவர்கள் அங்கே சேர்ந்ததும் மேலேயிருந்து பெரிய பெரிய உருண்டைக் கற்கள் கீழே விழ ஆரம்பித்தன. வீரர்கள் அந்தக் கற்கள் தங்கள் தலையில் விழாமல் தப்புவதற்காக அங்கு மிங்கும் அவசரமாக நகர்ந்தார்கள். இரண்டொருவர் அக்கற்களினால் தாக்குண்டு கீழே விழுந்தார்கள்.

சின்னப் பழுவேட்டரையர், ''அவர்கள் எப்படி மேலே ஏறினார்கள்? தெரியுமா?'' என்று கேட்டார்.

''குகைக்குள் புகுந்து ஏறினார்கள். குகையில் இரகசிய வழி இருப்பதாகத் தோன்றுகிறது. வாருங்கள், போய்ப் பார்க்கலாம்!'' என்று ஆழ்வான் முதலில் சென்றான். காலாந்தக கண்டரும் கந்தமாறனும் பின் தொடர்ந்தார்கள்.

குகைக்குள்ளேயிருந்து ஒரு நெடிய கம்பீரமான உருவம் தட்டுத் தடுமாறித் தள்ளாடிக் கொண்டு வெளியில் வந்தது. குகை வாசலில் நின்று, நெருங்கி வருகிறவர்களை உற்றுப் பார்த்தது.

தமையனாரை அடையாளங் கண்டு கொள்ளத் தம்பிக்குச் சிறிது நேரம் பிடித்தது.

உடம்பெல்லாம் காயங்களுடன் முகம் வெளுத்துப் பிரேதக்களை பெற்று நின்ற பெரிய பழுவேட்டரையரை அடையாளம் தெரிந்ததும், சின்னப் பழுவேட்டரையர், ''அண்ணா!'' என்று அலறிக் கொண்டு போய்ப் பெரிய பழுவேட்டரையரைக் கட்டிக் கொண்டார்.

அண்ணனின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. அவருடைய வாய், ''தம்பி! நீ பலமுறை எச்சரிக்கை செய்தாய்! அதைப் பொருட்படுத்தாமல் மோசம் போனேன்!'' என்று தழுதழுத்த மெல்லிய குரலில் முணுமுணுத்தது.

அச் சமயம் ஆழ்வார்க்கடியானும் கந்தமாறனும் குகைக்குள் பிரவேசிக்க யத்தனித்தார்கள்.

பெரிய பழுவேட்டரையர் அவர்களைத் தடுத்து நிறுத்தி, ''எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்டார்.

''கொலைகாரர்கள் இந்தக் குகைக்குள்ளே புகுந்தார்கள்...''

''எந்தக் கொலைகாரர்கள்?''

''மந்திரவாதி ரவிதாஸனும் அவனுடைய கூட்டாளிகளும்.''

''அவர்கள் கொலைகாரர்கள் அல்ல''

என்றார் பெரிய பழுவேட்டரையர்.

"பார்த்தீர்களா? வந்தியத்தேவன் தான் கொலைகாரன் என்று நான் சொல்ல வில்லையா?" என்றான் கந்தமாறன்.

பெரிய பழுவேட்டரையர் அவனை உற்றுப் பார்த்து விட்டு, "இந்த முட்டாள் வாலிபன் எப்படி இங்கே வந்து சேர்ந்தான்?" என்றார்.

"கந்தமாறன் தான் கடம்பூரிலிருந்து செய்தி கொண்டு வந்தான்."

"என்ன செய்தி?"

"இளவரசர் கரிகாலர் இறந்து விட்ட செய்தியைக் கொண்டு வந்தான். நம்முடைய பலத்தை உடனே திரட்டிச் சேர்த்து மதுராந்தகரைச் சிம்மாசனம் ஏற்ற ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சம்புவரையர் இவன் மூலமாகச் செய்தி அனுப்பி வைத்திருக்கிறார்!"

"ஆகா! அப்படியா?" என்று பெரிய பழுவேட்டரையர் சிறிதும் உற்சாகமின்றிக் கூறினார்.

பிறகு, "தஞ்சாவூரில் நிலைமை எப்படியிருக்கிறது?" என்று கேட்டார்.

"அண்ணா! விவரமாகக் கூற வேண்டும். தாங்கள் மிக்க பலவீனமாக இருக்கிறீர்கள். தயவு செய்து உட்கார்ந்து கொண்டு பேசலாமா!" என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

தனாதிகாரி குகையின் வாசலிலேயே உட்கார்ந்து கொண்டார்.

"ஐயா! சற்று இடம் கொடுத்தால், குகைக்குள்ளே போய்க் குன்றின் மேல் ஏற வழி இருக்கிறதா என்று பார்க்கலாம்" என்றான் வைஷ்ணவன்.

"எதற்காக?" என்றார் பெரிய பழுவேட்டரையர்.

"ரவிதாஸன் கூட்டத்தார் இந்தக் குகையில் புகுந்துதான் குன்றின் மேலே ஏறினார்கள்" என்றான் திருமலை.

பெரிய பழுவேட்டரையர் தலையை அசைத்து விட்டு, "குகைக்குள் போவதில் உபயோகமில்லை, அப்பனே! அவர்கள் மேலேயிருந்து பாறையைப் புரட்டித் தள்ளிக் குகை வழியையும் அடைத்து விட்டார்கள். பாறை என் மேல் விழுவதற்கிருந்தது. என் உயிர் தப்பியதே தெய்வச் செயல் தான்! போங்கள்! நீங்கள் இருவரும் போங்கள்! மலை மேல் ஏறுவதற்கு வேறு வழி இருக்கிறதா, பாருங்கள்!" என்றார்.

ஆழ்வார்க்கடியானும் கந்தமாறனும் அப்பால் சென்ற போது பெரிய பழுவேட்டரையருடைய பார்வை சேந்தன் அமுதன் — பூங்குழலி இவர்கள் பேரில் விழுந்தது.

"அவர்கள் யார்? எங்கு வந்தார்கள்?" என்று கேட்டார்.

"அந்தப் பெண் கோடிக்கரைத் தியாக விடங்கரின் மகள் பூங்குழலி. அவள் தன் அத்தையைக் கொன்றவனைத் தேடிக் கொண்டு வந்தாள். அவளைத் தேடிக் கொண்டு சேந்தன் அமுதன் வந்தான். சேந்தன் அமுதன் வழி காட்டித்தான் நாங்கள் இங்கு வந்து தங்களைக் கண்டு பிடித்தோம்!" என்றார் சின்னப்பழுவேட்டரையர்.

"தஞ்சாவூரில் நடந்ததையெல்லாம் விவரமாகச் சொல்!" என்றார் பெரிய பழுவேட்டரையர். சின்னப் பழுவேட்டரையர் அவ்வாறே சொல்லலுற்றார். மந்திரவாதிக் கூட்டத்தில் ஒருவன் பொக்கிஷ நிலவறையில் ஒளிந்திருந்து, சக்கரவர்த்தியைக் கொல்லுவதற்காகச் சமயம் பார்த்திருந்து வேலை எறிந்ததையும் சக்ரவர்த்தியைக் காப்பாற்றுவதற்காக மந்தாகினி தேவி இடையில் புகுந்து உயிரை விட்டதையும் சொன்னார். பிறகு அவர் தொடர்ந்து கூறியதாவது:—

"அண்ணா! இதற்கிடையில் கொடும்பாளூர் வேளான் பெரிய சைன்யத்துடன் திடீர் என்று வந்து தஞ்சாவூர்க் கோட்டையை முற்றுகையிடத் தொடங்கினான். தாங்கள் இல்லாதபடியால் வேளானுடன் போர் தொடங்குவதா, இல்லையா என்று என்னால் நிச்சயிக்க முடியவில்லை. சக்கரவர்த்தியை யோசனை கேட்கவும் முடியவில்லை. முதன் மந்திரி அநிருத்தர் கோட்டைக்குள்ளேதான் இருக்கிறார். அவர் தாங்கள் வந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்றும், அதுவரை கோட்டையைப் பாதுகாத்தால் போதும் என்றும் கூறினார். நல்ல வேளையாக இச் சமயத்தில் இளவரசர் அருள்மொழிவர்மரும் கொடும்பாளூர் வேளானுடைய மகள் வானதியும் கோட்டைக்குள் வந்து சேர்ந்தார்கள். இளவரசர் யானைப்பாகன் வேடத்தில் வந்தார். வானதி பழையாறை இளையபிராட்டியிடமிருந்து அவசரச் செய்தி கொண்டு வந்திருப்பதாகக் கூறினாள். வேளானுடைய மகள் கோட்டைக் குள்ளே இருப்பது நமக்கு அநுகூலந்தானே என்று நினைத்து அவள் ஏறி வந்த யானையை உள்ளே விட்டேன். சக்கரவர்த்தியின் அரண்மனை வாயிலிலே யானைப் பாகன்தான் இளவரசர் அருள்மொழி வர்மர் என்று தெரிந்தது. நான் கொஞ்சம் மிரண்டுதான் போய் விட்டேன். அண்ணா! சின்ன இளவரசரிடம் ஏதோ அதிசய சக்தி இருக்கத்தான் செய்கிறது. அவர் திருமுகத்தைப் பார்த்ததும் எனக்கே கைகால் வெல

வெலத்து விட்டது; நெஞ்சம் இளகி விட்டது. என்னை அறியாமல் என் கைகள் கூப்பிக் கொண்டன. அவரை வணங்கி வரவேற்க வேண்டியதாகி விட்டது. சோழ நாட்டு மக்கள் இளவரசர் அருள்மொழி வர்மர் என்றால் தலைகால் தெரியாமல் கூத்தாடுவதில் வியப்பில்லைதானே?....''

''போதும் போதும்! அதுதான் தெரிந்திருக்கிறதே! அருள்மொழிவர்மன் கடலில் முழுகி இறந்தான் என்பதெல்லாம் கட்டுக் கதை என்று நான் எண்ணியதும் சரியாய்ப் போய் விட்டது. அப்புறம் நடந்ததைச் சொல்லு! இளவரசர் எதற்காக யானைப் பாகன் போல் வேஷம் பூண்டு கோட்டைக்குள் வந்தார்?'' என்று பழுவேட்டரையர் கேட்டார்.

''இளவரசர் என்று தெரிந்தால் கொடும்பாளூர் வேளான் அவரைத் தடுத்து நிறுத்திக் கொள்வான். கோட்டைக்குள் போக விட மாட்டான். வேளானுடைய படை வீரர்களும் பெரிய ஆர்ப்பாட்டம் செய்வார்கள் என்று எண்ணி அவ்வாறு மாறு வேடம் பூண்டு வந்தாராம். அந்த வரையில் இளவரசரைப் பாராட்டத்தான் வேண்டும். இளவரசர் சக்கரவர்த்தியைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த சமயத்திலேதான் மேலேயிருந்து கொலைகாரன் வேல் எறிந்தான். தெய்வாதீனமாக அது அந்த ஊமைப் பைத்தியத்தின் பேரில் விழுந்து அவள் இறந்தாள். சக்கரவர்த்தியின் பேரில் விழுந்து அவர் இறந்திருந்தால், நம்முடைய குலத்துக்கு என்றும் அழியாத களங்கம் ஏற்பட்டிருக்கும்...''

பெரிய பழுவேட்டரையர் தமது வாய்க்குள்ளே ''இப்போது களங்கம் ஏற்படவில்லையா, என்ன? தீராத களங்கம் ஏற்பட்டுத்தான் விட்டது!'' என்று முணுமுணுத்தார்.

''அண்ணா! என்ன சொன்னீர்கள்?'' என்று காலாந்தககண்டர் கேட்டார்.

''ஒன்றுமில்லை; மேலே நடந்ததைச் சொல்லு!'' என்றார் தனாதிகாரி.

''அப்புறம் ஒரு பெரிய அற்புதம் நடந்தது. வெகு காலமாக நடமாட முடியாமலிருந்த சக்கரவர்த்திக்குத் திடீரென்று கால்களில் சக்தி உண்டாகி விட்டது. ஓடிப் போய் அந்த ஊமையை எடுத்து மடியில் போட்டுக் கொண்டு புலம்ப ஆரம்பித்தார். சிறிது நேரம் நாங்கள் எல்லாரும் அந்தக் காட்சியைக் கண்டு பிரமித்து நின்று கொண்டிருந்தோம். பூங்குழலி என்னும் இந்த ஓடக்காரப் பெண்தான் 'கொலைகாரனைப் பிடிக்கப் போகிறேன்' என்று கூவிக் கொண்டு ஓடினாள். அவள் நன்றாயிருக்க வேண்டும். அவள் மூலமாகத்தான் இன்று தங்களை இந்தக் கோலத்திலாவது பார்க்கும் பாக்கியம் கிடைத்தது.....''

பெரிய பழுவேட்டரையர் கண்களில் நீர் ததும்ப, ''தம்பி! புராண இதிகாசங்களில் தமையனிடம் பக்தியுள்ள தம்பிகளைப் பற்றிக் கேட்டிருக்கிறேன். ஆனால் உன்னைப் போல் பக்தியுள்ள சகோதரன் அவர்களில் யாரும் இருக்க முடியாது. போகட்டும்; அப்புறம் நடந்ததைச் சொல்!'' என்றார்.



"பூங்குழலியைப் பின்பற்றி நானும் பொக்கிஷ நிலவறையிலுள்ள சுரங்கப் பாதையில் சென்றேன். அங்கே இருட்டில் ஒருவனைக் கைப்பற்றினேன். அவன்தான் கொலைகாரனாயிருக்க வேண்டும் என்று நினைத்தேன். குரலைக் கேட்டதும், மதுராந்தகத்தேவன் என்று தெரிந்தது."

"அவன் எதற்காக நிலவறைப் பாதையில் வந்தானாம்?"

"அது எனக்கும் தெரியவில்லை. கேட்டதற்குச் சரியான மறுமொழியும் சொல்லவில்லை. கொலைகாரன் அவன்தான் என்ற சந்தேகம் யாருக்காவது உண்டாகி விடப் போகிறதே என்று எனக்குப் பயமாயிருந்தது...."

"ஒருவேளை உண்மை அதுதானோ, என்னமோ?"

"இல்லை, அண்ணா, இல்லை! அந்தச் சாதுப் பிள்ளை அவ்வளவு தூரத்துக்குப் போகக் கூடியவனல்ல. மேலும், வேலை எறிந்து விட்டு ஓடியவனை நானே கண்ணால் பார்த்திருந்தேன். மதுராந்தகன் பொக்கிஷ நிலவறையிலிருந்து வருவதற்கு இலேசில் சம்மதிக்கவில்லை. அவனை மெதுவாகச் சரிப்படுத்தி அரண்மனையில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டுக் காவலும் போட்டு விட்டு மறுபடியும் பொக்கிஷ நிலவறைக்குப் போக எண்ணினேன். அதற்குள் வேறு பெரிய சம்பவங்கள் நடந்து விட்டன. 'சக்கரவர்த்தி இறந்து விட்டார்' என்றும், யாரோ அவரைக் கொன்று விட்டார்கள் என்றும் வெளியிலே வதந்தி பரவி விட்டது. உடனே கொடும்பாளூர் வேளார் அவருடைய படை வீரர்களைக் கோட்டையைத் தாக்கும்படி கட்டளையிட்டு விட்டாராம். வேளிர் படையுடன் கைக்கோளர் படையும் வந்து சேர்ந்து கொண்டிருந்தது. நமது வீரர்கள் அச் சமயம் ஆயத்தமாக இல்லை. அவர்களுக்குக் கட்டளையிட நானும் கோட்டை வாசலில் இல்லை. ஆகையால் வேளிர் படை — கைக்கோளர் படை வீரர்கள் கோட்டைக் கதவுகளை உடைத்துக் கொண்டும் சுவர்களில் ஏறிக் குதித்தும் உள்ளே வரத் தொடங்கி விட்டனர். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு நான் கோட்டை வாசல் போய்ச் சேர்வதற்குள் பதினாயிரம் வீரர்கள் கோட்டைக்குள் நுழைந்து விட்டார்கள். நம்முடைய வீரர்களோ சுமார் இரண்டாயிரம் பேர்தான். அவர்கள் வெளியிலிருந்து வந்தவர்களோடு தீரத்தோடு போரிட்டார்கள். நான் போய்க் கட்டளையிட்டுச் சண்டையை நிறுத்தினேன். நமது வீரர்களையெல்லாம் ஒரே இடத்தில் சேர்த்துக் கொண்டேன். இனிக் கோட்டைக்குள் இருப்பதில் பயனில்லை என்று முடிவு செய்து கொண்டு நமது வீரர்களுடன் வெளிக் கிளம்பினேன். வேளிர் — கைக்கோளர் படைகள் எங்களைத் தடுத்து நிறுத்தப் பார்த்தன. தடுத்தவர்களையெல்லாம் வெட்டி வீழ்த்தி அதாஹதம் செய்து கொண்டு வெளியே வந்து விட்டோம். 'பழுவூர்க் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்காவது மதுராந்தகத் தேவருக்காவது ஒரு சிறிய கெடுதல் நேர்ந்தாலும் கொடும்பாளூர் வம்சத்தைப் பூண்டோடு அழித்து விடுவேன்' என்று பூதி விக்கிரம கேசரிக்குச் செய்தி அனுப்பினேன். பிறகு தாங்கள் கடம்பூரில் இருப்பீர்கள் என்று எண்ணிக் கொண்டு தங்களைச் சேர்வதற்காக விரைந்து வந்தேன். எதிரில் குடமுருட்டி ஆற்றின் கரையில் கந்தமாறன் குதிரை மேல் ஏறிப் பறந்து விழுந்து கொண்டு வந்தான். பழுவூர்ப் பனைக் கொடியைக் கண்டதும் நின்றான். அவன் கொண்டு வந்த செய்தி என்னை மேலும் திகைக்கும்படி செய்தது. தாங்கள் கடம்பூரிலிருந்து தஞ்சைக்குக் கிளம்பிச் சில நாட்கள் ஆயினவென்றும், தங்களுக்குப் பெரிய சம்புவரையர் செய்தி அனுப்பியிருப்பதாகவும் கூறினான். தாங்கள் தஞ்சைக்கு வந்து சேரவே இல்லையென்று தெரிந்ததும் அவனும் திகைத்துப் போய் விட்டான். பிறகு சம்புவரையர் என்னதான் செய்தி சொல்லி அனுப்பினார் என்று கேட்டேன். இளவரசர் கரிகாலர் இறந்து விட்டார் என்றும், அவரை வந்தியத்தேவன் கொன்று விட்டான் என்றும், ஆகையால் மதுராந்தகத் தேவரைச் சிம்மாசனத்தில் அமர்த்த இதுதான் தக்க சமயம் என்றும், அதற்கு வேண்டிய முயற்சிகளை உடனே செய்ய வேண்டும் என்றும், நம்மைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் ஓலை அனுப்பிப் படை திரட்ட வேண்டும் என்றும் பெரிய சம்புவரையர் சொல்லி அனுப்பினாராம். இது எனக்கும் சரியாகப்பட்டது. தாங்களும் நமது பலத்தைத் திரட்டும் வேலையில்தான் ஈடுபட்டிருப்பீர்களென்றும் சீக்கிரத்தில் வந்து விடுவீர்கள் என்றும் நம்பினேன். நமது பழுவூர்ப் படைகளை மண்ணியாற்றுக்கும் கொள்ளிடத்துக்கும் நடுவில் திருப்புறம்பயம் மேட்டில் கொண்டு போய் நிறுத்தினேன். உடனே ஓலைகள் எழுதச் சொல்லி, மழபாடித் தென்னவன் மழவராயர், குன்றத்தூர்க்கிழார், மும்முடிப் பல்லவராயர், தானதொங்கிக் கலிங்கராயர், வணங்காமுடி முனையதரையர், தேவசேநாதிபதிப் பூவரையர், அஞ்சாத சிங்க முத்தரையர், இரட்டைக் குடை இராஜாளியார் ஆகியவர்களுக்கெல்லாம் குதிரைத் தூதுவர்களை விரைந்து போகும்படி அனுப்

பினேன். அவர்கள் எல்லாரையும் படைகளைத் திரட்டிக் கொண்டு திருப்புறம்பயத்துக்குக் கூடிய சீக்கிரம் வந்து சேரும்படி எழுதியிருக்கிறேன். அண்ணா! தங்களுக்குச் சிறிதும் கவலை வேண்டாம்! கொடும்பாளூர் வேளானையும், திருக்கோவலூர் மலையமானையும் மறுபடியும் தலை எடுக்க முடியாதபடி அழித்துப் போட்டு விடுவோம். தஞ்சாவூர்க் கோட்டையை மறுபடியும் பிடித்து விடுவோம். மதுராந்தகத் தேவரையும் சிங்காதனத்தில் ஏற்றி விடுவோம்!'' என்று சின்னப் பழுவேட்டரையர் உற்சாகம் ததும்ப வீர கர்ஜனை புரிந்தார்.

ஆனால் அவருடைய வார்த்தைகள் பெரிய பழுவேட்டரையருக்குச் சிறிதும் உற்சாகம் அளித்ததாகத் தெரியவில்லை. அவருடைய கவனம் திடீரென்று வேறு பக்கம் திரும்பியது.

''தம்பி! அது யார்? முகத்தில் கையை வைத்துக் கொண்டு விம்மி அழுது கொண்டிருப்பது யார்?'' என்று கேட்டார்.

''அண்ணா! தெரியவில்லையா? அவர்தான் இளையராணி! பாவம்! தங்களைக் காப்பாற்ற முயன்றதில் ரொம்பக் கஷ்டப்பட்டுப் போயிருக்கிறார் போலும்! அவரைப் பற்றி நான் குறை கூறியதையெல்லாம் மன்னித்து விடுங்கள் அண்ணா! மந்திரவாதி ரவிதாஸனும் அவனுடைய கூட்டாளிகளும் தங்களைச் சிறைப்பிடித்துக் கொண்டு வந்தார்கள் என்றும், இளையராணிதான் தங்களைத் தொடர்ந்து வந்து காப்பாற்றினார் என்றும் அறிகிறேன். அது உண்மைதானே?'' என்றார் காலாந்தக கண்டர்.

பெரிய பழுவேட்டரையர், ''ஆம், ஆம்! இளையராணிதான் என் உயிரைக் காப்பாற்றினாள். நந்தினி பணிவிடை செய்திராவிட்டால் என்னை நீ உயிரோடு பார்த்திருக்க மாட்டாய். உலகத்துக்கு உண்மை தெரியாமலே போயிருக்கும்!'' என்று கூறினார்.

''இளையராணியின் ஒப்பற்ற பெருங்குணம் எனக்கே தெரியாமல் போய் விட்டதே! உலகத்துக்கு எப்படித் தெரியும்?'' என்றார் காலாந்தககண்டர்.

பெரிய பழுவேட்டரையர் அதைக் கவனியாமல், ''நந்தினி இன்னும் இங்கிருந்து போகவில்லையா? குகைப் படிகள் வழியாக ஏறிச் சென்றவர்களோடு அவளும் போயிருப்பாள் என்றல்லவா நினைத்தேன்?'' என்றார்.

''தங்களை விட்டு விட்டு இளையராணி எப்படிப் போவார், அண்ணா!'' என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

''அது போகட்டும்! நீங்கள் இந்த இடத்தில் நாங்கள் வந்திருப்பதை எப்படிக் கண்டுபிடித்து வந்தீர்கள்?'' என்று பெரியவர் கேட்டார்.

''திருப்புறம்பயம் பள்ளிப்படையருகில் நாங்கள் தங்கியிருந்தோம். கந்தமாறன் கொள்ளிடக்கரையோரமாகக் காவல் புரிந்து கொண்டிருந்தான். அங்கே சேந்தன் அமுதன் படகில் ஏற முயன்று கொண்டிருப்பதைப் பார்த்து அவனைப் பிடித்துக் கொண்டு வந்தான். சேந்தன் அமுதன் முன்னொரு தடவை வந்தியத்தேவனைத் தப்ப உதவி செய்ததற்காக அவனைச் சில காலம் நான் சிறையில் வைத்திருந்தது தங்களுக்கு நினைவிருக்கும். அவன் பேரில் கந்தமாறனுக்கு ஏற்கெனவே ரொம்பக் கோபம். இப்போதும் ஏதோ ஒற்றன் வேலை செய்கிறான் என்று சந்தேகித்துப் பிடித்துக் கொண்டு வந்தான். அவனிடம் விசாரித்த போது தங்களைப் பற்றித் தெரிந்தது. அவனுடைய மாமன் மகள் பூங்குழலி யாரோ கொலைகாரனைத் தொடர்ந்து தனியே சென்றதைக் கேள்விப்பட்டு இவன் அவளைத் தேடிக் கொண்டு புறப்பட்டானாம். பூங்குழலி அவனைத் தன்னுடன் வரக் கூடாது என்று சொல்லித் திருப்பி அனுப்பி விட்டாளாம். ஆயினும் இவன் அவளை அறியாமல் பின்னோடு தொடர்ந்து போனானாம். அப்போது திருப்புறம்பயம் பள்ளிப்படைக்கருகில் சதிகாரர்கள் சிலர் சேர்ந்து பேசுவதை அவன் அறிந்து ஒளிந்திருந்து கேட்டானாம். அப்போதுதான் தங்களை ரவிதாஸன் கூட்டம் சிறைப்பிடித்துப் பச்சைமலைப் பிராந்தியத்துக்குக் கொண்டு போயிருப்பதாகத் தெரிந்ததாம். பூங்குழலியும் வைஷ்ணவன் ஆழ்வார்க்கடியானும் பச்சைமலைக்குப் போவதை அறிந்து கொண்டு இவனும் அவர்களுக்குத் தெரியாமல் பின்தொடர முயற்சி செய்தானாம். இதையெல்லாம் கேட்டதும் நானும் கந்தமாறனும் ஐம்பது வீரர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டோம். சேந்தன் அமுதன் தானும் வருவதாகப் பிடிவாதம் பிடித்தான். அதுவும் நல்லதுதான் என்று அவனை ஒரு குதிரை மேல் கட்டிப் போட்டு அழைத்து வந்தோம்! வந்தது நல்லதாய்ப் போயிற்று. தங்களைக் கண்டுபிடித்து விட்டோம்! இனி என்ன கவலை? அண்ணா! உடனே புறப்படுங்கள். தங்களுக்கு யாதொரு சிரமமும் ஏற்படாமல் ஆட்களைக் கொண்டு தூக்கிப் போக ஏற்பாடு செய்கிறேன். இதற்குள்ளே திருப்புறம்பயத்தில் பெரும் சைன்யம் சேர்ந்திருக்கும்.

தஞ்சாவூர்க் கோட்டையை ஒரு ஜாம நேரத்தில் திரும்பக் கைப்பற்றி விடலாம்!'' என்று கூறினார் சின்னப் பழுவேட்டரையர்.

''ஆமாம், தஞ்சாவூருக்கு உடனே போக வேண்டியதுதான்!'' என்று சொல்லிக் கொண்டே பெரிய பழுவேட்டரையர் எழுந்து நின்றார். நந்தினி தேவி உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கி மெல்ல மெல்ல நடந்தார்.

அத்தனை நேரமும் ஒரு பாறைக் கல்லின் மீது உட்கார்ந்து விம்மி அழுது கொண்டிருந்த நந்தினி பெரிய பழுவேட்டரையர் தொண்டையைக் கனைத்த கர்ஜனையைக் கேட்டுத் திடீரென்று எழுந்து நின்றாள். வெறி கொண்ட கண்களால் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

அவளுக்கு மிக்க அருகாமையில் நின்ற ஆழ்வார்க்கடியான் மெதுவான குரலில், ''நந்தினி! இப்போதாவது உன் சம்மதத்தைச் சொல்! என்னுடன் வருகிறேன் என்று ஒரு வார்த்தைக் கூறு! இந்த நாட்டை விட்டு வட நாட்டுக்குப் போவோம். பிருந்தாவனம், வடமதுரை, அயோத்தி, காசி, ஹரித்வாரம், ரிஷிகேசம் முதலிய க்ஷேத்திரங்களுக்குப் பிரயாணம் செய்வோம். ஸ்ரீமந் நாராயணனுடைய திருநாமத்தைச் சொல்லிக் கொண்டு, ஆழ்வார்களுடைய பாசுரங்களைப் பாடிக் கொண்டு, நம்முடைய வாழ்க்கையை ஆனந்தமாகக் கழிப்போம். நான் என் அரசாங்க அலுவலை விட்டு விட்டு உன்னுடன் வருவதற்கு ஆயத்தமாயிருக்கிறேன்'' என்றான்.

நந்தினி கண்களில் நீர் ததும்ப அவனை நோக்கி, ''திருமலை! உனக்கு நான் இத்தனை துரோகம் செய்தும் நீ என்னிடம் வைத்த அபிமானம் மாறவில்லை. உனக்கு நீ வணங்கும் நாராயணன் அருள்புரிவார்!'' என்றாள்.

அதே சமயத்தில் பூங்குழலி சேந்தன் அமுதனிடம் ''அதோ! பழுவூர் இளைய ராணியைப் பார்! என் அத்தையைப் போலவே தோன்றுகிறாள் அல்லவா?'' என்று கேட்டாள்.

''ஆம்; தலையை விரித்துப் போட்டுக் கொண்டால், தத்ரூபமாக உன் அத்தை மாதிரியே இருக்கிறது!'' என்றான் சேந்தன் அமுதன்.

''இனிமேல் என் அத்தை இவள்தான் அத்தையிடம் இத்தனை நாள் வைத்திருந்த அன்பை இனிப் பழுவூர் இளைய ராணியிடம் வைப்பேன்!'' என்றாள்.

''என்னையும் சேர்த்துக் கொள், பூங்குழலி!'' என்றான் அமுதன்.

பெரிய பழுவேட்டரையர் இதற்குள் நந்தினி நின்ற இடத்துக்குச் சமீபமாக வந்து விட்டார்.

அதைக் கண்ட நந்தினி அவருக்கு முன்னால் பூமியில் விழுந்து வணங்கினாள். அவருடைய பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒத்திக் கொண்டாள்.

பூமியிலிருந்து எழுந்ததும், நந்தினி பெரிய பழுவேட்டரையரை ஒருமுறை பார்த்தாள். சட்டென்று திரும்பினாள். சற்றுத் தூரத்தில் சின்னப் பழுவேட்டரையர் முதலியோர் கொண்டு வந்து நிறுத்தியிருந்த குதிரைகள் மீது அவள் பார்வை விழுந்தது. அவை நின்ற இடத்தை நோக்கி மிக விரைவாக ஓடினாள். எல்லாவற்றுக்கும் முன்னால் நின்ற குதிரையின் மீது தாவி ஏறிக் கொண்டாள். குதிரையின் முகக் கயிற்றைக் கையில் பிடித்துக் கொண்டு ஒரு குலுக்குக் குலுக்கித் தட்டி விட்டாள். குதிரை பாய்ந்து ஓடத் தொடங்கியது.

அதுவரைக்கும் நந்தினியின் நோக்கம் இன்னதென்று அறியாமல் செயலற்று நின்றவர்கள் இப்போது அவளைத் தொடர யத்தனித்தார்கள். சின்னப் பழுவேட்டரையர், ஆழ்வார்க்கடியான், சேந்தன் அமுதன், பூங்குழலி எல்லாருமே ஓர் அடி முன்னால் எடுத்து வைத்தார்கள்.

பெரிய பழுவேட்டரையர் ''நில்லுங்கள்!'' என்று ஒரு கர்ஜனை செய்தார்.

எல்லாரும் மறுபடியும் செயலிழந்து நின்றார்கள். பெரிய பழுவேட்டரையரையே பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

பெரிய பழுவேட்டரையர் குதிரை மேல் சென்ற நந்தினியின் உருவத்தைப் பார்த்துக் கொண்டே நின்றார்.

அதி வேகமாகக் காற்றைப் போல் பறந்து சென்ற அந்தக் குதிரை வெகு விரைவில் மலை அடிவாரத்தின் திருப்பம் ஒன்றில் திரும்பியது.

அவர்களுடைய பார்வையிலிருந்து குதிரை மறைந்தது.

ஆம்; பழுவூர் இளைய ராணி நந்தினி தேவியும் மறைந்து விட்டாள். இனி அவளை இக் கதையிலே நாம் காண மாட்டோம்.

ஒருவேளை, பல ஆண்டுகளுக்குப் பின்னால், வேறு இடத்தில், வேறு சூழ்நிலையில், காணும்படி நேரலாம். யார் சொல்ல முடியும்?

(தொடரும்)



இதன் பாவு நூலில், இதன் ஊடு இழையில், இதன் நெசவுநயத்தில்...

ஆம். இந்தியா. ஆதியிலிருந்தே பட்டைதீட்டிய வைரம் போன்று ஜொலித்து வருவது. கணக்கற்ற கற்பனை ஊற்றுக்களின் தோற்றுவாயாக விளங்கிவருவது. அதனால்தான் இந்நாள் வரை ஜீவன்ததும்ப தலை நிமிர்ந்து நிற்கிறது. இதனை, கைத்தறித் துணிகளின் மாயாஜால நெசவுக் கலைவண்ணம் எடுப்பாக, அழகாக எடுத்துக் காட்டுகிறது. இந்தியக் கைத்தறித் துணிகள் சிறப்பானவை, நுட்பமான திறன்படைத்தவை, முன்மாதிரியானவை. அவை நவீன நாகரீகப் பாணியைத் தழுவியவை. மண்ணுலக வாழ்விலே விண்ணுலக இன்பம் ஊட்டுபவை. இந்தியாவின் ஆத்மாவே இந்தியக் கைத்தறியில்தான் குடிகொண்டுள்ளது.

...இந்தியாவின் ஜீவன் இழையோடுகிறது.

ஹாண்ட்லூம் ஹவுஸிலுள்ள
தேசிய டிசைன் கலெக்ஷன்கள் முழுவதும் மானிய உதவிபெற்ற விசேடமான விலைகளில் –
இப்போது உங்களுக்குக் கிடைக்கின்றன – ஆண்டு முழுவதும்.



handloom house

Sarees ○ Dress Materials ○ Readymades ○ Furnishings ○ Carpets ○ Bed, Bath & Table Linen

THE ORIGINAL ONE STOP SHOP

Ahmedabad • Bangalore • Baroda
Bombay • Calcutta • Chandigarh • Coimbatore • Delhi • Ernakulam • Gorakhpur • Hyderabad • Imphal • Jaipur
Madras • Madurai • Patna • Ranchi • Secunderabad • Surat • Vijayawada • Vishakapatnam.

Interact AIH:176 TAM

கல்யாண பாக்யம்



''டெலிபோன் ரிஸிவரைக் காதில் கொண்டு போனதுமே போன் பண்ணுவது மீரா என்று புரிந்தது.

''என்ன மீரா?'' என்றாள் ஜெயந்தி.

மீராவின் குரலில் பதற்றம் தெரிந்தது.

''அக்கா! சாயந்தரம் வீட்டுப் பக்கம் வர முடியுமா?''

''அவங்க வீட்டிலிருந்து தகவல் வந்திடுச்சா?''

''அதைப் பத்திப் பேசத்தான் கூப்பிடறோம்.''

''ஏம்மா மீரா? வேண்டானுட்டாங்களா?''

''எப்படிச் சொல்றதுன்னு தெரியலைக்கா. இன்னிக்கு அவங்க வீட்டிலிருந்து மாமாவோ, சித்தப்பாவோ ஏதோ ஒரு உறவு சொல்லிட்டு ஒருத்தர் வந்தாரு. சுத்தி வளைச்சு அவரு பேசினதைப் பார்த்தா, அவங்களுக்கு இஷ்டமில்லைன்னுதான் தெரியுது. அண்ணன் விடலை. துருவித் துருவிக் கேட்கப் போய், அவங்க சொல்லும் காரணம் மனசுக்குக் கஷ்டமாயிடுச்சுக்கா.''

''என்ன காரணம் மீரா?''

''நீ'' என்று நிறுத்தியவள், ''உன்னுடைய ஜாதி மாறின கல்யாணம்'' என்று முடித்தாள்.

முதன் முறையாக ஜெயந்திக்கு அவளுடைய கல்யாணம் முகத்திலடித்தது. இது டெலிபோனில் பேசும் விஷயமில்லை.

''நேரிலே பேசலாம். நான் சாயந்திரம் வீட்டுக்கு வர்றேன்.''

''வருத்தமாயிடுச்சாக்கா?''

''வருத்தமில்லாம இருக்குமா? அதுக்காக மூலையில் உட்கார்ந்து அழுதாச் சரியாயிடுமா? அதைர்யப்படாதே. இட் இஸ் ஆல் இன் த கேம்.''

மாலை ஆகும் வரை வேலை ஓட

வில்லை. போன் பண்ணி ஸ்வாமிநாதனுக்கு விஷயம் சொன்னாள். அவன் வருத்தப்பட்டான். ஒரு மணி நேர முன் அனுமதியுடன் அவனை வரச் சொல்லி, அவளும் அவனுடன் கிளம்பினாள். நினைவுகள் ஓடின.

ஸ்வாமிநாதன் நடைமுறை கூட்டல், கழித்தல்களை மனத்தில் வைத்துக் கொண்டு, நன்றாக யோசித்து ஜெயந்தியிடம் வெறும் ரசனை பால் ஏற்பட்ட பரிவைச் சொன்னதும் ஜெயந்தி சொன்னது: 'வேணாம் ஸ்வாமிநாதன். ஒரே காரணம் தான் என்னால சொல்ல முடியும். நீங்க அந்நிய ஜாதி.' ஸ்வாமிநாதன் பின்னால் கடிதத்தில் அலசியிருந்ததில் நிறைய ப்ளஸ் பாயிண்டுகள் இருக்கவே, அவள் தெளிவானாள். வீட்டில் கூட்டிக் கொண்டு போய் அறிமுகப்படுத்தினாள்.

'இவர் என்னுடன் என் அலுவலகத்தில் வேலை பார்ப்பவர். பெயர் ஸ்வாமிநாதன். என்னை, என் இலக்கியத்தை, என் ரசனைகளைப் புரிஞ்சுக்கிட்டு என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதமான்னு கேட்கிறார். நீங்க சரி, இல்லைன்னு சொல்லும் பதிலை வெச்சுத்தான் இவருக்கு நான் பதில் சொல்ல முடியும். எந்தப் பதிலைச் சொன்னாலும் எனக்குப் பூரண சம்மதம் தான். சரின்னு சொன்னா சந்தோஷப்படுவேன். வேண்டாம்னு சொன்னா, கண்டிப்பா வருத்தப்பட மாட்டேன். அவர் வேற்று ஜாதிக்காரர் என்பதுதான் பிரச்னை.'

அவளுடைய தெளிவான சிந்தனை, வீட்டிலிருந்த எல்லோருக்கும் பிடித்திருந்தது.

'ரெண்டு நாள் டைம் கொடுக்க முடியுமா ஜெயந்தி?' அண்ணன் சுரேந்திரன் அனுமதி கேட்டான்.

'அப்போ ரெண்டு நாள் கழிச்சு எனக்குப் பதில் சொல்லு ஜெயந்தி. நான் வர்றேன்...' என்று கிளம்பியவனைக் குடும்பம் முழுக்க வழி மறித்து, காப்பி டிபன் சாப்பிட வைத்தது. அண்ணன் ஜெயகாந்தனைப் பற்றியும், லாசாராவைப் பற்றியும் பேச, தங்கைகள் இரண்டு பேரும் கமலஹாசன் நடிப்பை விமர்சனம் பண்ண, தம்பி ஸ்ரீகாந்த், கபில்தேவ் பற்றி அளக்க, ஸ்வாமிநாதன் அந்நியனில்லை என்று புரிய வைத்தார்கள். ரசனைகளும், கருத்துப் பரிமாற்றமும் ஜாதி சம்பந்தப்படாதது என்று தெளிய வைத்தார்கள்.

இரண்டு நாள் வீடே கூடி ஆலோசித்தது. அப்பா இல்லாத வீடு. அம்மா பராமரிக்க, சுரேந்திரன், ஜெயந்தி சம்பளத்தில் ஓடும் வீடு.

'சம்பளம் பத்தி நீங்க பயப்பட வேண்டாம். மீராவுக்கு நல்ல வேலை கிடைக்கும் வரையில் நான் முழுச் சம்பளத்தையும் இங்கேதான் கொடுப்பேன்னு சொல்லிட்டேன்.'

சத்தியப்ரியன்

'அப்போ முன்னாடியே இதைப் பத்திப் பேசிட்டீங்களா?' அம்மா கேட்டாள்.

'எந்த அர்த்தத்தில் இதைக் கேட்கிறே? ரெண்டு பேரும் லவ் பண்றோமான்னா? நிச்சயம் அப்படியில்லைம்மா. அவராப்ரொப்போஸ் பண்ணின விஷயம். ஓர் ஆணின் காதலுக்கு ஏங்கும் வயசைக் கடந்துட்டேன். எனக்கும் கல்யாணம் கட்டிக்கிட்டு செட்டில் ஆகணும்னு வருது. மறுக்கலை. இருபத்தியாறு வயசாயிட்டா, காசில்லாத நம்ம ஜாதிப் பொண்ணுங்க என்ன கஷ்டப்படணும்னு தெரியும். வரதட்சணை, நகை, கல்யாணச் செலவு எதுவுமில்லாம கோவில்ல தாலி கட்டினாப் போதும்னு சொல்ற இவருடைய எண்ணச் சுத்தம் எனக்குப் பிடிச்சிருக்கு. நான் என்னிக்குமே உங்களை விட்டுட்டுப் போற பொண்ணு இல்லை.'

இரண்டு பேரை மட்டுமே மையமாக வைத்துச் சிந்திக்கும் அன்பில் காதல் இருக்காது. சுயநலம்தான் மிஞ்சும். ஆனால் இவள் எல்லோரையும் அணைத்துக் கொண்டு செல்ல நீண்ட கரங்களுடன் முளைத்தவள் போல வந்திருக்கிறாள். வீடே சந்தோஷமாக அவள் ஸ்வாமிநாதனைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்தது. திருநீர் மலையில் நடந்த கல்யாணத்துக்கு அவளுடைய வீட்டு மனிதர்களைத் தவிர வெளி உறவுக்காரர்கள் யாரும் வரவில்லை.

கல்யாணத்திற்குப் பின் ஜெயந்தியின் அன்பு கூடியது போலத் தெரிந்தது. தனி வீடு என்று போய் விட்டாலும் தம்பியின் இஞ்ஜினியரிங் படிப்புக்கு அண்ணனின் சம்பாத்தியம் போதாது என்று, காலேஜ் ஃபீஸ், ட்யூஷன் ஃபீஸ் எல்லாம் ஸ்வாமிநாதனும் அவளும்தான் ஏற்றுக் கொண்டார்கள். போன வருஷம் மீராவிற்கு ஒரு நல்ல வேலை கிடைக்கும் வரையில் அவளும் அந்த வீட்டைப் பராமரித்து வந்தாள்.

மீராவுக்கு இந்த வரனை அலுவலகத்தில் உள்ளவர்கள் மூலமாக ஏற்பாடு பண்ணியவளும் அவள்தான்.

ஸ்வாமிநாதனும், ஜெயந்தியும் அம்மா வீட்டில் இறங்கினார்கள். வீடு முழுக்க நேற்று அடித்த புயலில் சிக்கியதைப் போல இருந்தது.

"ரொம்ப வருத்தமா இருக்கு சுரேந்திரன். மீரா கல்யாணத்தை நாம முன்னாடி யோசிச்சே பார்க்கலை. தப்புப் பண்ணிட்டோமோன்னு உறுத்துது." என்றான் ஸ்வாமிநாதன்.

"என்ன இது மாப்பிளே? வருத்தப்படாதீங்க அனாவசியமா."

"தீர்மானமா வேணான்னு சொல்லிட்டாங்களா?" ஜெயந்தி கேட்டாள்.



போலீஸ்: ''ஏம்பா! சைக்கிள்ல லைட் இல்லாமல் போயிட்டு, அட்ரஸ் கேட்டா, 'என் சைக்கிள் இல்லை சார்'னு சொல்றியே... அப்படின்னா, யாரோடது இது?''

இவன்: ''தெரியாது சார்... ஹோட்டல் வாசல்ல யாரோ நிறுத்தி வைச்சிருந்தாங்க!''

— வி. ரேவதி.

''அவங்க சொன்ன தொனியில் அடிச்சு வேணான்னு நிராகரிச்சா மாதிரி தெரியலை''

''நெஜமாவா?''

''நாம யாராச்சிலும் போய்ப் பேசினா சரி பண்ணிடலாம்னு நெனைக்கிறேன்.''

''அண்ணா! நீங்க போய்ச் சொல்றதை விட, நாங்க ரெண்டு பேரும் போறது நல்லதுன்னு படுது. என்னங்க?'' ஸ்வாமிநாதனிடம் சம்மதம் கேட்டாள்.

''நீங்களா?'' சுரேந்திரன் தயங்கினான்.

''ஆமாண்ணா. தெளிவாக எடுத்துச் சொல்லிடுவோம். நாமே இதை நேரடியாச் சொல்றது, குறிப்பா நாங்க ரெண்டு பேரும் போய்ச் சொல்றது சரியா இருக்கும்னு படுது.''

பையன் வீட்டின் விலாசமும், அவர்களைப் பற்றிய தகவல்களையும் வாங்கிக் கொண்டான். பையனின் அப்பா அவர்களுடைய ஜாதியில் கொஞ்சம் கை ஓங்கியவர் என்று தெரிந்தது. மற்ற எல்லா ஜாதிகளுக்கும் இருப்பது போலவே இவர்கள் ஜாதிக்கென்று தனிச் சங்கமும், கூட்டமைப்பும் உண்டு. உள்ளூர் சங்கக் கிளையில் பையனின் அப்பா செயலாளராக இருக்கிறார்.

ஸ்வாமிநாதன் பைக் ஓட்ட, ஜெயந்தி பின்னால் உட்கார்ந்து கொண்டு வழி சொன்னாள். தனித் தனி வீடுகளான அந்தக் குடியிருப்பில் ஷண்முகம் என்று சொல்லப்படும் அந்த ஸ்மால் ப்ளாண்ட் எஞ்ஜினியரின் வீடு கொஞ்சம் பெரியதாக இருந்தது. ஸ்வாமிநாதன் பைக்கை நிறுத்தி விட்டு விசாரிக்க உள்ளே வரச் சொன்னார்கள். பெரியவர் ஒருவர் உள்ளே கூட்டிக் கொண்டு போக, கிட்டத்தட்ட வீட்டில் இருக்கும் எல்லோரும் கூடி விட்டார்கள்.

''ஷண்முகங்கறது யாருங்க?''

பெரியவர் இவன்தான் என்று சுட்டிக் காட்டிய பையனுக்கு இருபத்தியேழு வயசிருக்கும். நல்ல சிவப்பு. படர்ந்த மார்பு. அகன்ற தோள்கள். எப்பொழுதும் சிரிக்கக் காத்திருக்கும் உதடுகள்.

''நமஸ்காரம்'' ஜெயந்தி கைகூப்பினாள்.

அவனும் பதிலுக்குக் கைகூப்பினான்.

''நீங்க யாரு?'' பெரியவர் கேட்டார்.

''கமெர்ஷியல் ஆடிட் ஆபீஸில் வேலை பார்க்கும் சுரேந்திரனின் ரெண்டாவது தங்கையை உங்க வீட்டிலிருந்துதான் பொண்ணுப் பார்க்க வந்ததாச் சொன்னாங்க.''

''ஆமாம்.''

''நான் சுரேந்திரனின் முதல் தங்கை. இவர் என் கணவர்.''

பெரியவரின் முகம் சட்டென்று மாறி விட்டது.

''நீங்கள்ளாம் உள்ளே போங்க. அப்புறம் கூப்பிடுறேன்'' மற்றவர்களை உள்ளே அனுப்பினார். ஷண்முகமும் உள்ளே போனான்.

''சிவகாமி,'' பெரியவர் கூப்பிட்டதும் உள்ளே இருந்து ஒரு பெண்மணி வந்தாள். பெரியவரின் மனைவியாக இருக்கும்.

''இங்கே உட்காரு. நம்ம வடிவேலுத் தம்பி சொல்லிச்சுன்னு போன வாரம் ஷண்முகத்துக்கு அம்மாப்பேட்டையில் பொண்ணு பார்க்கப் போனோமே அவங்க வந்திருக்காங்க.''

அந்தப் பெண்மணி ஆமோதிப்பதற்கு அடையாளமாக ஒரு தலையசைப்பையோ அல்லது கரங்குவித்தலையோ செய்யாமல் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டாள்.

''அந்தப் பொண்ணைத்தான் வேண்டாம்னு சொல்லிட்டோமில்லே?''

''என்ன காரணம்?''

பெயவர் பதில் சொல்லவில்லை.

''நான் ஜாதி விட்டுக் கல்யாணம் பண்ணிக்கிட்டதுதான் காரணங்களா?''

பெரியவர் இதற்கும் பதில் சொல்லவில்லை.

''ரொம்ப மாறிக்கிட்டு வர்றோம் சார் நாம. விஞ்ஞானத்தில, படிப்பில, கலாச்சாரத்தில இப்படி நிறைய மாறிக்கிட்டு வர்றோம். இன்னமும் ஜாதி, இனம்னு குறுகிக்கிட்டே போறது தப்பு இல்லீங்களா?''

''அம்மா! தாமிரபரணித் தண்ணியை வுட்டுப் போட்டு நம்ம சாதிக்காரவுங்க பொளப்புத் தேடன்னு எல்லா ஊருக்கும் போயாச்சு. இன்னும் நம்ம கட்டுப்பாட்டில் உள்ள அமைப்பு மாறலை. இதை ஒரு குறுகிய கண்ணோட்டம்னு எடுத்துக்கக் கூடாது. மேலும் நான் இந்த ஊரில் நம்ம சங்கத்தில் ஜாயிண்ட் செகரட்டரி. நாளைக்கு இந்த மாதிரி ஒரு வீட்டில் சம்பந்தம் பேசினேன்னு தெரிஞ்சா ஏசுவானுங்க.''

''ஒத்துக்கறேங்க. நான்தான் இன்னொரு ஜாதிக்காரரைக் கட்டிக்கிட்டேன். நான் பண்ணிக்கிட்ட கல்யாணம் என் தங்கச்சியோட ஜாதியை மாத்திடுமா?''

''மாத்தாதும்மா. ஆனா ஊருக்குப்

முயற்சி + பயிற்சி = முன்னேற்றம்

நீங்கள் உங்களுடைய நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது அவர்களிடம் "உங்களில் எத்தனைபேர் வாழ்க்கையில் முன்னேற விரும்புகிறீர்கள்?" என்ற ஒரு கேள்வியைக் கேட்டுப் பாருங்கள். உடனே அனைவரும் கையை உயர்த்துவார்கள். ஏனென்றால் இவ்வுலகில் முன்னேற விரும்பாதவர்கள் எவரும் இல்லை.

அடுத்ததாக "உங்களில் முன்னேறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் எத்தனைபேர்? என்று மற்றொரு கேள்வியைக் கேளுங்கள். முதற்கேள்விக்கு சட்டென கையை உயர்த்தியவர்கள் இப்பொழுது என்ன பதிலளிக்கலாம் என்று யோசிக்கத் தொடங்கி விடுவார்கள்.

பெரும்பாலானவர்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று விரும்புகிறார்கள் ஆனால் அதற்கான முயற்சியில் ஈடுபடுவ இல்லை. உதாரணமாக நம்மில் பலர் ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்று விரும்புகிறோம். விருப்பம் மட்டும் இருந்தால் போதுமா? அவ்விருப்பத்தை நிறைவேற்றும் வழி என்ன என்று யோசித்து. அதற்கான முயற்சியில் ஈடுபட்டு முறையான பயிற்சி பெறவேண்டுமல்லவா?

தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்ற தனிப் புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

இக்கல்வி நிலையம் அளிக்கும் ஓர் எளிய பயிற்சியை மேற்கொண்டால் நீங்கள் தயக்கமின்றி ஆங்கிலத்தில் உரையாடவும் இலக்கண பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுதவும் முடியும்.

வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம். "நேர்முகப் பயிற்சியும் உண்டு."

ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்ற உங்களது விருப்பத்தை இன்றே ஒரு தபால் கார்டில் எழுதி "விவேகானந்தா கல்வி நிலையம் (Regd.) 9, மேட்லிரோடு, தி. நகர், சென்னை 17. என்ற முகவரிக்கு அனுப்புங்கள் உடனே நாங்கள் இப்பயிற்சி பற்றிய மற்ற தகவல்களை அனுப்பி வைக்கிறோம்.

உங்களது முயற்சியும் எங்களது முறையான பயிற்சியும் இணைந்தால் ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்ற உங்களது. நீண்ட நாளைய விருப்பம் நிச்சயம் நிறைவேறும்.

"Ambition without Effort is Like a Bird without wings."

— NAGA



அருள்வாக்கு

பெரிய தடை நம் மனஸே தான். ஏதாவது காமம், கவலை — இது அப்படியாகணும், 'அது அப்படியாகணும்,' 'அப்படி ஆகுமோ, ஆகாதோ,' 'எப்படி ஆயிடுமோ?' என்று பல தினுசான எண்ணங்களின் பாரத்தில் நெரிபடுவது — என்று நம் மனஸையே நம்முடைய வாழ்க்கைப் பிரயாணம் ஆனந்தப் பாதையில் போக முடியாதபடி பெரிய தடையாகக் குறுக்கே போட்டுக் கொண்டிருக்கிறோம். விக்னேசுவரரை உபாஸித்து உபாஸித்து அவருடைய பிரசாதத்தினால் அவர் மாதிரியே நாமும் குழந்தைகளாகி ஒரு காமமில்லை, கவலையில்லை, போனதையும், வருவதையும் குறித்த மனோபாரம், இல்லவே இல்லை என்றாகி, அப்பப்போ ஒரு ஸந்தோஷமா? அதைக் குழந்தை மாதிரி நன்றாகச் சிரித்து அனுபவித்துக் கொண்டு— அதே மாதிரி அப்பப்போ ஒரு துக்கம் வந்தாலும் அந்த நிமிஷம் மட்டும் அழுது விட்டு ஆனால் அப்புறம் நினைத்து நினைத்து அழாமல் — இப்படி சிரிப்பு, அழுகை இரண்டும் இருந்தாலும் சிரித்து விளையாடுவதுதான் ஜாஸ்தியாக ஒரு குழந்தை இருப்பது போலவே இருந்து விட்டோமானால் நம்மை விடப் பாக்கியசாலி இல்லை. முக்கியமாக, 'சென்று போனது இப்படியாச்சே, வரப் போவது இப்படியிருக்கணுமே' என்று ஓயாமல் நம்மைப் பிய்த்துப் பிடுங்கும் சிந்தனைச் சுமை குழந்தைக்கு இல்லாததுதான் அதனுடைய ஆனந்தத்தின் இரகசியம். குழந்தை ஸ்வாமி கனமான யானை ரூபத்திலிருந்தாலும் இந்த விசாரச் சுமையில்லாமல் பரம லேசாக இருப்பவர். 'நெட்டிப் பிள்ளையார்' என்று அவரை லேசாகப் பண்ணுகிறோமல்லவா? நம்மையும் அவர் அப்படிப் பண்ணப் பிரார்த்திப்போம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

போனா அம்புட்டுப் பயலுவளும் கேப்பாஙுங்களே.

"இன்னும் கொஞ்சம் கீழே இறங்கி வர்றேன் சார். இங்கே பெண்கள் ரெண்டாம் பட்சம்தான். கல்யாணமாயிட்டா பொண்ணு பிறந்த வீட்டுப் பெண்ணில்லை. அதனடிப்படையில் கல்யாணமாகிப் போன நான், எப்படி என் தங்கச்சியின் கல்யாணத்துக்குத் தடையா இருக்க முடியும்?"

"நீ சொல்றதும் கஷ்டமாத்தான் இருக்கு." அவர் மெல்ல இறங்கி வருவது தெரிந்தது.

"நான் இருக்கறதாவே காட்டிக்கலை சார். கல்யாணம் முடியற வரை நானும், இவரும் நம்ம ஜாதிக்காரங்க கண்ணில் படாம இருக்கோம். ஆபீஸ்காரங்க மாதிரி முகூர்த்தத்துக்கு மட்டும் வந்து அட்சதை தூவிட்டுப் போறோம். மாட்டேன்னு சொல்லிடாதீங்க."

பெரியவர் அந்தப் பெண்மணியைப் பார்த்தார். அவளை உள்ளே ஓர் அறைக்கு கூட்டிக் கொண்டு போனார்.

இரண்டு பேரும் வெளியில் வந்தார்கள்.

"விவரம் புரியாத பொண்ணா இருக்கம்மா. நம்ம ஜாதிக்காரங்ககிட்டே இந்த மாதிரி இடத்திலிருந்து பொண்ணு எடுத்தேன்னு தெரிஞ்சா, நான் ரொம்பத் துன்பப்படணும். ஆனா உங்க வீட்டுச் சம்பந்தத்தை விடவும் மனசில்லை. அப்படி இப்படிப் பேச்சு வராம நீங்க ஒதுங்கியிருந்துருங்க."

"ரொம்ப நன்றி ஐயா."

"ஒரு விஷயம்மா."

"என்ன சார்?"

"நகை பதினஞ்சு ச்வரனும், ரொக்கம் பத்தாயிரமும் கொடுக்கறதா முடிவாயிருக்கு போலத் தெரியுது. ரொக்கம் பத்தாயிரம் போதும். நகை மட்டும் கூட அஞ்சு சவரன் சேர்த்து இருபதாப் போட்டுடுங்க. அப்படியே ஷண்முகத்துக்கு ஒரு ஸ்கூட்டர் வாங்கிக் கொடுத்திடுங்க."

சட்டென்று முகத்தில் அறைந்தது போலானது. இருவரும் முகத்தில் காட்டிக் கொள்ளாமல் கிளம்பினார்கள்.

"அண்ணன்கிட்டேயும் பேசிட்டு நாளைக்குத் தகவல் சொல்றோம் சார்."

கொஞ்ச தூரம் போனதும் ஸ்வாமிநாதனை வண்டி நிறுத்தச் சொன்னாள். அவன் ஒரு மரத்தினடியில் நிறுத்தினான்.

"கோழைகள். ஜாதி பத்தி வாய் கிழியப் பேசறானுங்க. ஜாயிண்ட் செகரட்டரியாம். ஜாதி இவர் மூச்சாம். ஆனா நம்ம பெண்கள் கல்யாணத்தை நிர்ணயிக்கிறது ஜாதி இல்லீங்க. பணம். ரொக்க ரொக்கமாப் பணமும், சவரன் சவரனா நகையும்தான் பெண்களுக்குக் கல்யாண பாக்யம் கொடுக்கும் உசந்த ஜாதி. ஜாதியிலேயே பெரிய ஜாதி பணந்தாங்க. மொதல்ல பதினஞ்சு பவுன் நகையும், பத்தாயிரமும்தானே பேசி முடிவாச்சு. அப்புறம் என்ன கூடுதலா அஞ்சு பவுனும், ஸ்கூட்டரும்? இவ்வளவும் கொடுத்துட்டா சரியாப் போயிடுமா? நான் ஜாதி மாறிக் கல்யாணம் பண்ணிக்கிட்டதை நியாயப்படுத்திடலாமா? உன் ஜாதின்னு தலையில வெச்சுக்கிட்டு ஆடினியே அதுக்குக் கொடுக்கற மதிப்பு இவ்வளவுதானா? ச்சே! இது வேண்டாங்க. மீராவுக்கு வேற இடத்தில் மாப்பிள்ளை பார்க்கலாம். சரியா?" என்றாள்.

"சரி" என்று ஸ்வாமிநாதன் பைக்கை ஸ்டார்ட் பண்ணினான்.

ஜன்னல்



பல்வேறு பத்திரிகை ஆசிரியர்களுக்கு எழுதப்பட்ட ரசமான கடிதங்களில் சில:

பாலில் உள்ள எல்லாச் சத்துக்களும் காளான்களில் உள்ளன. ஆனால் கொழுப்புச் சத்து மட்டும் கிடையாது. எனவே, ரத்த அழுத்தமும் கொலஸ்ட்ராலும் அதிகமாக உள்ளவர்கள் கூடக் காளான்கள் சாப்பிட்டுப் பயனடையலாம். அதுமட்டுமல்ல, காளானுக்குப் புற்றுநோயைத் தடுக்கும் தன்மை உண்டு என்று அறியப்பட்டுள்ளது! டின்களில் அடைக்கப்பட்ட காளான்களின் இறக்குமதி அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, கனடா முதலிய நாடுகளில் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. ஆனால் ஒன்று, சில வகைக் காளான்கள் வயிற்றைக் கெடுக்கும் தன்மை உடையவை. தேர்ந்தெடுக்கத் தெரிய வேண்டும்.

— (ஹிந்து) ரவி பால்ராஜ், நீலகிரி.

* * *

டெலிஃபோன் டைரக்டரியில் மஞ்சள் பக்கங்களை இணைக்கப்போக ஏககனமாகி விட்டது. தூக்கவே முடியவில்லை. மஞ்சள் பக்கங்களைத் தனியாகவும், டைரக்டரியைத் தனியாகவும் பைண்டு செய்து தந்தால் ரொம்ப வசதியாக இருக்கும். டெலிஃபோன் இலாகா கவனிக்குமா?

— (எக்ஸ்பிரஸ்) டாக்டர் நரசிம்மன், சென்னை.

* * *

ஜெய்ப்பூரிலும் மற்ற இடங்களிலும் தேர்தல் பிரசாரம் செய்த ராஜீவ் காந்தி, மக்களின் நல்வாழ்வுக்காகவும் அபிவிருத்திப் பணிகளுக்காகவும் அரசு செலவிடும் ஒவ்வொரு ரூபாயிலும் பதினைந்து பைசா தான் மக்களைச் சென்று அடைகிறது என்றும் மீதமுள்ள எண்பத்தைந்து பைசா இடைத்தரகர்களின் பாக்கெட்டுகளுக்குப் போய் விடுகிறது என்றும் கூறினார். யார் இந்த இடைத்தரகர்கள்? அவர்களைப் பற்றித் தெரிந்திருந்தும் அவர்கள் மீது ராஜீவ் காந்தி ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? அங்கிங்கெனாதபடி எங்கும் பரவியுள்ள லஞ்ச ஊழல்தான் காங்கிரஸைத் தேர்தலில் வீழ்த்தி விட்டது.

— (ஹிந்துஸ்தான் டைம்ஸ்) ஒய். என். வைஷ், அலிகார்.

* * *

புதிய பிரதமர் பதவி ஏற்றிருக்கிறார். அரசு ஊழியர்களுக்கு அவர் நியாயம் செய்ய விரும்பினால், அன்றைய எதிர்க்கட்சிகள் அறிவித்த பாரத் பந்தின் போது (ஆகஸ்டு 30), காரியாலயத்துக்குப் போகாமலிருந்த அரசு ஊழியர்களைத் தண்டிப்பது போல் பிடிக்கப்பட்டுள்ள ஒரு நாள் சம்பளத்தை அவர்களுக்குத் திருப்பித் தர அவர் உத்தரவிட வேண்டும்.

— (எக்ஸ்பிரஸ்) எஸ். கண்ணன், கோவை.

* * *



தெரு நாய்களை நகராட்சி பிடித்துக் கொண்டு போக வேண்டும் என்று கூறுவதும் எதிர்பார்ப்பதும் கொடூரமானது. நகராட்சி இந்நாய்களைக் கொடிய விதத்தில் விஷம் கொடுத்துக் கொல்கிறது. மாறாக அவற்றுக்கு நோய்த் தடுப்பு ஊசி போட்டு விட்டால், அவை மனிதனைக் கடித்தாலும் மனிதனுக்கு 'ராபிஸ்' நோய் வராது. நாய்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து, இனப்பெருக்கம் நடக்காமலும் பார்த்துக் கொள்ளலாம். பூச்சி மருந்து தெளித்தால் உண்ணி வராது. தெரு நாய்கள் சமுதாயத்துக்கு உபயோகமானவை. அவை குப்பைகளைச் சுத்தப்படுத்துகின்றன. திருட்டுக்களைக் குறைக்கின்றன.

— (ஹிந்துஸ்தான் டைம்ஸ்) கமிலியா சத்திஜா, புதுதில்லி.

இரண்டாவது சூரியன் 22

"இந்த முறை தமிழ்மன்றத் துவக்க விழாவுக்கு முதல்வரைக் கூப்பிடலாம் ஐயா," மாணவர் தலைவன் பணிவோடு சொன்னான்.

கதிரேசன் நகம் கடித்தார்.

"வருவாருன்றியா?"

"இந்தக் கல்லூரி மேல் அவருக்குத் தனி பிரியம். அது தவிர, உங்க மேலயும் நல்ல அபிப்பிராயம்ன்னாங்க."

"பொதுவான ஆளாக் கூப்பிட்டா?"

"இப்ப யாரு சார் . பொதுவான ஆளுங்க? நடிகர்கள் கூட, தான் இன்ன கட்சி, இன்னார் சபோர்ட்டுன்னு தைரியமாச் சொல்லிடறாங்க..."

"பிரஸிடென்டைக் கூப்புட்டுறலாமே!"

"அது அடுத்த வருஷம் வச்சுக்குவோம். இந்த வருஷம் தலைவர்தான் வரணும். நம்ம கல்லூரிக்கு வந்தாப்போலவும் இருக்கும். அவரு மறுபடி ஜெயிச்சு, கோட்டைக்கு வந்ததைப் பாராட்டினாப் போலவும் இருக்கும். அவர் பேர் போட்டுப் போஸ்டர் ஒட்டினால் பத்துப் பதினைஞ்சு கல்லூரிகளிலிருந்து பசங்க வருவாங்க. எங்களுக்கும் ஒரு மரியாதை இருக்கும். காது குளிரத் தமிழ் கேட்கலாம் ஐயா."

"உண்மை" என்று கதிரேசன் மனசு சொல்லிற்று. வெளிப்படையாய் ஒப்புக் கொள்ளப் பயமாய் இருந்தது. திருமணமான இரண்டாம் வருடத்தில் கட்சி இரண்டாய்ப் பிரிய தலைவருக்கும் நிலவு நடிகருக்கும் அபிப்பிராய பேதம் வர, கதிரேசன் அதிகம் தடுமாறினார். முழுநேரக் கட்சி ஆட்களுக்கு முடிவு எடுப்பது சிரமமாய் இல்லை. உடனடியாய்த் தாங்கள் இன்னார் பக்கம் என்று அறிவித்தார்கள். எல்லோரையும் புகழ்ந்து கவிதைகள் பாடித் தம்மை வளர்த்துக் கொண்ட கவிஞருக்கு இரண்டிலே ஒன்று தொடு என்றதும் பயமாய் இருந்தது. எதைத் தொடுவது என்று குழப்பம் வந்தது.

கட்சியாலும், தலைவராலும் மரியாதை வந்தது உண்மை என்றாலும், நிலவு நடிகரால் கதிரேசன் பிரகாசமானதும் உண்மை. உள்ளே பூசல் இருக்கும்போதே நிலவு நடிகரின் பிறந்தநாள் விழா இலக்கிய விழாவாகக் கொண்டாடப்பட்டது. பட்டியலில் கவிஞர்கள் பெயர் பார்த்ததும் கதிரேசனுக்குப் பகீர் என்றது. அத்தனை பேரும் பத்திரிகைகளில் பழம் தின்று கொட்டை போட்டவர்கள். பல புத்தகங்கள் வெளியிட்டவர்கள். சினிமாவில் நிலவு நடிகர் துணையுடன் பிரபலமாகிக் கொண்டிருப்பவர்கள். கதிரேசன் மட்டுமே பேராசிரியர். பட்டியலில் முதல் பெயர் இவருடையதாகப் போட்டிருந்தது. கவியரங்க தினத்தன்று பானுமதியை முன்னே அனுப்பிக் 'கவிஞர் ஊரில் இல்லை. தந்தி கொடுத்திருக்கிறேன். நிச்சயம் வருவார்' என்று சொல்லச் சொல்லி அனுப்பினார். இருட்டிய பிறகு கவியரங்கம் துவங்கியது. மேடைக்குப் பின்புறம் தலையில் துண்டு கட்டிக் கொண்டு உட்கார்ந்து கொண்டார். இரண்டாவது மூன்றாவது நான்காவது ஆட்கள் கவிதை படித்தார்கள். ஐந்தாவது ஆள் பெயர் அறிவிக்கப்பட்டவுடன் சுற்றிக் கொண்டு போய் ஆட்டோக்காரனிடம் ஐந்து ரூபாய் கொடுத்து, நூறடி தொலைவில் உள்ள விழா வாசல் வரை கொண்டு போய் விடச் சொன்னார். சிறிய தோள் பையுடன் ஆட்டோ விட்டு இறங்கித் தலையைக் கலைத்துக் கொண்டு, கூட்டத்தைப் பிளந்தவாறு மேடை நோக்கிப் போனார். கீழே அவர் மாணவர்கள் கைதட்டினார்கள். கவியரங்கத் தலைவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, பேப்பர் எடுத்து எழுத ஆரம்பித்தார்.

ஆறாவது ஆள், "நீங்க படியுங்க கதிரேசன்," என்ற போது, "நீங்க படிங்க நண்பரே. கொஞ்சம் எழுத வேண்டியது பாக்கி இருக்கிறது," என்றார்.

நிலவு நடிகர் வரவில்லையாம். கவியரங்கம் முடிகிற போது கவிஞர்கள் புகழ்வதை நேர்நின்று கேட்க வெட்கப்பட்டுக் கூட்டத்தில் நாம் மறைந்து இருந்தது போல, அவரும் இருக்கலாம் என்று பட்டது. அவர் முறை வரத் தொண்டை செருமி வெண்கலக் குரலில் கவிதை துவங்கினார்.

"நேற்றென் கனவில் விண்வெளியேறி
நிலவைத் தேடிப் போயிருந்தேன்.
எனக்கு முன்னே இறங்கிய சில பேர்
இதுதான் நிலவென இடம் சொன்னார்.

அம்மைத் தழும்பாய் அத்தனை இடமும்
தொப்புள் குழியாய் நிறைந்திருக்க,
அம்மா ஊட்டிய பால்சோறெல்லாம்
வாய்க்கு வந்தது அருவருப்பாய்.

நிலவை உதைத்து வான்வெளி வழியே
மறுபடி வந்தேன் பூமிக்கு.
என்தன் வீட்டு எதிர்ச்சுவர் முழுக்க
நிலவொன் றிருந்தது புன்சிரிப்பாய்.

அம்மா காட்டிய நிலவின் சாயல்
போஸ்டரில் எப்படி? அதிசயித்தேன்.

பாலகுமாரன்

ரிக்ஷா ஓட்டிய நண்பனைக் கேட்டேன்
உன்பெயர் சொன்னான் சந்திரனே!''

கூட்டம் எழுந்து நின்று கைதட்டியது. முன்னே பாடிய கவிஞர்கள் பொலிவிழந்தார்கள்.

''அல்லி மலர்ந்தது அந்நிலவாலே
ஆட்சி மலர்ந்தது இந்நிலவாலே
கொள்கை மலர்ந்தது கதிராலே
கூட்டம் சேர்ந்தது நிலவாலே!''

ஜனங்கள் தாளம் தப்பாது கவிதைக்குக் கைதட்டினார்கள். ரசித்துக் கேட்டார்கள்.

நிலவின் சுய குணாதிசயங்களையும் நடிகருடன் ஒப்பிட்டு முடித்தார். வான் கொள்ளாது புகழ்ந்தார்.

''நிலவே நிலவே உன் முன்னே
ஏழைக் கவிஞன் விண்ணப்பம்.

உன்னைக் குறித்துக் கொண்டாட
இத்தனை பேரும் இங்கிருக்க

எங்கே ஒளிந்தாய் வெண்ணிலவே
எதற்கு வெட்கம் கவிஎதிரே

இரவைப் பகலாய் மாற்றுகிற
ஒளிக்குழல் ஆயிரம் இருந்தாலும்

நீயிங்கில்லை மேடையிலே
நெஞ்சு புழுங்குது கவிபாட

வந்து ஒருமுறை சிரி நிலவே
தங்கத் தமிழர் அகம்மலர

எழுக இங்கே வெண்ணிலவே
எங்கள் கண்களில் ஒளிபடர...''

காருக்குள் உட்கார்ந்து ரகசியமாய்க் கவிதை கேட்ட நிலவு நடிகர் உணர்ச்சி வசப்பட்டுச் சட்டென்று இறங்கிப் பின்வழியாய் மேடை ஏறினார். கூட்டம் அலை புரண்டு எழுந்து நின்றது. விண்ணதிரக் கோஷமிட்டது. கதிரேசன் குரல் உயர்த்தினார்.

''அரசன் அழைத்தும் வாராத
அன்பு என்னும்
வெண்ணிலவு
இக்கவிஞன் பாட
எழுந்ததுவே!
என் கவிதை உந்தன்
காலடியில்...''

தன் கவிதைக் காகிதங்களை அவர் காலடியில் வைத்து வணங்கினார். கூட்டம் உணர்ச்சிவசப்பட்டது. நிலவு நடிகர் அவரைத் தழுவிக் கொண்டு நெற்றியில் முத்தமிட்டார். கடைசியாய்க் கவிதை சொல்லி ஜனங்கள் மனத்தில் நிற்கலாம் என்று போட்ட திட்டம் கதிரேசனைப் பல படிகள் உயர்த்தி விட்டது.

அதற்கு மூன்றாவது வாரம்





''போன வாரம் உங்க பத்திரிகைல நான் ஒண்ணுமே எழுதலை... ஆனால் சன்மானம் அனுப்பியிருக்கீங்களே?''

''நீங்க எழுதாமல் இருந்ததுக்குத்தான் அந்த வெகுமதி!''

— சீர்காழி ஸ்ரீராம்.

கட்சி உடைந்து, நிலவு நடிகர் தனிக்கட்சி துவக்க, உடல்நலம் இல்லை என்று ஒரு வாரம் தனியார் ஆஸ்பத்திரியில் படுத்து இருந்துவிட்டு, பலம் கணித்துத் தெளிவான பிறகு நடிகர் காலில் விழுந்தார். பிரிந்த கட்சிக்குப் பேராசிரியர்கள் தேவைப்பட்டனர். கூட்டத்திற்கு ஒலிபெருக்கி போல் கட்சிக்குக் கவிஞர்கள் அவசியமாயினர். தேர்தலில் நடிகர் கட்சி ஜெயிக்க பல அறிஞர்களைத் தாண்டி, கவிஞர் கதிரேசன் கல்லூரியின் உச்சப் பொறுப்பில் சுலபமாய் வந்து நின்றார். பல பண்பாட்டு மையங்களின் தலைமை இடங்களை அலங்கரித்தார். அவர் சொன்னால் மெடிகல் காலேஜ் சீட் கூடக் கிடைத்தது. வாழ்க்கை வளமாயிற்று.

பதின்மூன்று வருடங்கள் அசையாத ஆட்சி நடிகர் மறைய, லகான் அறுந்த குதிரை மாதிரி, நாலு பக்கமும் முட்டிக் கொண்டு குப்புற விழுந்தது. தலைவர் மறுபடி கோட்டைக்கு வர கதிரேசனை அகற்றக் கீழே உள்ளவர்கள் படாதபாடுபட்டார்கள். ''அங்கு ஆக்டிவ் மெம்பர் இல்லை கவிஞர். கவிஞர்கள் நாலு பேரைப் புகழ்ந்து பாடத்தான் செய்வாங்க. எனக்கு ஒன்றும் கோபம் இல்லை அவர் மேல. அவரு அங்கேயே இருக்கட்டும். வாரியம், பண்பாட்டு மையம் என்று எதிலாவது இருந்தால், இறக்கி விட்டுடுங்க. பேராசிரியர் பதவியைப் பிடுங்க வேணாம்...'' தலைவரின் தமிழ்க் காதலால் தலை தப்பியது.

தலைவரை மறுபடி சந்திக்க இது ஒரு சந்தர்ப்பம். ஆனால் பயமாகவும் வெட்கமாகவும் இருந்தது. பசங்களை முன்னாடி விட்டுத் தேதி கேட்கச் சொல்லுவோம். வந்தாருன்னா பெரிய மாலையாப் போட்டு, வரவேற்போம்.

''உங்க இஷ்டம் தம்பி. நீங்க தலைவரைப் போய்ப் பாருங்க.''

''அது நல்லாயிருக்காது. பேராசிரியர் இல்லாமல் நாங்கள் மட்டும் போனால், எங்களுக்கு மரியாதை இல்லை. உங்களுக்கும் மரியாதை இல்லை.''

''டேர்ம்ஸ் சரியா இல்லை தலைவரோட.''

''சரி பண்ணிக்கணும் ஐயா. நாங்கள் மட்டும் போய், உங்களைக் கேட்டு, நீங்க வரலேன்னு தெரிஞ்சு தலைவர் மறுத்துட்டா, பசங்க ரேக்கிடுவாங்க. அப்புறம் அசிங்கமாயிடும்.''

''நான் வர்றதால இடைஞ்சலாயிடுச்சுன்னா?''

''முடியவே முடியாதுன்னீங்கன்னா நான் துணைப் பேராசிரியரைக் கூப்பிட்டுட்டுப் போறேன்.''

துணைப் பேராசிரியர் பதின்மூன்று வருடங்களாய் அசையாது தலைவர் பின்னே இருப்பவர். போய்க் கூப்பிடுகிற சாக்கில் ஏதும் பேசி, தன்னை இடித்துத் தள்ளிவிடக் கூடும். யோசித்தார்.

''உங்க தமிழ் அவருக்குப் பிடிக்கும் ஐயா...'' மாணவர் தலைவன் வற்புறுத்தினான்.

தலைவர் வீட்டு வாசலில் மாலையோடு காத்திருந்தார்கள்.

தலைவர் மாடியில் இருப்பதாகத் தெரிந்தது. வராந்தாவில் பல படங்கள் இருந்தன. பதினைந்து வருடங்களுக்கு முன்பு எடுக்கப்பட்ட படத்தில் கதிரேசனும் இருந்தார்.

உள்ளே அவரை மட்டும் அழைப்பதாகச் சொன்னார்கள். மாணவர்களைப் பெருமையுடன் பார்த்துவிட்டுப் படியேறினார்.

''என்ன?'' கேள்வி நிற்க வைத்தது.

''கல்லூரியில் தமிழ்மன்றத் துவக்க விழா. தலைவர் தலைமை தாங்கிப் பேச வேண்டும்.''

''எதுபற்றிப் பேச வேண்டும்?''

''தமிழர் காதலும் வீரமும்.''

''இன்றைய பெரும்பாலான தமிழருக்கு இரண்டுமே இல்லையே!''

''அதனால்தான் பேச வேண்டுகிறேன்!'' சாமர்த்தியம் கதிரேசனிடம் தலை தூக்கியது. அந்தச் சாமர்த்தியம் தலைவருக்கு எரிச்சல் கொடுத்தது.

''இருபது வருடங்களாய் நான் பேசாத தமிழர் காதலும் வீரமுமா? காதல் அற்றுப் போய் விவாகரத்துச் செய்வீர்கள். வீரம் ஒழிந்து போய் எங்கேயாவது ஒளிந்து கொள்வீர்கள். இத்தனை நாட்கள் எங்கே போயிருந்தீர்கள்? இன்று மட்டும் எந்த முகத்தோடு வருகிறீர்கள்?'' குரலில் கடுமை இருந்தது.

''என் விவாகரத்து என் சொந்த விஷயம்.''

''இந்த வீட்டில் சோறு தின்றுவிட்டு, நான் உங்கள் குடும்பத்தில் ஒருவன் என்று பேசியது பொய்யாகி விட்டதா?''

தலைவர் மனைவியின் தலை ஹாலுக்குப் பின்புறம் தெரிந்தது.

''படிச்ச பொண்ணு, குணமுள்ள பொண்ணு... அவளை அடிச்சு உதைச்சு அழவிட்டிருக்கீங்களே, இதான் உங்க படிப்பா? இரண்டு குழந்தைகளோட

ஜீவனாம்சம் கூட இல்லாம தனியா விட்டுட்டு என்ன வாழ்ந்துடப் போறீங்க?'' அவர் மனைவி சிடுசிடுத்தார்.

''நேத்துக் கூட போன் செய்தார்கள். எவ்வளவு மலர்ச்சியான பெண் உங்கள் மனைவி. அவர்கள் குரல் கேட்க வேதனையாக இருந்தது. அந்த வீடியோ மேட்டர் செட்டில் ஆயிடுச்சா?'' அருகே இருந்தவர்களைக் கேட்டார். ''தப்புக் காஸட் கிடைக்கலையே?''

''இல்லீங்க. தடை செய்யப்பட்ட இங்லீஷ் படம் ஏக கிறிஸ்து இருந்தது. அவ்வளவுதான், திருப்பிக் கொடுத்துட்டோம்.''

''தகப்பன் இல்லாது குழந்தைகள் வளரும் வேதனை பட்டால்தான் தெரியும். குழந்தைகளுக்காக ஒற்றுமையாய் இருந்திருக்கலாம். இப்பப் பாருங்க கவிதையும் செத்துப் போய் முகமும் செத்துப் போய் வந்து நிக்கறீங்க...''

''என் கவிதை சாகாது.''

''நிலா நிலா வான்னு பாடினீர்களே அன்னிக்கே செத்துப் போச்சு. நான் பாடற மாதிரி பாடறேன், நீ வரா மாதிரி வான்னு தமிழ்க் கவியரங்கத்தை நாடக மேடையாக்கிட்டீங்களே...''

பதினாறு வருடம் முன்பு பாடிய கவிதையை நினைவூட்டினார். தலைவர் ஞாபக சக்தி வயிற்றைக் கலக்கிற்று.

''எல்லாம் மறந்துட்டுக் கூட்டத்துக்கு வரணும்.''

''மறக்கவில்லை என்று சுட்டிக்காட்டத்தான் உங்கள் கவிதையைச் சொல்கிறேன். எனக்குச் செய்த துரோகத்தைக் கூட மன்னித்துவிடலாம். கவியரங்கத்திற்கு இழுக்குச் செய்ததை மறக்க முடியவில்லை. எந்த ஊருக்கும் அன்று போகவில்லை நீங்கள். நீங்களும் அவரும் திட்டமிட்டுச் செய்த செயல் அது. நீங்கள் பாடி அவர் மேடைக்கு வருகிறார் என்றால், மற்ற கவிஞர்கள் நிலைமை என்ன? கவிதையால் திறமை காட்ட வேண்டுமே ஒழிய, திட்டமிட்ட நடிப்பாலா மக்களை ஏமாற்றுவது? நடிக்க இடமா இல்லை? கவியரங்கத்திலா நடிப்பது?''

''மன்னிக்க வேண்டும்.''

''என்றோ மன்னித்து விட்டேன். பானுமதிக்குக் கஷ்டம் வரும் என்று என் வீட்டில் சொன்னதால் உங்களை விட்டுவிட்டேன். நீங்கள் பானுமதியையும் குழந்தைகளையும் விட்டுவிட்டு வந்து நிற்கிறீர்கள். கூட்டத்துக்கும் கூப்பிட வருகிறீர்கள்.''

''அது சொந்த விஷயம். மறுபடி, மறுபடி...''

''இரண்டாவது முறையாய் இதை உச்சரிக்கிறீர்கள். எவ்வளவு தூரம் பிரிந்து விட்டீர்கள் என்பதை இது காட்டுகிறது. மாணவர்களைக் கூப்பிடுங்கள்.''

மாணவர்கள் அருகே வந்து கைகுலுக்கி, மாலை போட்டார்கள். தலைவர் மாணவர்களை உட்காரச் சொன்னார். பிறகு தமிழ் மன்றம் பற்றிக் கேட்டார்.

''உங்களுக்காக வருகிறேன்'' என்றார்.

கைகூப்பி விடைபெற்று, வெளியே போய்க் கார் ஏறினார், கதிரேசன்.

கதிரேசனுக்குப் படபடப்பும், வியர்வையும் பொங்கிற்று. மாணவர்களை வழியில் இறக்கி விட்டுவிட்டு ஹோட்டலுக்குப் போய்க் குடித்தார்.

தலைவரோடு பேசியது அனைத்தும் உள்ளே பொங்கிற்று.

''போன் பண்றியாடி தலைவருக்கு? வத்தி வைக்கிறியா, என்னைக் கவுக்கறதுக்கு? உன்னை உதறிவிட்டது தப்பு. வீட்டிலேயே சாவடிச்சிருக்கணும். பொட்ட நாயே, எனக்கு எதிரா ஆடற உன்னைக் கொன்னுடறேன் பார்...''

விஸ்கி பாட்டிலோடு பேசினார்.

தள்ளாடினார்.

காரைத் தாறுமாறாய்க் கிளப்பினார்.

''என்ன அது வீடியோ? எவனுக்கோசரம் போன் பண்ணினே? ஏண்டி என்னை விட்டது இன்னொருத்தனுக்கா? திட்டமிட்டு நாடகமாடியிருக்கேம. தமிழுக்கு எதிரா வேலை செய்திருக்கே? உன்னை விட்டுடுவானா கதிரேசன்? டைவர்ஸ் ஆச்சுன்னாக் கேட்க முடியாதா? செருப்பாலயே அடிச்சுக் கேட்பேன்.''

பானுமதி வீட்டு வாசலில் கார் கிரீச்சிட்டு நின்றது. தோட்டக் கதவை எட்டி உதைத்தார். பிளந்து கொண்டு மறுபடி வந்து கதவு நெஞ்சில் அடித்தது. உள்ளேயிருந்த பரத் காப்பி தம்ளரைக் கீழே வைத்தான்.


(தொடரும்)

தோழி 1: ''நான் காதலிக்கிறது எங்கம்மாவுக்குத் தெரிஞ்சதும்...''


தோழி 2: ''உன்னை உள்ளே வெச்சுப் பூட்டிட்டாங்களா?''

தோழி 1: ''இல்லே! எல்லா நகைகளையும் பாங்கு லாக்கரிலே கொண்டு போய் வெச்சுட்டாங்க!''

— ஆம்பூர். பரந்தாமன்.



மனசுக்கேத்த மகராசா



'கெட்டுப் பட்டணம் போ' என்பார்கள். பட்டணத்தில் கெட்டு கிராமத்தில் பிழைக்க வருகிறாராம் (கி)ராமராஜன். கொழு கொழு மேனியும் குலவு முகமும் வைத்துக் கொண்டு ரெண்டு நாள் பட்டினி என்று கிராமத்து மளிகைக் கடையில் அவர் கையேந்தி வேலை கேட்கிறாராம். அதைக் கண்டு அபரிமிதப் பரிதாபத்தோடு சீதா அவருக்கு உதவ முன்வருகிறாராம்.

அந்தச் சந்திப்புத் தோரணையில் மட்டு மல்ல; தொடரும் சம்பவ ரீதியிலும் மறைந்த மூன்றெழுத்துக்காரரை அப்படி அப்படியே ஒற்றியெடுத்திருக்கிறார்கள்.

பதுமை முகபாவத்தை வைத்துக் கொண்டு பக்கவாட்டு சப்போர்ட்டிலேயே இந்த ராமராஜன் பாப்புலராவது கதை வசன டைரக்டர்கள் கைங்கரியம்தான். அரும்பாடுபட்டு காதலி வாங்கிக் கொடுத்த மளிகைக் கடை வேலையை — 'தராசுத் தட்டுக்கடியில் புளியை ஒட்டி எடைப் பித்தலாட்டம் செய்வது தப்புங்க' என்று முதலாளிக்குச் சுட்டிக்காட்டி உபதேசம் செய்ததன் மூலம் — தொலைத்து விட்டு அரச மரத்தடிப் பிள்ளையார் பக்கத்தில் அவர் வந்து அமரும் அந்த அப்பாவி முகபாவமாகட்டும்; சீதா கடுப்பும் முறைப்பும் காட்டி, 'பெரிய மகாத்மான்னு நினைப்பு; இருக்கிற வேலையைத் தொலைச்சிட்டு வந்தா என்ன அர்த்தம் புள்ளையாரப்பா?' என்று வெடிப்பதாகட்டும், இவர் ஒரு சின்னப் புருவ நெளி மட்டும் காட்டி, 'பிள்ளையாரப்பா...' என்று விளித்துச் சமாதானம் சொல்வதாகட்டும், இந்தப் போராட்டத்தில் பிள்ளையாரே திரும்பிக் கொள்ளும் கூத்தாகட்டும் — இப்படிச் சின்னச் சின்னச் சிலுமிஷங்களிலேயே திருப்திப்படுத்த முயல்கிறார்.

ராமனுக்கேற்ற சீதை. கொஞ்சலுக்கென்றே அமைந்த முகம் சீதாவுடையது. எந்த ஒரு நொடியிலும் நடிப்புக்கு வஞ்சனை செய்யாத ஏதாவதொரு பாவனை அந்த முகத்தில் அலைமோதிக் கொண்டே இருக்கிறது. இருந்தாலும் அந்த முறைப்பிலும் வெடிப்பிலும் உதிரும் வார்த்தைப் பரிமாணங்களுக்குப் பின்னணிக் குரலுக்கு ரொம்ப நன்றி சொல்லக் கடமைப்பட்டவர் சீதா.

நிழல்கள் ரவிக்குக் காரெக்டர் ரோலாம். ஆரம்பத்தில் சமானியத் தண்டல் நாயக அடியாளாய் வரும் போது பொசுக்கென்று தோன்றி, அப்புறம் கதாநாயகன் அண்ணன் என்றதும் ஒரு அந்தஸ்து பெற்று, அநியாயக் கொலைப் பழி ஏற்றுச் சிறை சென்று தப்பி வந்து சூழ்ச்சிக்காரப் பண்ணையாரைப் பழிவாங்கத் துடிக்கும் போது கனம் சேர்த்துக் கொள்கிறார்.


பண்ணையார் — கதைக்கு வேரான வில்லன். இந்தப் பாத்திரத்தில் கவுண்டமணியைக் கூத்தடிக்க விட்டு சீரியஸ் கட்டத்தைச் சின்னாபின்னமாக்கி விட்டார்கள். வில்லன் முறைப்புக் காட்டும் முக்கிய கட்டத்தில் சிரிப்புத்தான் வருகிறது.

கவுண்டமணிக்குச் செந்தில் ஜோடி சேர்ந்தால்தான் எடுக்கும் என்ற அச்சத்தில் அவரையும் போட்டு, வெறுமே இளிக்க வைத்திருக்கிறார்கள். பாவம் செந்தில்.

புதுமுக இசையமைப்பாளர் தேவா, 'மஞ்சக் குளிக்கறே...' போன்ற இரண்டொரு பாடல்களில் தன்னை அடையாளம் காட்டியிருக்கிறார்.

அவலை நினைச்சு உரலை இடிச்சானாம். எம்.ஜி.யாரை நினைக்க ரா. ராஜனைப் போட்டாராம்!

— பி. எஸ். எஸ்.




ஆட்டோ பிடித்துப் புறப்பட்டார்கள். ரஞ்சனா தீவிரமான யோசனையில் இருந்தாள்.

இதுவரை நடந்தவை அவள் சந்தேகங்களை உறுதிப்படுத்துவதாகவே தோன்றின. அவள் மேற்கொண்டுள்ள முயற்சிகளைக் கைவிடச் செய்யும் நோக்கத்துடன் நடைபெறும் இவற்றைக் கண்டு அவள் பயந்து, விட்டுவிடப்போவதில்லை என்று முடிவு செய்தாள். இன்னும் முனைப்போடு இந்த விவகாரத்தில் ஈடுபடுவதற்கான வழிமுறைகளை மனம் பட்டியலிடத் தொடங்கியது...

ஒரு குலுக்கலுடன் ஆட்டோ நின்றது. சட்டென்று சிந்தனையிலிருந்து விடுபட்டு மாலினியைத் திரும்பிப் பார்த்தாள்.

மாலினியின் முகத்தில் லேசான அதிர்ச்சி தெரிந்தது. அவள் பார்வை எதிரே தெருவில் நிலைத்திருந்தது...




ஆட்டோவை அனுப்பிவிட்டு—
... அதோ பாரு. கதவு திறந்திருக்கு. காலால வந்தவங்க கதவை உடைச்சு உள்ளே போய்.. சரிதான், அதைத்தான் கொண்டு போயிருக்கணும்...
அவசரமாக உள்ளே ஓடினார்கள்.
வீடு முழுவதுமே ஒரு புயல் கடந்து சென்றிருந்ததைப் போல அலங்கோலமாகக் கிடந்தது.
மேசை டிராயர்கள் இழுக்கப்பட்டிருந்தன. உள்ளே இருந்தவை தரையில் கொட்டப்பட்டிருந்தன.
பீரோக்கள் திறக்கப்பட்டிருந்தன. உள்ளே இருந்த துணிமணிகள் மேடு குவியலாகக் கிடந்தன.
கட்டிலின் மீதிருந்த மெத்தையும் தலையணைகளும் குத்திக் கிழிக்கப்பட்டிருந்தன.
டிரஸ்ஸிங் டேபிள் கண்ணாடி உடைக்கப்பட்டிருந்தது. அதன் துண்டுகள் தரையில் சிதறிக் கிடந்தன.
இவைகளோடு திரும்பியபோது, லிப்ஸ்டிக்கின் ரத்தச் சிவப்பில், சுவரில், அந்த வாக்கியம் கண்களில் பட்டது...
ரொம்ப வருத்தமா இருக்கு மாலினி. எனக்கு உதவப் போய் உனக்கு எவ்வளவு நஷ்டம்!
இதே கதிதான் உங்களுக்கும் எச்சரிக்கை
கவலையில்லை. இதனால என்னோட முடிவில எந்தவொரு மாற்றமுமில்லை...
... ஆமாம், இந்த விவகாரம் முடியற வரைக்கும் நீ என்னோடவே தங்கிடு. கடைசி வரை உனக்குத் துணையிருந்து இதை முடிக்கப் போறேன்.
அவங்க எதைத் தேடி யிருக்காங்க?
புரியலை? உனக்குக் காண்பிக்கறதாச் சொன்னேனே, அந்த லெட்டரையும் போட்டோவையும் தான். அதைத் தான் கொண்டு போயிருக்காங்க.
தொடரும்

இதயத் துடிப்பைச் சீராக்கும் கருவி



அன்னை தெரசாவுக்கு, சமீபத்தில் இதய நோய் வந்து சிகிச்சை அளிக்கப்பட்ட போது, அவர் உடலுக்குள்ளேயே, இதயத் துடிப்பைச் சீராக்க பேஸ் மேக்கர் கருவி பொருத்தப்பட்டது.

பேஸ் மேக்கர் பற்றிய தகவல்களை, சென்னை விஜயா ஹெல்த் சென்டரில் உள்ள முதன்மை இதய நோய் மருத்துவர் டாக்டர் தாமஸ் மாத்யூவிடம் கேட்டோம்:

o எந்தக் கட்டத்தில் பேஸ் மேக்கர் பொருத்தப்படுகிறது?

இதயத் துடிப்பு மெதுவாகிப் போய், மயக்கமும் திடீரென்ற பலவீனமும் வரும் பொழுது.

o இது எப்படிச் செயல்படுகிறது?

சராசரியாக இதயம் இத்தனை தடவை துடிக்க வேண்டும் என்று பேஸ் மேக்கரில் அமைக்கப்பட்டிருக்கும் எண்ணிக்கைக்குக் குறைவாக, நோயாளியின் இதயத் துடிப்பு இருக்குமானால், உடனே பேஸ்மேக்கரில் பொருத்தப்பட்டிருக்கும் உணர்வு இணைப்புகள் (சென்ஸிங் டிவைசஸ்) அதை உணர்ந்து கொண்டு, சரியான எண்ணிக்கை அளவுக்குத் துடிக்க உதவும்.

o சரி. நோயாளியின் இதயத் துடிப்பு நார்மல் ஆகி விட்டால்?

பேஸ்மேக்கர் தானாகவே நின்று போய் விடும். அது ஆட்டோமாடிக். நோயாளியின் இதயத் துடிப்புக் குறையும் போது, மறுபடி தன் வேலையைச் செய்யும்.

o இதை இதயத்துக்கு அருகேயே பொருத்துவார்களா?

சற்று மேலே; அல்லது கீழே. உடலின் இடதுபுறம் அல்லது வலதுபுறம், நோயாளியின் நிலையை அனுசரித்து.

o இதை ஒரு அறுவைச் சிகிச்சை நிபுணர் தான் பொருத்த வேண்டுமா?

வழக்கமாக இதை கார்டியாலஜிஸ்ட் எனப்படும் இதய நோய்ச் சிகிச்சை மருத்துவர்தான் பொருத்துவார். அவர் அறுவைச் சிகிச்சை நிபுணராகத்தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. 30 முதல் 45 நிமிடங்களுக்குள் இதை உடலில் பொருத்தி விட முடியும்.

o இது எப்படி இயங்கும்?


லிதியம் குரோமேட், லிதியம் அயோடைட் என்று பாட்டரிகளில் சாதாரணமாக உபயோகிக்கப்படும் பாட்டரி செல்களில் தான் இது இயங்குகிறது.

o இது வேலை செய்கிறதா, நின்று போய் விட்டதா என்று எப்படித் தெரியும்?

ஒவ்வொரு பேஸ்மேக்கரிலும் அதன் முடிவு காலம் குறிப்பிடப்பட்டிருக்கும். இதை என்ட் அஃப் லைஃப் இன்டிகேட்டர் என்பார்கள். அதை காந்தத்தால் அறிந்து கொள்ளலாம். பிறகு மூன்று அல்லது ஆறு மாதங்களுக்குள் வேறு பாட்டரி மாற்றிக் கொண்டு விடலாம்.

o ஒரு பாட்டரியின் ஆயுள் காலம் எவ்வளவு?

* பேஸ்மேக்கர் பொருத்தப்பட்ட இதயம்...



ஏழு முதல் பத்து வருடங்கள். இதைத் தான் பர்மனென்ட் பேஸ்மேக்கரில் வைக்கிறார்கள். மதர் தெரசாவுக்கு வைத்திருப்பது இந்த வகைதான்.

o அப்படியானால் பாட்டரியை மாற்றும் போது, மறுபடி பழையபடியே அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமா?

வேண்டாம். இதயத்துக்குள் இணைக்கப்படும் 'மெட்டல் லீடை'த் தொடவே வேண்டாம். பேஸ்மேக்கரில் உள்ள பாட்டரி செல்லை மட்டும் மாற்றினால் போதும். இதற்கு, பேஸ் மேக்கர் பொருத்தப்பட்டிருக்கும் இடத்தை மட்டும் திறந்தால் போதும்.

o காதுக்கு இயர்ஃபோன் வைத்துக் கொள்ளுவது போல, உடலுக்கு வெளியே இதை வைக்க முடியுமா?

இப்போதைக்கு முடியாது. இனி போகப் போக எப்படியோ? விஞ்ஞான வளர்ச்சி தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

o டெம்பரரி பேஸ்மேக்கர் என்கிறார்களே, அது என்ன?

உடனடியாக, அப்போதைக்கு நிலைமையைச் சமாளிக்க, வெளியே உள்ள இயந்திரத்தில் ஒயர்கள் மூலம் இதயத்தை இணைத்து, துடிப்பைச் சீராக்குவது. (இதற்கு ஆயிரம் ரூபாய்க்குள்தான் ஆகும்) ஆனால் இது நிரந்தரமான வழி அல்ல.

o இந்தியாவில் எங்கெல்லாம் இது பொருத்தப்படுகிறது?

எல்லா முக்கிய நகரங்களிலும்.

o இந்தியாவில் பேஸ்மேக்கர் தயாராகிறதா?

இல்லை. இப்போதைக்கு அமெரிக்காவிலிருந்தும், ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்கிறோம்.

o ஒரு பேஸ்மேக்கர் பொருத்திக் கொள்ள எத்தனை செலவாகும்?


ஆபரேஷன் செலவும் சேர்த்து 15,000 ரூபாய் முதல் 30,000 ரூபாய் வரை ஆகும்.

o இதை வைத்துக் கொண்டவர்கள் எந்த வேலையிலும் பழையபடி ஈடுபட முடியுமா?

ஆரம்பத்தில், அறுவைச் சிகிச்சை செய்த இடத்தில் சற்று அசௌகரியமாக இருக்கும். நாளாக ஆக, பேஸ்மேக்கர் பொருத்திக் கொண்டதே மறந்து போய் விடக்கூடும்! மருத்துவரின் ஆலோசனைப்படி, பொருத்திக் கொண்டவரின் சௌகரியத்தைப் பொறுத்து, வேலைகள் செய்யலாம்; தாம்பத்ய உறவும் கொள்ளலாம்.

— சாருகேசி

கின்னஸில் இடம் பெற்ற பள்ளி!



கல்கத்தாவில் 'சவுத் பாயின்ட்' என்ற பெயரில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. கின்னஸ் புக் ஆஃப் வோர்ல்ட் ரிகார்ட்ஸில் இந்தப் பள்ளி இடம் பெற்றிருக்கிறது. காரணம், உலகத்திலேயே மிக அதிகமான மாணவர்களைக் கொண்ட பள்ளி இதுதான். 12,306 பேர்! இவர்களில் பாதிப் பேர் உதவித் தொகை பெறுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது!

இப் பள்ளி நிறுவப்பட்டதே ஒரு கதை! சதிகந்த குஹா என்பவர், தன் மகனுக்கு மிஷனரி பள்ளிகளில் இடம் கிடைக்காததால் வெறுத்துப் போய், கல்கத்தாவின் 'புது மார்க்கெட்' வியாபாரிகளிடம் கடன் வாங்கி ஒரு பள்ளிக்கூடத்தையே நிறுவினார். அதுதான் சவுத் பாயின்ட் பள்ளி!

— நேஷனல் ஹெரால்டு
— எம். எஸ்.

புதுமனைவி: "என்னங்க இது! கல்யாணத்துக்கு முந்தி மூவாயிரம் சம்பளம்னு சொன்னீங்க...! இப்போ, வெறும் இருநூற்றைம்பதுதான்னு சொல்றீங்களே?"

கணவன்: "ஹி... ஹி... நான் அப்பச் சொன்னது வருடச் சம்பளம்!"

— சீர்காழி ஸ்ரீராம்.



உங்கள் குழந்தைக்கு
அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்



திட உணவின் தொடக்கத்திலிருந்தே

உங்கள் குழந்தைக்கு நான்காம் மாதத்திலிருந்தே பாலோடு திட உணவும் தேவை. அப்போது ஸெரிலாக் அனுகூலம் அளியுங்கள்.

போஷாக்கு அனுகூலம்: ஒவ்வொரு முறை ஸெரிலாக் ஊட்டும் போதும், புரதச்சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின், மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்குச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கிறது.

சுவை அனுகூலம்: ஸெரிலாக் சுவையில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம்: ஸெரிலாக் ஏற்கனவே பதமாக்கப்பட்டது; பாலும் சர்க்கரையும் கலந்தது. காய்ச்சி ஆறிய நீரில் கலந்தாலே போதும்

தேர்ந்தெடுக்க அனுகூலம்: இப்போது ஸெரிலாக், மூன்று வெவ்வேறு வகைகளில்!

சுகாதாரமான முறையில் தயாரிக்கவும், சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.



6 மாதங்களிலிருந்து

4 மாதங்களிலிருந்து

6 மாதங்களிலிருந்து

இலவசம்
ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: ஸெரிலாக்,
தபால் பெட்டி எண். 3
புது தில்லி-110008

Nestlé

ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

ஒரு வெள்ளி மோதிரம்

அந்த மோதிரத்தைப் பார்த்தேன். கைவிரல்களினிடையே எழுந்த ஒரு பூர்ண சந்திரோதயம் போல் தோன்றும் அந்த வெள்ளி மோதிரத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்தேன். லேசாய், முகப்பின் வட்ட அமைப்பில் எளிய வேலைப்பாட்டுடன் இருந்தது.

மலிவுப் பொருள்தான். மிஞ்சிப் போனால் நூறு ரூபாய் பெறும். அது முக்கியமில்லை. வேணுகோபாலன் இதை விரலில் அணிந்திருந்தார் என்பதுதான் இதன் மதிப்பு. இளவயதில் மனைவியை இழந்து இரு குழந்தைகளுடன் வாழ்க்கையை ஒரு போராட்டமாக எதிர்கொண்ட, வசதியற்ற தம் பழைய காலத்தை மறந்துவிடக் கூடாதென்று, அப்போது அணிந்த இந்தச் சாதாரண வெள்ளி மோதிரத்தையே லட்சாதிபதியான பிறகும் தொடர்ந்து அவர் அணிந்து வந்திருந்தார். சென்ற மாதம் அவர் ஆயுள் முடிவுற்ற போது உடலை மயானத்துக்கு எடுத்துப் போகுமுன் கழற்றினேனே, அது வரையில் தம் விரலிலிருந்து அகற்றாமல் அவர் இதை அணிந்திருந்தார்.

இரண்டாண்டு காலமாக கான்ஸரோடு போராட்டம். கடந்த ஏழெட்டு மாதங்களாகப் படுத்த படுக்கையிலேயே வைத்து அவரைக் கவனித்துக் கொள்வதற்காக அவர் மகன்கள் தங்கதுரையும் அரவிந்தனும் ஒரு பணியாளை அமர்த்தியிருந்தார்கள். வேணுகோபாலன் கடைசி வரை பிடிவாதமாய்த் தம் வீட்டிலேயே தனியாக வேலைக்காரர்கள் துணையில் வாழ்ந்தவர். இரு மகன்களும் உள்ளூரிலேயே இருந்தாலும் தந்தையை வந்து வந்து பார்த்துக் கொள்ள முடிந்ததே தவிர, உடனிருக்க முடியவில்லை. வேலை மும்முரம் அதிகம். தந்தையை அடியொற்றி இருவருமே தொழில் துறையில் நன்கு தலையெடுத்துக் கொண்டிருந்தார்கள்.

இன்று வேணுகோபாலன் உயிரோடு இல்லை. அவருடைய வக்கீலாக அவர் உயிலின் உள்ளடக்கத்தை அவர் மகன்களுக்கு நான் தெரிவித்து விட்டேன். இப்போது அவர் நண்பனாக இந்த மோதிரத்தை மனம் வலிக்கப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இளம் பருவம் முதல் அவருடைய ஒரே ஒரு நெருக்கமான, ஆப்த நண்பன் நான்தான்.

பணியாட்களுக்கு இரண்டாயிரம் மூவாயிரம் என்று ஒதுக்கிய சிறுசிறு அன்பளிப்புகள் நீங்கலாக, வேணுகோபாலன் வணிகத் துறையில் தாம் ஈட்டியிருந்த சொத்துக்களையெல்லாம் மூன்றாகப் பிரித்து, இரண்டு பங்குகளை இரண்டு மகன்களுக்கும், ஒரு பங்கை அடையாறு கான்ஸர் இன்ஸ்டிடியூட்டுக்கும் எழுதி வைத்திருந்தார்.

அதெல்லாம் சரி. இது யாருக்கு?

இந்த மோதிரம். இந்த நினைவுச் சின்னம். வேணுகோபாலனின் மகன்களுக்கு இது தந்தையின் நினைவுச் சின்னம். ஏதோ அவர் வைத்திருந்த, ஆண்டிருந்த பொருள் இல்லை. அவர் அணிந்திருந்த பொருள். அவர் உடலைத் தொட்டுக்கொண்டே வாழ்ந்திருந்த பொருள். அவர் பூசிய சோப்பின் மணத்தையும், அவர் வடித்த வியர்வையின் வாடையையும் அறிந்திருந்த பொருள். இதைவிட அழகியதாய், விலைமதிப்புள்ளதாய், எத்தனையோ பொருட்களைக் கடையில் வாங்கலாம். ஆனால் இதை வாங்க முடியாது. இதற்கு விலையில்லை.

இதைக் காணாமல் எந்த மகனும் தேடாதது எனக்கு வியப்பாயிருந்தது. போகிறார்கள். துக்கத்தில் மறந்திருக்கலாம். உரியவர்களிடம் இப்பொக்கிஷத்தைச் சேர்ப்பது என் கடமை.

எப்போதுமே அரசனின் மகுடத்துக்கு முதல் உரிமை பெற்றவன் மூத்த மகன் தானே?

அடுத்த முறை உயிலின் ஏதோ ஷரத்தைப் பற்றித் தங்கதுரையைச் சந்தித்துப் பேசிய சந்தர்ப்பத்தில் "இந்தா துரை, இது உன்னுது" என்று மோதிரத்தை அவனிடம் நீட்டினேன்.

"எங்கப்பா போட்டிருந்ததுதானே?"

"அதேதான். அவர் உடம்பைத் தூக்கறதுக்கு முந்தி நான்தான் இதை ஜாக்கிரதையாய்க் கழற்றி வச்சேன்."

"ஏன், ப்ளூ ஜாகர் பாழாப் போகுதேன்னா?"

கணநேரம் அதிர்ந்தவன் பிறகு அவனை நிதானமாய்ப் பார்த்துக் கூறினேன்: "ப்ளூ ஜாகர் எதையும் உன் அப்பா விரலில் போடலே துரை. இதைத்தான் போட்டிருந்தார். அதனால் இதுக்குத்தான் மதிப்பு அதிகம்னு நான் சொல்லித்தானா உனக்குப் புரியணும்?"

"இப்ப நான் என்ன செய்யணுங்கறீங்க?"

"எனக்காக நீ எதுவும் செய்ய வேணாம்ப்பா! உனக்காகவேதான். உன் அப்பா கடைசி வரை கழட்டாம கையில் போட்டிருந்த மோதிரத்தை இப்ப நீ வாங்கிப் போட்டுக்க."

"விளையாடறீங்களா? எனக்கு வேணாம் இது. நான் மோதிரம் போட்டுக்கற பழக்கமே கிடையாது."

ஆர். சூடாமணி

"இது வெறும் மோதிரமா துரை? உங்கப்பாவின் நினைவுச் சின்னமில்லையா? போட்டுக்காட்டியும் வாங்கி வீட்ல வச்சிக்கயேன்."

"எனக்கெதுக்கு ஸார் நினைவுச் சின்னமெல்லாம்? அப்பாவை நினைவு வச்சிக்க எனக்கு ஒரு சின்னம் தேவையா என்ன? எங்கப்பா இங்கே இருக்கார் ஸார்!" அவன் தன் நெஞ்சை நாடகப் பாணியில் தட்டிக் காட்டினான்.

நான் எரிச்சலை அடக்கிக் கொண்டு பேசினேன்: "நீ முதல் மகன். இந்த மோதிரத்தை வச்சிக்கிற முதல் உரிமை உனக்குத்தான்..."

அவன் வாய் விட்டுச் சிரித்தான். "இந்த மோதிரத்துக்கு உரிமை...! நிஜத்தில் என் உரிமையை நீங்க நினைச்சிருந்தா, சொத்தில் மூன்றில் ஒரு பங்கை அப்பா கான்ஸர் இன்ஸ்டிடியூட்டுக்குக் கொடுத்திருக்காரே, அதுவும் எங்களுக்குத்தான் சேரணும்னு நீங்க சொல்லித் தடுத்திருக்கலாமில்ல? உங்களை வச்சிக்கிட்டுத்தானே உயில் எழுதியிருப்பார்? தகப்பனார் சொத்து, பிள்ளைகளுக்கு வர வேண்டியதுதானே நியாயம்? அந்த லட்சக்கணக்கான தொகையைக் கைநழுவ விட்டுட்டு, நூறு ரூபாய் பெறாத ஒரு சுண்டைக்காய் மோதிரத்தைப் பத்தி, உரிமைப் பேச்சு என்ன ஸார் வேண்டியிருக்கு?"

"அவர் பணம். அவர் விரும்பின வகையில் கொடுத்தார். போகுது. நீதான் உன் அப்பாவை நெஞ்சுக்குள்ளேயே பத்திரமாய் வச்சிருக்கியே! இந்தக் கூடுதல் லட்சங்கள் இல்லாமல்தானா அங்கே விளக்குப் போடாம போயிடப் போறே?"

அவன் முகம் சிவந்து மௌனமானான்.

"இந்தா, அரவிந்த்!"

"என்ன ஸார்?"

"இதோ இந்த வெள்ளி மோதிரம், உன் அப்பா கடைசி வரை கழட்டாம விரலில் போட்டிருந்தது."

"தெரியுமே."

"அவர் நினைவா நீ இதை வச்சிக்க."

'போட்டுக் கொள்' என்று சொல்லத் தயக்கமாயிருந்தது. இவனும் இது வெறும் வெள்ளி என்பதால் 'நான் மோதிரம் போடுவதில்லை' என்று தூக்கியெறிந்தால்?

ஆனால் அரவிந்தன் உடனே எழுந்து



அடுத்த இதழில்...



வெற்றிகரமான மணவாழ்க்கை...
— சிறப்புக் கட்டுரை

நின்றான். ''கொடுங்க ஸார்'' என்று இரு கைகளையும் நீட்டி மோதிரத்தை வாங்கிக் கொண்டான். குனிந்து என் பாதங்களைத் தொட வந்தான்.

''சேச்சே, என்னப்பா இது அரவிந்த்! நீ நல்லா இரு. அதுக்காக என் காலையெல்லாம் தொட வேணாம்.''

''நீங்க பெரியவர். இது அப்பா நினைவுச் சின்னமாய் இருந்தாலும் இப்ப அவர் உயிரோடில்லை. நீங்கதான் கொடுக்கறீங்க. உங்களை வணங்கி ஆசி பெற்றுக்கிட்டு இதை நான் போட்டுக்கறது முறைதானே?''

எனக்கு மனம் பொங்கி வந்தது. என் எதிரேயே அவன் மோதிரத்தைத் தன் விரலில் •அணிந்து கொண்டான். அதை மெல்லத் தடவிக் கொடுத்தான். கண்கள் லேசாய்க் கலங்கின.

''உனக்கு இது என்னிக்கும் அதிருஷ்டமாய் இருக்கட்டும் அரவிந்த்!'' என்று மனமார வாழ்த்தினேன்.

ஆனால் ஒரே வாரத்தில் அவன் என் வீடு தேடி வந்தான். விரலில் வெள்ளி மோதிரம் இல்லை.

''ஸார், ரொம்ப ஸாரி. தப்பா நினைச்சுக்காதீங்க. இந்த மோதிரத்தை நான் திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கு.'' தன் பாண்ட் பையிலிருந்து பிளாஸ்டிக் தாளில் சுற்றி வைத்திருந்த அந்த மோதிரத்தை எடுத்து நீட்டினான் அரவிந்தன். நான் வாங்கிக் கொள்ளவும் தோன்றாமல் மலைத்து அதை வெறித்தேன். ஒரு கணம் காத்திருந்த பின் அவன் அதை அருகிலிருந்த மேஜை மேல் வைத்தான்.

''என்ன இது அரவிந்த்? அன்னிக்கு அத்தனை அன்பாய் வாங்கிக்கிட்டே, இப்ப என்ன திடீர்னு?''

''என்ன சொல்றது ஸார்! தேவகி ரொம்பப் பேசறா. 'இதென்ன மோதிரம், பழைய வெள்ளி மோதிரம்! இந்தப் பித்தல் மோதிரத்தை என்னமோ பெரிய தங்கம், வைரம் இற மாதிரி அவரும் கொடுக்கறார்... நீங்களும் வெக்கமில்லாம வாங்கிப் போட்டுக்க றீங்களே! எனக்கு அவமானமாயிருக்கு. தூக்கி எறியுங்க' அப்படின்னு இதே மாதிரி குத்திக் குத்திப் பேசிக்கிட்டே இருக்கா.''

''இது வெறும் மோதிரமா அரவிந்த்? இதைப் பணரீதியாவா மதிப்பிடறது?''

''எனக்குப் புரியுது ஸார்! ஆனா அவ இப்படி எந்நேரமும் இதைக் குறைச்சுப் பேசிக்கிட்டிருக்கற போது நான் என்ன செய்வேன் சொல்லுங்க.''

இவன் பெண்டாட்டிக்குப் பயப்படுகிறவன் என்பது தெரிந்ததுதான். ஆனால் ஆழமான விஷயங்களில் கூடவா தன் கருத்தைச் சொல்லக் கூடாது? தான் அணிந்து கொள்ளா விட்டாலும் வீட்டில் எங்காவது கண் மறைவாகவேனும் வைத்துக் கொள்ளக் கூடாதா? திருப்பிக் கொடுத்து விட வேண்டுமா?

''நீங்க தப்பா எடுத்துக்காதீங்க ஸார்!''

''இதில் நான் தப்பா எடுத்துக்க என்னப்பா இருக்கு? உன்னை நினைச்சு வருத்தப்படறேன், அவ்வளவுதான்.'' மோதிரத்தை பிளாஸ்டிக் சுற்றோடு எடுத்து என் சட்டைப் பையில் வைத்துக் கொண்டேன்.

அடுத்ததாக இந்த அருமைப் பொருளை வேறு யாரிடம் எடுத்துப் போகலாம்? மகன்களைத் தவிர வேறு சுற்றம் வேணுகோபாலுக்கு இல்லையே...

''ஐயா.... ஐயா...'' என்று மயானத்தில் பிள்ளைகள் உட்பட மற்ற அனைவரும் சென்று விட்ட பிறகும் அவன் தனியாய்ச் சிதையின் கால்மாட்டில் நின்று, மெல்ல விம்மிக் கொண்டிருந்தான். கடைசியாய் ஒருமுறை நண்பரைப் பார்த்துக் கொள்ள விரும்பித் தலைதிருப்பிய என் பார்வையில் அவன் தெரிந்தான்.

ஆறுமுகம்.

படுக்கையிலேயே அவருக்கு எல்லாப் பணிவிடைகளும் செய்து அசிங்கப்படாமல் அக்கறையாய்க் கவனித்துக் கொண்டிருந்த நடுத்தர வயதுப் பணியாளன்.

வேணுகோபாலனின் உயிர் பிரிந்தவுடனேயே அந்த ஆள் ஓர் அன்னியனாக ஒதுக்கப்பட்டான். குடும்பம் அவரை ஆக்கிரமித்துக் கொண்டது. மகன்கள், மருமகள்கள், பேரக் குழந்தைகள், அண்டை அயலார் என்று உரிமை கொண்டாடிய கூட்டத்தில் ஆறுமுகத்துக்கு இடமில்லை. வேணுகோபாலன் தம் உயிலில் அவனுக்கு மூவாயிரம் ரூபாய் எழுதியிருந்தார். அவனுக்குச் சம்பளப் பாக்கியைக் கொடுத்து வீட்டுக்கு அனுப்பும் போது, குடும்பத்தினர் ஒரு புது வேட்டியும், துண்டும் கொடுத்தார்கள். இதற்கு மேல் எனக்கும் அவனிடம் அதிகக் கவனம் செல்லவில்லை.

இப்போது அவன் திடீரென்று நினைவுக்கு வந்தான். இழவு வீட்டில் தேவையற்ற பொருளாக மூலை மூலையாய் ஒதுங்கி நின்றிருந்தவன் முகத்தின் துயரம் இப்போது நினைவுக்கு வந்தது. யாருமற்ற மயானத்தில் தனியாக ''ஐயா ஐயா...'' என்று அழுது கொண்டிருந்த உருவம் நினைவுக்கு வந்தது. வேட்டி துண்டு

கொடுத்த போது "இதெல்லாம் எதுக்குங்க, பெரியய்யா நினைவா ஏதாச்சும் கொடுத்தாலும்.." என்றவனின் முகம் இப்போது, அரவிந்த் திருப்பிக் கொடுத்த வெள்ளி மோதிரம் பையில் கனக்க உட்கார்ந்திருந்த போது, எனக்கு நினைவு வந்தது.

"ஆறுமுகம்!"

"வக்கீலய்யாவா? வாங்க வாங்க. என் வீடு தேடி வந்திருக்கிங்களே! உங்களை உக்கார வைக்க நல்லதா ஒரு நாற்காலி கூட இல்ல..."

"அதெல்லாம் வேணாம்ப்பா. இந்தா, உனக்குக் கொடுக்கச் சின்னதா ஒரு பொருள் கொண்டு வந்தேன்."

அவன் கண் மலரக் காத்திருந்த போது என் சட்டைப் பையிலிருந்து அந்த வெள்ளி மோதிரத்தை எடுத்தேன்.

"இதைப் பார்த்தியா ஆறுமுகம்?"

"என்னங்க அது? ஓ, பெரியய்யா போட்டிருந்த மோதிரமில்ல?"

"அதேதான். உயிரிருந்த வரை அவர் இதைக் கழட்டாம போட்டிருந்தார்."

"தெரியும். நான் அன்னாடம் அவர் உடம்பைத் துடைச்சுச் சுத்தம் செஞ்சிருக்கேனே."

"அந்தப் பணிவிடையெல்லாம் பிரியமாய்ச் செஞ்சு கடைசி வரை அவருக்காக அன்போட கண்ணீர் விட்ட உன்னை விட இதுக்கு அருகதையானவங்க வேறு யார் இருக்க முடியும்? இந்தா" என்று மோதிரத்தை நீட்டினேன்.

"என்னங்க?"

"எடுத்துக்கப்பா."

"எனக்கா?"

"ஆமாம். பெரியய்யா நினைவா நீ இதை வச்சிக்க."

"வேணாங்க" என்று அவன் தலையை ஆட்டினான்.

"கூச்சப்படாதே ஆறுமுகம். அவரோட நினைவுச் சின்னமாய் இதை வாங்கி வச்சிக்க. ம், வாங்கிக்கப்பா!"

"என்னங்க நினைவுச் சின்னம்னு பெரிசா ஒரு வார்த்தை? எல்லாம் இவனுக்கு இது போதும்கிற எண்ணம்தானே?"

என்ன சொல்கிறான் இவன்? குபுகுபுவென்று இவன் முகம் ஏன் கனல்கிறது?

"இதுவே பெரியய்யா கையோட போட்டிருந்தது ஒரு தங்க மோதிரமாயிருந்தா எனக்குக் கொடுப்பீங்களா? மனசு வருமா? வெள்ளிதானே, ஏழை அதையே பெரிய சொத்துன்னு நினைச்சு வாங்கிப்பான்னு இதைக் கொடுத்து நல்ல பேர் எடுக்கப் பார்க்கறீங்க..."

நான் அதிர்ந்து போனேன். "என்னப்பா பேச்சு இதெல்லாம்? நான் இதை ரொம்ப அருமையா, விலைமதிக்க முடியாத பொருள்னு நினைச்சு உன்கிட்டே எடுத்து வந்தேன் ஆறுமுகம்! அவர் நினைவா ஏதானும் கொடுத்தால் நல்லாயிருக்கும்னு நீயே சொல்லலையா? அவர் கடைசி வரை கழட்டாம போட்டிருந்த, 'அவருக்கு ரொம்பவும் பிரியமான' இந்தப் பொருளை அவர் நினைவா நீ வச்சிக்கணும்னு..."

"சரிதாங்க, எல்லாம் தெரியும். அப்படி அவர் நினைவா எனக்கு ஏதானும் தரணும்னா இந்தப் பிசாத்து வெள்ளி மோதிரம்தானா கிடைச்சுது? அவர் கையில் கட்டியிருந்தாரே ஒரு ஒசத்தியான வெளிநாட்டுக் கடியாரம், அதைக் கொடுக்கறது! கடைசிப் பத்து நாள் அவர் உடம்பு ரொம்ப மோசமானதுமே துரையய்யாவோட பெரிய மகன் 'இனிமே தாத்தா இதை எங்கே கட்டப் போறார்? இந்த வாட்ச் எனக்குத்தான்'னு சொல்லி எடுத்துக்கிட்டான். ஏன், 'ஆறுமுகத்துக்கு அதைக் கொடுடா'ன்னு சொல்றதுதானே?"

அவன் முகத்தையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டு நின்றேன். அன்று மயானத்தில் அழுது கொண்டிருந்த அந்த முகம் தானா இது?

ஆம், அதே முகம்தான். விசுவாசமாய் உழைத்த ஒரு வேலைக்காரன். நல்ல மனிதன். அதற்கு மேல் நான் என்ன எதிர்பார்த்தேன்? சொந்த ரத்தத்துக்கே இல்லாத உணர்ச்சிரீதியான உந்தல்களையா?

"ஸாரி ஆறுமுகம். உன்னை வீணாத் தொந்தரவு செஞ்சிட்டேன். வரேன்" என்று மோதிரத்தை மீண்டும் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு தலைகுனிந்து திரும்பி நடந்தேன்.

இனி இதைப் பெறத் தகுதி உள்ளவர் யார்? இதை மதிக்க இங்கே ஆளில்லையே வேணு!

ஏன் இல்லை? ஓர் ஆள் இருக்கிறான். மறந்து விட்டேனே!

மோதிரத்தைக் கண்களில் ஒற்றிக் கொண்டு எழுந்தேன். இரும்பு அலமாரியில் என் பொருட்களோடு அதைச் சேர்த்து வைத்துப் பூட்டினேன்.

"எங்க வாக்குச் சாவடியில் இருந்த 'போலிங் ஆபீஸர்' ரொம்ப நல்லவர்..."

"எப்படிச் சொல்றே?"

"என் வோட்டை வேற எவனோ போட்டுட்டான்னு தெரிஞ்சதும், வேற ஒருத்தர் வோட்டைத் தந்து என்னைப் போடச் சொன்னாரே!"

— சீர்காழி ஸ்ரீராம்.



ராஜீவ்காந்தி இனி எப்படிச் செயல்பட வேண்டும்?



* எப்படி நடப்பது?

* வி. எஸ். அனந்தராமன், சென்னை.

? பாகிஸ்தான் — இந்தியா கிரிக்கெட் ஆட்டம் டிராவில் முடிந்து விட்டதே?

! அட்லீஸ்ட் டிரா பண்ணவாவது முடிந்ததே என்று சந்தோஷப்பட வேண்டியது தான்!

* கா. அப்துல் மஜீத், திருமயம்.

? அஞ்சலட்டையில் ப்ரூ விளம்பரம் போடுவதற்குப் பதில் அறிஞர்களின் பொன்மொழிகளை அச்சிட்டிருக்கலாமே!

! ஒவ்வொரு தபால் கார்டினாலும் அரசுக்கு ஏற்பட்டு வரும் நஷ்டத்தை ஓரளவுக்கேனும் ஈடுசெய்யக் கூடிய விளம்பரம் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. நஷ்டத்தைத் தவிர்ப்பதே லாபம் சம்பாதிப்பதற்கு இணையானது என்பதாகவும் ஒரு பொன்மொழி உண்டு.

* கே. வி. எஸ். மணியன், குடியாத்தம்.

? காங்கிரஸ் கூட்டணி ஆட்சி நடத்துகிற காஷ்மீர் மாநிலத்தில் மத்திய உள்துறை மந்திரியின் மகளைக் கடத்தும் அவலம் நேர்ந்துள்ளதே?

! அதனால்தான் காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தி இந்த விஷயத்தில் மத்திய அரசைக் குறைகூறியிருப்பதைப் புரிந்து கொள்ள முடியாமலிருக்கிறது!

* ஏ. டி. பூவராகன், விருத்தாசலம்.

? பணவீக்கத்தைக் குறைக்க உங்களின் யோசனை என்ன?

! சிக்கனம் என்ற ஒத்தடம். — குறிப்பாக, அரசின் உற்பத்திக்கு உதவாத செலவினங்களில்.

* ஆர். வித்யாதரன், கோட்டைமருதூர்.

? பாக்யராஜின் ஆராரோ, ஆரிரரோ எப்படி இருக்கிறது?

! கட்சிக்குத் தாலாட்டுப் பாடித் தூங்க வைத்து விட்டது.

* உமார்த்தி, கோவை.

? தாங்கள் அண்மையில் அடைந்த மிகப் பெரிய நிம்மதி?

! எங்கே... அதுதான் ஒரேநாள் நிம்மதியாக முடிந்து போய் விட்டதே!

* ஆர். வேலுமணி, கடலூர்.

? தமிழக அமைச்சர்களின் இலாகா மாற்றம் இப்போது மிகவும் அவசியம் தானா?

! ஆட்சி மாற்றம்தான் இல்லை என்றாகி விட்டது, அமைச்சர்களையாவது மாற்றி வைப்போமே என்று முதல்வர் நினைத்திருக்கலாம்!

* என். பாலையன், தக்கோலம்.

? பெரிய தொழில் வர்த்தக நிறுவனங்கள் வி. பி. சிங்கைப் பார்த்துப் பயப்படக் காரணம் என்ன?

! மடியில் கனம் இருப்பதால் வி. பி. சிங்கையாள்கிற வழி அவர்களுக்கு அச்சத்தைத் தருகிறது.

* எம். ராஜேந்திரன், லால்குடி.

? இந்தியக்கிரிக்கெட் அணியில்புதிதாகச் சேர்ந்துள்ள பதினாறு வயதான டெண்டுல்கர் ஆட்டம் பற்றி?

! அதான் ஜாவேத் மியான்தாத் கூறிவிட்டாரே, 'பாம்ஷெல்' என்று. பெஷாவர் ஒருநாள் ஆட்டத்தில், பதினெட்டுப் பந்துகளில் 53 ரன்கள் குவித்த அவர் ஆற்றல் வளரட்டும்.

* எஸ். நாராயணன், நெய்வேலி.

? தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் தேர்



* ராஜீவுக்கு அறிவுரை!



* கட்சிக்குத் தாலாட்டு!

தல் முடிவுகள் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளுக்குக் கற்பிக்கும் பாடம் ஏதாவது உண்டா?

! நாட்டுக்கு நல்லது எது என்று நடுநிலையில் யோசித்துக் கடமையைச் செய்து வர வேண்டும் என்ற — ஏற்கெனவே தெரிந்த பாடத்தை மீண்டும் வலியுறுத்திப் போதிக்கிறது: பயனைக் கருதாமல் அதனை ஆண்டவன் பொறுப்பில் விட்டுவிட்டால் அவர் தேசத்தை எப்படியும் கைவிட்டு விடமாட்டார் என்பதையும் மறுபடி வன்மையாக உணர்த்துகிறது.

* மனோபாரதி, பாண்டிச்சேரி.

? ராஜீவ் காந்தி இனி எப்படிச் செயல்பட வேண்டும்?

! மூத்த தலைவர் கமலாபதி திரிபாதியின் அறிவுரையை ஏற்று, கட்சிக்குள் ஜனநாயகம் செழிக்கச் செய்ய வேண்டும். அதற்கு இஷ்டமில்லையானால் அரசியலுக்கு முழுக்குப் போட வேண்டும்.

* சுந்தர் சுந்தரி, கோவை. *

? தி. மு. க. தமிழகத்தில் செழிப்புற என்ன செய்ய வேண்டும்?

! என்ன செய்ய வேண்டும் என்பதைவிட என்ன செய்யக் கூடாது என்பதை முக்கியமாகக் கவனிப்பது நல்லது. மத்தியில் தேசிய முன்னணி ஆட்சி அமைந்துவிட்டதால் அடுத்த தேர்தல் வரை நம்மை யாராலும் அசைக்க முடியாது என்று எண்ணி இறுமாப்பு அடைந்துவிடக் கூடாது. தேர்தலில் தங்களுக்கு வோட்டுப் போடாததால் மக்களைப் பழிவாங்க வேண்டும் என்று கோபத்துடன் நினைத்துவிடக் கூடாது. அடுத்த தேர்தலில் வெற்றி நம் பக்கம் இராது; அதனால் இப்போதே அகப்பட்டதைச் சுருட்டலாம் என்று ஆரம்பித்துவிடக் கூடாது!

* கோ. தாமரை, புதுவை.

? மனைவி, தாய் இருவரும் சேலை கேட்கிறார்கள். கைவசம் இருப்பதோ ஒரு சேலை மட்டுமே வாங்கக் கூடிய அளவில் பணம். என்ன செய்யலாம்?

! யாராவது ஒருவரை விட்டுக் கொடுக்கச் சொல்லலாம். இருவருமே பிடிவாதம் செய்தால், 'இருவருக்குமே புடைவைகள் வாங்கக் கூடிய அளவில் பணம் சேரட்டும், வாங்கித் தருகிறேன்' என்றுகூறிவிட்டு இப்போதைக்கு நம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்!

* கிஷோர், திருச்சி — 21.

? இட ஒதுக்கீடுக் கொள்கை பற்றி, ஜனதா



* ஒருநாள் நிம்மதி!



* கையாளும் வழி...

நீங்கள் கேட்டவை — தராசு

தளம் தன் நிலையைத் தெளிவுபடுத்தாதது பற்றி?

! யார் சொன்னது? அதுதான் வி. பி. சிங் ஒருகொள்கையும்; தேவிலால் ஒருகொள்கையும்; மூன்றாவதாகத் தொழிலாளர் நல அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான், 'எல்லாம் ராஜீவ் காந்தி தம் தேர்தல் பிரசாரத்தின் போது ஏற்படுத்திய குழப்பம்தான்' என்பதாக ஒருகருத்தையும் வெளியிட்டு வருகிறார்களே. இன்னுமா தெளிவு பிறக்கவில்லை! அப்படியானால் பொறுத்திருங்கள்; பஞ்சாப், காஷ்மீர், இலங்கைப் பிரச்னைகள் போல் இட ஒதுக்கீடுப் பிரச்னையும் விசுவரூபமெடுத்து, கிளர்ச்சிகள் நடந்து, சில பலர் பலியான பிறகு, அரசு விழித்துக் கொண்டு நான்காவதாக ஒரு கொள்கையை அறிவிக்கும்! அப்போதாவது புரிகிறதா, பாருங்கள்!

* டி. கே. சுப்பிரமணியன், திருப்பரங்குன்றம்.

? இசைக்கு மொழி அவசியமா?

! கேட்பதற்கு மட்டுமென்றால் மொழி தேவையில்லை. மேல் நாட்டு மேதைகள் அமைத்த எத்தனையோ இசை வடிவங்களில் வார்த்தைகள் இல்லை. ஆனால் கேட்டதைத் திரும்பப் பாடி மகிழ வேண்டுமென்றால் மொழி அவசியம். இது எல்லா வகை இசைக்கும் பொருந்தும். மேல்நாட்டிலும் நவீன பாப் இசைக்குப் பாடல்கள் உண்டு. சராசரி ரசிகனுக்குப் பின்னதில்தான் அதிக ஈடுபாடு. மனசுக்குள்ளேயாவது அவன் பாடிப் பார்த்து மகிழத்தான் விரும்புவான்.

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

சுந்தர் சுந்தரி,
219, ராமலிங்கம் வீதி,
ஆர். எஸ். புரம்,
கோவை — 641 002.

அடுத்த நூற்றாண்டு:

மற்ற கிரகங்களும் மனிதர்களும்!

21

என்ன, சென்ற வாரக் குறுக்கெழுத்துப் போட்டியின் விடைகளை எழுதிவிட்டீர்களா? சரியான விடைகளைத் தருகிறேன்:

இடமிருந்து வலம்: 1. கம்ப்யூட்டர்; 2. சில்லு; 3. வான் நாய்மன்.

மேல்கீழ்: 1. கமல்; 2. சிலிக்கன்.

சரியான விடைகளை எழுதியவர்கள், தங்களுக்குத் தாங்களே சபாஷ் போட்டுக் கொள்ளலாம்.

உயிரினங்கள் வாழும் தகுதி பெற்ற மற்றகிரகங்கள், தற்போது ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை. புவி ஈர்ப்பு சரியாக இருக்க வேண்டும்; உஷ்ணம் சரியாக இருக்க வேண்டும். காற்றழுத்தம், பிராண வாயு வேண்டும். கால்பதித்து நடக்கத்தரை வேண்டும். கடலும் காற்றும் தாங்கும் அளவில் வேண்டும். கதிரியக்கம் கூடாது. தினம் வேண்டும். இரவு வேண்டும்.

இத்தனை 'சௌகரியங்களும்' கொண்ட மற்ற கிரகம் இதுவரை கிடைக்கவில்லை. எனவே, செவ்வாய்க் கிரகத்திலோ, சந்திரனிலோ மனிதர்கள் போய்க் குடிபுகுந்து, 'மார்னிங் ஷோ' பீச், மாங்காய் வசதிகள் அமைப்பது எல்லாம் தற்போது கதைகளில் தான் சாத்தியம்.

விஞ்ஞானப்படி மற்ற கிரகங்களில் மனிதன் வாழ இரண்டு முறைகள் உண்டு. ஒன்று அந்தக் கிரகங்களில் வாழ நம்மைப் பழக்கிக் கொள்ள வேண்டும். அல்லது அந்தக் கிரகங்களை நமக்கு ஏற்றதாக மாற்றிக் கொள்ள வேண்டும். சூழ்நிலையை மாற்ற வேண்டும். முன்னதை **pantropy** என்கிறார்கள். பின்னது டெர்ராஃபார்மிங் (**Terra forming**). மனிதன் பறக்கவோ நீர்மூழ்கி வாழவோ ஆக்ஸிஜனுக்குப் பதில் நைட்ரஜனை சுவாசிக்கவோ பழகி, அவன் சருமம் அதிகக் குளிரையும், மிக அதிக உஷ்ணத்தையும் தாங்கும் சக்தி பெற்று, அமில மழையில் நனையும் தகுதி பெறும் போது, மற்ற கிரகங்களில் அவன் சென்று வாழமுடியும். இது அடுத்தநூற்றாண்டுக்குள் நிகழ்வது சாத்தியமில்லை.

மூப்பதாயிரம் கோடி வருடங்களுக்கு முன் பூமியில் காற்று மண்டலத்தில் கார்பன் டையாக்ஸைடு, மீத்தேன், அம்மோனியா இப்படித்தான் கலந்திருந்தது. பிராண வாயு




* செவ்வாய்க் கிரகத்தின் தரைப்பகுதி

மருந்துக்குக் கூட இல்லை. சமுத்திரத்தில் இருந்த பாசி போன்ற அல்கேக்கள் (**algae**) கார்பன்டையாக்ஸைடிலிருந்து பிராண வாயுவைப் பிரித்து விடுவிக்க, அது மீத்தேன், அம்மோனியாவைப்பிரிக்க, அதன் பின்தான் தற்போதைய சூழ்நிலை உண்டாயிற்று. இதனால் மற்ற கிரகங்களின் சுற்றுப்புறங்களையும் மனிதனுக்கு ஏற்ப, நவீன விஞ்ஞானத்தின் உதவி கொண்டு மாற்ற முடியும் என நம்புகிறார்கள்.

வீனஸ் கிரகத்தின் உஷ்ண அளவு 470 டிகிரி சென்டிகிரேடு. நாம் சென்றால் நிமிஷமாய்த் தகனம்! அதன் சூழல் முழுவதும் கார்பன்டையாக்ஸைடு. அதன் காற்றழுத்தம் நம் ஊரைவிட 60 மடங்கு. மழை பெய்தால் கந்தக அமில மழை! இந்தச் சூழ்நிலையை மனிதனுக்கு ஏற்ப **Terra forming** முறையில் மாற்ற என்ன செய்யலாம் என்பதை கார்ல்

ஸகன் (Carl Sagan) சொல்கிறார்: முதன் முதலில் ஆயிரம் ராக்கெட் லோடு பாசி — சமுத்திரப் பாசி, காளான் இவைகளை அனுப்ப வேண்டும். அவை கார்பன்டையாக்ஸைடு சூழ்நிலையைப் பிராணவாயுவாக மாற்றும். சில நூறு வருஷங்கள் போதும். சூழ்நிலை சுத்தமாகிப் பிராணவாயு நிரம்பி விடும். கார்பன்டையாக்ஸைடு அளவு குறைவதால், வீனஸின் உஷ்ண அளவும் படிப்படியாகக் குறையும். காரணம், Green House Effect என்று ஒரு விளைவினால் தான் அந்தக் கிரகம் அத்தனை சூடாக உள்ளது. கார்பன்டையாக்ஸைடு குறைந்தால் இந்த விளைவின் பாதிப்புக் குறையும்.

அதன்பின் மழை பெய்யும். ஏரிகள், நதிகள்... அதன்பின் மனிதர்கள் டிக்கெட் வாங்கிராக்கெட் ஏறிக்குடிபுகுந்து, வீடுகட்டி, வீடியோ பார்க்கலாம். சின்ன விஷயங்களுக்காகச் சண்டை போடலாம்!



செவ்வாய்க்கிரகம் கொஞ்சம் கஷ்டம். இதில் உஷ்ணமில்லை. குளிர், சைபருக்கு நாற்பது டிகிரி கீழே! இதை அதிகரிக்கச் சந்திரனிலிருந்து கறுப்பு மண் எடுத்துச் செவ்வாய்க்கு அனுப்பி, அங்கே காற்றில் அதைத் தூற்ற வேண்டும். அது சூரிய உஷ்ணத்தைக் கிரகித்துக் கொண்டு கிரகத்தைச் சூடாக்கும். மேலும் கிரகத்தைச் சுற்றிலும் ராட்சசக் கண்ணாடிகளை அமைத்துச் சூரிய வெளிச்சத்தைப் பிரதிபலித்து, ஐஸ் மலைகளை உருக்கி...

அனைத்தும் பிரம்மாண்டமான திட்டங்கள்தாம். அனைத்தும் விஞ்ஞானப்படி சாத்தியமே. என்ன, கொஞ்சம் செலவாகும். அணுமின் சக்தி, பெரிய பெரிய இயந்திரங்கள், ஜெனட்டிக் இன்ஜினியரிங் போன்ற பற்பல கருவிகளைப் பயன்படுத்த வேண்டும்.

பூமியில் ஜனத்தொகை பெருகி மூச்சு முட்டும்போது இவ்வகைமற்றகிரகக்குடிபுகுதல்கள் தவிர்க்க முடியாதவை ஆகிவிடும் என்று சொல்கிறார்கள். 'எப்படியாவது பிழைப்பது' என்பது நம் சந்ததி குணம். இதற்குத் தேவை அடுத்த நூற்றாண்டின் துவக்கத்திலேயே ஏற்பட்டுவிடும் என்கிறார்கள். சென்ற நூறு வருடங்களில் நம் காற்றில் பற்பல விஷங்களைக் கலந்து விட்டோம். தரையடித் தண்ணீரின் அளவு குறைந்துவிட்டது. காடுகளை வெட்டிவிட்டோம். சகாரா போன்ற பாலைநிலங்கள், வருடத்துக்கு நாற்பது கிலோமீட்டர் முன்னேறிக் கொண்டு வருகின்றன. எல்லாம் நாம் செய்த வினைகள். இதற்குப் பரிகாரமாக, மற்ற கிரகங்களில் 'கைவைக்க' வேண்டி வரும்!

நம்மைத் தவிர வேறு உயிரினங்களே இல்லையா? லட்சோபலட்சம், கோடானுகோடி நட்சத்திரங்கள் பிரபஞ்சத்தில் இருக்கையில், அவற்றில் ஒன்றாவது நம் சூரியனைப் போல இருக்காதா? சுற்றிலும் கிரகங்கள் இருக்காதா? அந்தக்கிரகங்களில்ஒன்றில்சூழ்நிலை சரிப்பட்டு வந்து, உயிர் இனங்கள் உண்டாகிப் பரிணமிக்க வாய்ப்பு இருக்கத்தான் வேண்டும் என்று சில விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். இவ்வகையில் பத்துக் கோடியிலிருந்து ஆயிரம் கோடி வரை ஸ்தலங்கள் இருக்க வாய்ப்பு உள்ளதாக ஏபல் (Abell) போன்ற விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். இவர்களில் யாராவது நம்முடன் தொடர்பு கொள்ள முயற்சி செய்ய மாட்டார்களா? எப்படித் தொடர்பு கொள்வார்கள்? 1960 லிருந்து வானத்தில் செய்தி வரக் காத்திருக்கிறார்கள். அமெரிக்காவில் ஆஸ்மா (OZMA) என்கிறதிட்டத்தில் 21 சென்டிமீட்டர் அலை நீளத்தில் செய்திகள் வர வாய்ப்புள்ளது என்று தீர்மானித்து, ரேடியோ காதுகளைத் தீட்டிக் கொண்டு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை லெட்டர் வரவில்லை!

1971 — ஆம் ஆண்டு சைக்ளாப்ஸ் (Cyclops) என்று ஒரு திட்டம் போட்டார்கள். நூறு மீட்டர் அகல ரேடியோ கிண்ணிகளை ஐந்து கிலோமீட்டர் பிரதேசத்தில் பக்கத்தில் பக்கத்தில் வைத்து, ஆயிரம் ஒளி வருஷம் தூரத்தில் உள்ள அத்தனை நட்சத்திரங்களிலிருந்தும் வெளிப்படும் ரேடியோ அலைகளை வாங்கி, அதில் ஏதாவது உத்தமமான செய்தி இருக்கிறதா என்று அலசிப் பார்ப்பது! இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ஆயிரம் கோடி டாலர் செலவாகும் என்று கைவிடப்பட்டது.

சுஜாதா



''மாமியாரோட சண்டை போரடிச்சா செகண்ட் சேனலுக்குத் தாவிடுவேன்னு சொல்றியே... என்னடி, அது புரி யலே...!''

''நாத்தனாரோட சண்டை போடு வேன்னு சொல்றேன்.''

— எஸ். ஃபைசுதீன்.

1974 — இல் போர்ட்டோ ரிக்கோவிலிருந்து ஒரு ரேடியோ டெலஸ்கோப் மூலம் விண் வெளியில் ஒரு நட்சத்திரக் கும்பலை நோக்கி ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார்கள். சும்மா ஒரு முயற்சிதான். போய்ச் சேர 24,000 வருடங்கள் ஆகும். பதில் வருகிறதா, பார்க்க லாம்!

1972 — இல் விண்வெளி ராக்கெட் பயனியர் — 10 — இல் விண்வெளி உயிரினங் கள் யாராவது இருந்தால் அவர்களுக்கு ஒரு செய்தியை ஒரு தகட்டில் பொரித்து அனுப்பி யுள்ளார்கள். பயனியர் நம் சூரியக் குடும் பத்தை விட்டு விலகி, அடுத்த நட்சத்திரங் களுக்குச் செல்லவே 80,000 வருடங்கள் ஆகும்! 1981 — இல் அனுப்பிய இரண்டு வாயேஜர் விண்கலங்களிலும் ஓர் இசை, ஒளித்தட்டில் செய்தி அனுப்பியுள்ளார்கள். யாரை எப்போது போய்ச் சேரும்! நம்பிக்கை தான்.

மற்ற கிரகங்களில் உயிரினங்கள் இருந் தாலும் அவை மனித வடிவில் இருக்கும் சாத்தியக்கூறு இல்லை. ஜூபிட்டர் கிரகத் தில், 'பயனியர்' 'வாயேஜர்' விண்வெளிக் கப்பல்கள் அனுப்பிய செய்திப்படி, கிரகம் முழுவதும் திரவ, வாயு வடிவத்தில் உள்ளது. அத்தனையும் மீத்தேன், ஈத்தேன், அம்மோ னியா, பாஸ்ஃபின், தண்ணீர். ஒரே குளிர், பூஜ்யத்துக்கு 110 டிகிரி கீழ்.

இந்தச் சூழ்நிலையில்... ஸ்ரீதேவி, அமலா போன்ற பிரஜைகள் பிறக்கச் சாத்திய மில்லை. ஆனால் அம்மோனியாவை ஆதாரமாகக் கொண்டு, சில ஆர்கானிக் வகை கூட்டுப் பொருட்கள் அமையச் சாத்தி யம் இருக்கிறது என்று விஞ்ஞானிகள் கருது கிறார்கள். இவ்வகையில் அமைந்த உயிரி னங்கள் மிகமிகக் குளிரில் பிழைத்து இருக்க வேண்டும். அவ்வகை உயிரினங்கள் என்ன என்னவோ ஜெல்லி (Jelly) கலவை வடிவில் இருக்கலாமே தவிர, உங்களையும் என்னை யும் போல் இருக்காது. இவ்வாறு மற்ற சூழ் நிலையில் உயிரினம் வாழும் தகுதிகளையும் சாத்தியங்களையும் ஆராயும் சாஸ்திரத் துக்கு ஸ்பெக்குலேட்டிவ் பயோ கெமிஸ்ட்ரி (Speculative Bio-Chemistry) என்று பெயர்.


ஒரு காசு செலவில்லாமல் இப்படி இப்படி இருக்கலாம் என்று யூகிப்பது. ஒவ் வொரு கிரகத்தின் சூழ்நிலைக்கும் ஏற்ப உயிரினம் அமைந்தால் அது எவ்வடிவில் இருக்கும் என யோசிப்பது.

நம் உலகில் உயிர் வந்ததே ஒரு தற்செய லான விஷயம் என விஞ்ஞானம் கூறுகிறது. அதே தற்செயல் மற்ற கிரகங்களில் எப்படி நேரும்? நாம் தனியானவர்களா? இல்லை, மற்றொரு கிரகத்தில் மற்றொரு கல்கி இதழில், மற்றொரு சுஜாதா எழுதும் கட் டுரை வந்து கொண்டிருக்கிறதா?

(தொடரும்)

கவிதைக்குள் ஒரு கவிதை!


நீங்கள் ரசித்த ஒரு தமிழ்ப் பாடல் — அது சங்க காலக் கவிதையாக இருக்க லாம் அல்லது சமீபத்திய சினிமாப் பாட்டாகவும் இருக்கலாம். மரபுக் கவிதையோ, புதுக் கவிதையோ, பக்தி ரசமோ, காதல் சுவையோ எதுவானா லும் சரி. அதில் என்ன இலக்கிய நயத்தை அனுபவித்தீர்கள் என்பதைக் கல்கியில் அரைப் பக்கத்துக்கு மேற் படாத அளவில் எழுதி அனுப்புங்கள். பாடலின் ஓர் அடியைத் தேர்ந்தெடுத்து விமர்சித்தாலே போதுமானது.



பிரசுரமாகும் ரசனைக் கட்டுரைகள் ரூ. 50 பரிசு பெறும். உறை மீது "கவிதைக்குள் ஒரு கவிதை" என்று குறிப்பிடவும். பிரசுரமாகாதவற்றைத் திருப்பி அனுப்புதலோ, கடிதப் போக்கு வரத்தோ கிடையாது.

— ஆசிரியர்.

* சுப்புடு





* கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ் ஆரம்ப விழா

சங்கீத சங்கதிகள்

○○ அகாதமி வாசலில் சுப்புடுவைச் சந்திக்க நேர்ந்த போது, ''சந்தோஷம்'' என்றேன். ''என்னைப் பார்த்துச் சந்தோஷம் என்று சொல்கிறவர் நீங்க ஒருவர்தான்'' என்றார்! ஒருவிதத்தில் உண்மைதான்! சுப்புடு, ஒருவரைத் தாக்கி எழுதினால் கோபப்படுகிற வித்வான்கள், சுப்புடு ஒருவரைப் புகழ்ந்து எழுதி விட்டாலும் கோபப்படுகிறார்கள்! அதுதான் வேடிக்கை! 'அப்படி என்ன பிரமாதமாகப் பாடி விட்டான் இப்படிப் புகழ்வதற்கு' என்கிறார்கள்! ஆக மொத்தம் சுப்புடு சென்னை வந்து விட்டால் சபாக்களின் வாசல்களில் நின்று பேச விஷயம் நிறையவே கிடைத்து விடுகிறது!

○○ இந்த வருஷம் செம்மங்குடிக்கு ஏக டிமாண்ட் — பேசுவதற்கும்தான்! — அவர் கலந்து கொள்ளாத ஆரம்ப விழாவே இல்லையோ என்று எண்ணும்படி. கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ் விழாவில் அவர் பேசும் போது இடையில் நிர்வாகிகளைத் திரும்பிப் பார்த்து, ''என்ன பட்டம்? என்ன பேரு?'' என்று கேட்டுத் தெரிந்து கொண்டது ஒரு விஷயத்தை அடிக்கோடிட்டுக் காட்டியது. ஏகப்பட்ட விழாக்கள், ஏகப்பட்ட பட்டங்கள். எங்கே, என்ன பட்டம் என்பதே பலருக்குக் குழப்பமாகி விடுகிறது!

பி.கு.: கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ் வழங்கும் பட்டம்: ''இசைப் பேரொளி''

○○ எத்தனை விதமான பட்டங்களை யார் யார் பெற்றிருந்தாலும் லால்குடி, செம்மங்குடி, நாமகிரிப்பேட்டை என்ற ஊர்ப் பெயர்களுக்கு உள்ள மதிப்பு அவற்றுக்கு உண்டோ? ஒரு சமயம் ரயில் பயணம் செய்த போது டிக்கெட்டில் ''டாக்டர் சீனிவாச அய்யர்'' என்று போட்டிருந்ததாம். ''நீங்க செம்மங்குடி இல்லையோ? ஏன் வேறு ஒருவர் டிக்கெட்டில் பயணம் செய்கிறீர்கள்? கீழே இறங்குங்கள்!'' என்று ஆரம்பித்து விட்டாராம் டிக்கெட் பரிசோதகர்! அவரைச் சமாளித்து டாக்டர் பட்டமும் தமக்கு உண்டு என்று நம்ப வைப்பது பெரும் பாடாகி விட்டதாம், செம்மங்குடிக்கு!

○○ கோட்டு வாத்தியம் வாசித்த தமது குருநாதர் ஒரு கச்சேரிக்கு 150 ரூபாய்தான் வாங்கிக் கொள்வார்; அந்த 150 ரூபாய் செலவான பிறகுதான் இன்னொரு கச்சேரி ஒப்புக் கொள்வார்; சங்கீதத்தைக் காசாக்க மாட்டார், என்று கூறிய கையோடு, ''நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் ஒரு கல்யாணத்துக்கு வாசிக்க முப்பதாயிரம் கூட வாங்குகிறார். அந்த அளவுக்கு நாதஸ்வரத்தின் ஸ்டேட்டஸை உயர்த்தியிருக்கிறார்'' என்றார் செம்மங்குடி. கொஞ்சம் புரிந்து கொள்ள முடியாமல் திணறினாலும் காலம் ரொம்ப மாறி விட்டது என்பது மட்டும் தெளிவாகவே தெரிந்தது!

○○ கிருஷ்ணகான சபாவில் கமலாவுக்கு கலைஞர்களின் வரும்படியெல்லாம் வரியாகப் போய் விடுகிறதே என்ற கவலை வந்து விட்டது! அவர்களுக்கு வருமான வரி விலக்குத் தர வேண்டும் என்று பேசிய அவர், அதற்கு ஏதோ வயது வரம்பு விதித்து கொஞ்சம் விசித்திரமாகப் பட்டது. கலைஞர்கள், எழுத்தாளர்கள் நன்கு சம்பாதிக்கிற கால கட்டம் நீண்டதல்ல என்பதால் வரிச் சலுகை தரும் பழக்கம் சில மேனாடுகளில் உண்டு.

○○ அதிகரித்து வரும் வரிகளைப் பற்றி



* நாமகிரிப்பேட்டை



* டி. கே. பி.



* வழுவூரார்



* கே. வி. என்.



* என்ஃபீல்ட் விசுவநாதன்

யாரும் எங்கும் குறைப்பட்டுக் கொள்ளலாம். ஆட்சேபிப்பார் கிடையாது. ஆனால் சுருதி விழாவில் தம்மைச் சரியாக நடத்தவில்லை என்று வருத்தப்பட்டுக் கமலா கிருஷ்ணகான சபாவில் பேசியது தாளம் தப்பி அவர் ஆடியது போலிருந்தது!

○○ பல பட்டங்களைத் தாம் பெற்றிருந்த போதிலும் கிருஷ்ணகான சபாவின் பட்டம், 'கோபுரத்தின் மேல் வைக்கப்பட்ட கலசங்கள்' என்று கூறியதன் மூலம், இதற்கு மேல் வேறு ஒரு சபாவும் தம்மை அழைத்து மரியாதை பண்ண இடமில்லாமல் செய்து கொண்டு விட்டார் கமலா!

○○ "கிணற்றுக்குள் கடைசிப் படியில் அமர்ந்திருப்பவனைக் கை கொடுத்து மேலே தூக்கி விட வேண்டுமேயொழிய, அவனுக்குச் சமதையாக நாமும் கீழே இறங்கிப் போய் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தால் இருவருக்குமே தூய காற்று கிடைக்காது" என்றார் என்ஃபீல்ட் விசுவநாதன். "ரசிப்புத் திறமையை வளர்க்க முயற்சி மேற்கொள்ள வேண்டுமே தவிர, பெருவாரியான மக்களின் ரசனையைப் பெறுவதற்காகக் கலையின் தரத்தைக் குறைத்து விடக் கூடாது."

○○ "புதுமைகளைப் புகுத்த பயப்பட வேண்டாம், ஆனால் புதுமைகள் மரபின் அஸ்திவாரத்தை அசைப்பதாக இருந்து விடக் கூடாது" என்றார் நாட்டிய விழா அமைப்பாளர் சந்திரசேகர்.

○○ கமலாவின் குரு வழுவூராரைப் பலர் குறிப்பிட்டபோதிலும் அவரை மேடையில் காணாதது விசித்திரமாக இருந்தது. இத்தனைக்கும் "கமலாவுக்குச் சிறப்பு மலரென்ன; புத்தகமே எழுதி வெளியிடலாமே" என்று கூறியிருக்கிறார் அவர்!

○○ நேர்மாறாக கே. வி. என். தமது குருநாதர்களில் ஒருவரான வி. எஸ். கிருஷ்ணய்யரை மேடைக்குவரச்செய்துகௌரவித்தார். இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸில். மேல் நாட்டு பாதிப்பில் கே. வி. என். "அடிக்கடி அப்ளாஸ் எதற்கு? கச்சேரி ஆரம்பத்திலும் முடிவிலும் தந்தால் போதாதா?" என்று கேட்கிறார். நம் ரசிகர்கள் ஒப்ப மாட்டார்கள். அவர்களுக்கு உடனுக்குடன் மகிழ்ச்சி தெரிவித்தால்தான் திருப்தி. பாடகருக்கும் அது உற்சாகமளிப்பதை மறுக்க முடியுமோ?

○○ அகாடமியில் டி. கே. பி. "இது என் சொந்தக் கருத்து; சொந்த அபிப்பிராயம்" என்று திரும்பத் திரும்பக் கூறி காப்பிரைட் உரிமை கொண்டாடிச் சொன்ன விஷயத்தையே சந்தானமும் தலைமையுரையில் வலியுறுத்தி, டி. கே. பி. யின் ஏகபோக்கியத்தைத் தகர்த்து விட்டார்! அப்படி இருவருமாகத் தனித்தனியே யோசித்துச் சொன்ன ஒரே விஷயம்; "இளம் பாடகர்கள் ஒரே ராகத்தில் நிறைய கீர்த்தனைகளைப் பாடக் கற்றுக் கொள்ள வேண்டும்; அப்படிப் பாடி வந்தால் ராக லட்சணங்கள் எல்லாம் புரிந்து போகும்; அப்புறம் ராக ஆலாபனை செய்தால் அதில் ஜீவனிருக்கும். எனவே, அவசரப்பட வேண்டாம். சிங்கப்பூர், அமெரிக்கா பயண வாய்ப்பெல்லாம் தன்னால் நாளடைவில் வரும். வாய்ப்பைத் தேடி அலைய வேண்டாம்."

○○ "சில கச்சேரிகளைக் கேட்டு விட்டு வந்தால் 'யாருடன் சண்டை போடலாம்? யாரையாவது அடிக்கலாமா?' என்று தோன்றும்! அப்படி இன்றி ஒரு கச்சேரியைக் கேட்டு விட்டு வந்தால் மனம் நிறைந்து சந்தோஷமாக இருக்க வேண்டும். அதுதான் நல்ல கச்சேரி" என்று, லட்சணம் வகுத்தார் செம்மங்குடி. சராசரி ரசிகன் வேண்டுவதும் இதைத்தானே.

— திருபர்

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.



1990

• வண்ணப்படம்: தம்பையா.

	JANUARY	FEBRUARY	MARCH	APRIL	MAY	JUNE
SUN	7 14 21 28	4 11 18 25	4 11 18 25	1 8 15 22 29	6 13 20 27	3 10 17 24
MON	1 8 15 22 29	5 12 19 26	5 12 19 26	2 9 16 23 30	7 14 21 28	4 11 18 25
TUE	2 9 16 23 30	6 13 20 27	6 13 20 27	3 10 17 24	1 8 15 22 29	5 12 19 26
WED	3 10 17 24 31	7 14 21 28	7 14 21 28	4 11 18 25	2 9 16 23 30	6 13 20 27
THU	4 11 18 25	1 8 15 22	1 8 15 22 29	5 12 19 26	3 10 17 24 31	7 14 21 28
FRI	5 12 19 26	2 9 16 23	2 9 16 23 30	6 13 20 27	4 11 18 25	1 8 15 22 29
SAT	6 13 20 27	3 10 17 24	3 10 17 24 31	7 14 21 28	5 12 19 26	2 9 16 23 30

	JULY	AUGUST	SEPTEMBER	OCTOBER	NOVEMBER	DECEMBER
SUN	1 8 15 22 29	5 12 19 26	30 2 9 16 23	7 14 21 28	4 11 18 25	30 2 9 16 23
MON	2 9 16 23 30	6 13 20 27	3 10 17 24	1 8 15 22 29	5 12 19 26	31 3 10 17 24
TUE	3 10 17 24 31	7 14 21 28	4 11 18 25	2 9 16 23 30	6 13 20 27	4 11 18 25
WED	4 11 18 25	1 8 15 22 29	5 12 19 26	3 10 17 24 31	7 14 21 28	5 12 19 26
THU	5 12 19 26	2 9 16 23 30	6 13 20 27	4 11 18 25	1 8 15 22 29	6 13 20 27
FRI	6 13 20 27	3 10 17 24 31	7 14 21 28	5 12 19 26	2 9 16 23 30	7 14 21 28
SAT	7 14 21 28	4 11 18 25	1 8 15 22 29	6 13 20 27	3 10 17 24	1 8 15 22 29

REGISTERED NO. M. 4392

Registered as Newspaper in Srilanka



HTA 7023